LEARN TO LIVE TO LEARN

# செவ்வியல்

## 2015

அ A ஏ








### ஆக்கமும் தொகுப்பும்:
### தரம் 10A

### நு/அக்கரபத்தனை த.ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வியல்

மமா/நு/ அக்கரபத்தனை தமிழ் மகா வித்தியாலயம்.

அக்கரபத்தனை.

மின்னஞ்சல் : Agrapatnatmv@gmail.com

பாடசாலை தொலைபேசி இலக்கம் : 051-2230424

ஆக்கம் : தரம் 10A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழ் அலர்தலில் . . .


| | | |
|---|---|---|
| நூல் | : | செவ்வியல் |
| பதிப்பு | : | டிசெம்பர் 2015 |
| வெளியீடு | : | தரம் $10^{A}$, நு/அக்கரபத்தனை த ம வி |
| ஆக்கம் | : | மாணவர்கள், ஆசிரியர்கள். |
| பொறுப்பாசிரியர் | : | திரு. செ. டிக்னேஸ்வரன் (ஆசிரியர்) |
| கணினி வடிவமைப்பு | : | ச. கிருஷா - மெடலின் கிரியேஷன்ஸ் |
| Title | : | Seviyal |
| Edition | : | December 2015 |
| Publication | : | Grade 10A, CP/N/ Agrapatana T M V |
| Formation | : | Students & Teachers |
| In Charge | : | Mr. S. Dickneshwaran (Teacher) |
| Graphic designing | : | S. Chrisha - Madeline Creation |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தாய் வாழ்த்து

காதொளிரும் குண்டலத்தாள்
கனிமொழியாள் வாழ்க!
கைகுவளை யாபதிகொள்
கன்னிகையாள் வாழ்க!

மேதகு மென் மார்பிடைச் சிந்
தாமணியாள் வாழ்க!
மின்னுமணி மேகலை சூழ்
மெல்லிடையாள் வாழ்க!

சீதமலர் பாதமொளிர்
சிலம்புடையாள் வாழ்க!
சேர சோழ பாண்டிய தஞ்
செல்வ மகள் வாழ்க!

நீதியுறுஞ் செங்கோலாய்
தூயகுறள் தாங்கும்
நிகரறியார் செந்தமிழ்த் தாய்
நீடூழி வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி

வாழிய வாழியவே!

வானமளந்த தனைத்தும் அளந்திடும்

வன் மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி

இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி

என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்

துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று

சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அளந்து அனைத்தும் அளந்திடும்
வளர்மொழி வாழியவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

வாழ்க வாழ்க வாழ்கவே என்றும் வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே என்றும் வாழ்கவே

வாழ்வதற்கு கற்பதென்றால் வாழ்க வாழ்கவே
கல்வி கற்பதற்கு வாழ்வதென்றால் வாழ்க வாழ்கவே

வளர்த்து வைக்கும் அதிபரும் வாழ்க வாழ்கவே
அவர் வழி தொடரும் ஆசிரியர் வாழ்க வாழ்கவே

வாழ்க வாழ்க வாழ்கவே என்றும் வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே என்றும் வாழ்கவே

ஆதரவு வழங்கி வரும் பெற்றோர் வாழ்க வாழ்க
அறிவுடனே வளர்த்தெடுக்கும் மாணவரும் வாழ்க


வாழ்க வாழ்க வாழ்கவே என்றும் வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே என்றும் வாழ்கவே

வாழ்த்திப் பாடுவோம் நாங்கள்
வாழ்த்திப் பாடுவோம் அக்கரபத்தனை
பள்ளிதனை வாழ்த்தி பாடுவோம்

வாழ்க வாழ்க வாழ்கவே என்றும் வாழ்கவே
வானம் எல்லையில்லையே வளர்க வளர்கவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை முதல்வரிடமிருந்து........




பாடசாலை என்பது வெறுமனே பரீட்சை பெறுபேறுகளை மட்டும் பெற்றுக்கொடுத்து தொழிற்துறைக்கு நபர்களை அனுப்பும் ஒரு நிறுவனமாக அல்லாது தான் சார்ந்து நிற்கும் சமூகத்தின் தனித்துவத்தினூடாக கல்வி புரட்சியின் மூலம் அச்சமூகத்திற்கு சிறந்த வாழ்வினை பெற்றுக் கொடுக்கும் ஓரமைப்பாக திகழ வேண்டும்.

சமூகம் பாடசாலைக்கு என்ன செய்தது? என்பதனை விட பாடசாலை சமூகத்திற்கு என்ன செய்தது? என்பதே முக்கியமானதாகும்.

அந்த வகையில் எமது பாடசாலையில் கல்வி பயிலும் தரம் 10 முதலாம் பிரிவு மாணவர்களின் "செவ்வியல்" வெளியீடானது வளர்ந்து வந்த சிறிதொரு காலப்பகுதியில் கிடைத்த அனுபவங்கள், பெற்றுக்கொண்ட ஆற்றல்கள், எழுத்தை வளர்த்துக்கொள்ள உதவிய சந்தர்ப்பங்கள் மற்றும் மாணவர்களின் தன்னம்பிக்கையையும் முயற்சியையும் முன்னேற்றத்தினையும் காட்டுவதாக இவ்வியல் அமையப்பெற்றுள்ளது.

மாணவர்களின் கருத்தினை எழுத்தில் சொல்லுமாற்றல் வளர இவ்வியல் செழுமையான சந்தர்ப்பத்தினை வழங்கியுள்ளமை வரவேற்கத்தக்கது.


எனினும் இவ் உதயம் இத்தோடு அஸ்தமித்து விடாமல் இனிவருங்காலங்களிலும் பல படைப்புக்களையும் படைப்பாளர்களையும் உருவாக்க இச் செவ்வியல் வெளியீடு அடிதளமிட்டுள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்வதோடு இவ்வெளியீட்டிற்கு உறுதுணையாக இருந்த வகுப்பாசிரியர் மற்றும் மாணவர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

**அதிபர்**
**அ. ஹரிச்சந்திரன்**(SLPS I)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கோட்டக்கல்வி பணிப்பாளரின் ஆசிச் செய்தி"



நு/அக்கரபத்தனை தமிழ் மகா வித்தியாலயத்தின் தரம் 10A மாணவர்களினால் வெளியிடப்படும் "செவ்வியல்" சஞ்சிகைக்கு வாழ்த்து கூறுவதில் பெறுமகிழ்வடைகின்றேன்.

இவ் வெளியீடு மிக உயரிய மட்டத்தில் இனிதே நடாத்துவதற்கு எண்ணிய அதிபர், வகுப்பாசிரியர் மற்றும் மாணவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


கல்வியைப் போலவே மற்றைய இணைப்பாடவிதமான செயற்பாடுகளிலும் முன்னேறி பல்வேறு விதமான வெற்றிகளையும் இப் பாடசாலைப் பெற வேண்டும்.

இப் பாடசாலையின் அதிபர் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள் எடுத்துக் கொண்ட இம் முயற்சி அனைத்து வழிகளிலும் வெற்றிப் பெற வேண்டுமென வாழ்த்துவதோடு எதிர் காலத்திலும் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

திரு. வி. ஜெயராமன்,
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
ஹோல்புறூக் கோட்டம் iii,
நுவரெலியா கல்வி வலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துக்கள்!!!

அக்கரபத்தனை தமிழ் மகா வித்தியாலய மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஆக்கங்களைத் தாங்கி "செவ்வியல்" எனும் சஞ்சிகை வெளிவருவதை அறிந்து மனம் மகிழ்கின்றேன். அச் சஞ்சிகை பல்வேறு பரிமாணங்களுடன் மென் மேலும் வளர வாழ்த்துகின்றேன்.

"சமநிலை" ஆளுமை மிக்க மாணவர்களை உருவாக்குவதில் இவ்வாறான ஆக்கத்திறன் செயற்பாடுகள் பாடசாலைக்கு பயன்மிக்கதாக இருக்கும். வகுப்பறைச் செயற்பாடுகளில் மட்டும் மாணவர்களைப் பிணைத்து வைப்பது பொருத்தமானதல்ல. நாளைய சவால்களை எதிர்கொள்ளக்கூடிய மனோ வலிமையை மாணவர்களிடம் ஏற்படுத்துவதில் பாடசாலை பிரதானப் பாத்திரத்தை ஏற்க முடியும்.

பிள்ளையிடமான ஆக்க ஊக்கங்கள் இன்று கல்வியினால் பேணப்படவில்லை. இவ்வாறே சென்றால் மனித உறவுகள், இயற்கை மேம்பாடு முதலிய வாழ்வதற்கு இன்றியமையாத நலக்கூறுகள் சிதைவடைந்து போகும் என டாக்டர். ராதாகிருஸ்ணன் கூறியிருப்பது கவனத்திற்குரியதே.

மாணவர்களிடம் சுயமாக சிந்திக்கும் பண்புகளைத் தூண்டல், அறிவு பூர்வமாகவும் ஆக்க பூர்வமாகவும் சிந்திக்கும் பண்புகளைத் தூண்டல், அத்தோடு அவ்வாறே செயற்படச் செய்தல் என்பன ஆசிரியரது தலையாய கடமையாகும்.

மாணவர்களது உள்ளார்ந்த திறன்களை இனங்காண உதவுதல், அத்திறன்களை வெளிக்கொணர உதவுதல், அதனை வளர்த்தெடுப்பதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கி கொடுத்தல் என்பன மாணவர்களது ஆக்கத்திறன்களை வளர்ப்பதற்கான வாய்ப்புகளை நல்கும்.

இன்றைய சூழலில் மாணவர்களிடம் காணப்படக்கூடிய பல்வேறுத் திறன்களை அடையாளம் காண்பதற்கான பொருத்தமான களமாக பாடசாலைகளே திகழ முடியும். ஆசிரியர்களே அதற்கான பொருத்தமான வழிக்காட்டிகளாக செயற்பட முடியும்.

"சுயசிந்தனை, வினைத்திறன் மிக்க கற்றல், விளங்கிக் கற்றல், சிதறலற்ற புலக்காட்சி, பொருத்தமான எண்ணக்கருவாக்கம், பிறழ்வற்ற நடத்தை, பொருத்தமான ஆக்கப்பூர்வமான துலங்கல்" போன்ற விரும்பத்தக்க நடத்தைகள் மாணவர்களின் ஆக்கத்திறன் வெளிப்பாட்டிற்கும் விருத்திக்கும் வாய்ப்பாக அமையும்.

வகுப்பறைச் சூழல் ஆக்கத்திறன் சார் செயற்பாடுகளையும் வேலைத்திட்டங்களையும் மேற்கொள்வதற்கான கள நிலையைக் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது. கற்றல் – கற்பித்தலானது ஆக்கத்திறன் விருத்திக்கான உத்வேகத்தை அளிப்பதாக அமைதல் நன்று. பாடசாலைச் சூழலும் ஆக்கத்திறன் விருத்திக்கான ஆதரவை அளிப்பதாக அமைதல் வேண்டும்.


"செவ்வியல்" – ஒரு புதிய நாகரிகத்தை
கட்டியெழுப்புவதில் பெரும் பணியாற்றும்
என்ற நம்பிக்கையுடனும்
வாழ்த்துக்களுடனும்!!!

வ. செல்வராஜா
உப – பீடாதிபதி (கல்வியும் தர மேன்மையும்)
ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரி.
பத்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சிகைக்குழு பொறுப்பாசிரியரின்
# நன்றிகள்.... வாழ்த்துக்கள்....



மமா/நு/அக்கரபத்தனை தமிழ் மகா வித்தியாலயத்தின் செவ்வியல் சஞ்சிகையானது புத்தக வடிவமாக 2015ல் வெளிவருவதையிட்டு மகிழ்கின்றேன். எமது பாடசாலை எல்லா வளங்களுடனும் விருத்தி பெற்று சிறந்த விளைத்திறனை வெளிபடுத்தும் நிறுவனமாக அதன் வரலாற்று பெறுமைகளுடன் இன்னும் பல்லாண்டுகள் நிலைத்திருக்க எனது பிரார்த்தனைகள்.

இச் சஞ்சிகை எமது பாடசாலையின் தரம் 10 முதலாம் பிரிவு (2015) மாணவர்களின் குறுகிய கால அயராத முயற்சியினால் முதலாவது வருட மலராக வெளியிடப்படுவது பெருமைக்குரிய ஒன்றாகும். இதில் தரம் 10 முதலாம் பிரிவு மாணவர்களின் ஆக்கங்களோடு, ஏனைய வகுப்பு மாணவ நண்பர்களின் ஆக்கங்களும், பாடசாலை ஆசிரியர்களின் ஆக்கங்களும் சேர்க்கப்பட்டுள்ளமை ஒரு தனி சிறப்பாக மெருகூட்டி நிற்கிறது.

மிகக்குறுகிய காலத்திற்குள் சஞ்சிகையின் அவசியத்தை மதித்து சஞ்சிகை வெளியீட்டுக்கான காத்திரமான ஆலோசனை, ஊக்குவிப்பு உதவிகளை வழங்கிய பாடசாலையின் அதிபர் அ.ஹரிச்சந்திரன் அவர்களுக்கும் நூல் வெளிவர எல்லா வழிகளிலும் உதவிய பாடசாலையின் சகல ஆசிரியர்களுக்கும் எனது முதற்கண் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

மலர் வெளிவருவதில் மிகவும் சுறுசுறுப்புடனும், ஆசிர்வாதத்துடனும், வினைத்திறனுடனும் செயற்பட்ட தரம் 10 முதலாம் பிரிவின் (2015) சகல மாணவர்களுக்கும் சஞ்சிகை வெளியீட்டுக்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு செய்த சகலருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளும், பாராட்டுக்களும்........

**செல்வசாமி டிக்னேஸ்வரன்**
**ஆசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் எண்ணத்திலிருந்து....



"அன்னையாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

— மகாகவி பாரதியார்

எம் சமூகத்தின் விடிவிற்கும் பாடசாலைகளின் அர்ப்பணிப்பு அளப்பரியது. 21ம் நூற்றாண்டில் நாமும் எம்மை சமூகங்களோர் வீறுநடை போட்டு பயணிக்கின்றோம் என்றால் அது பாடசாலை ஆற்றி வரும் சமூகப் பணியே காரணம். கடந்த 40 வருடங்களாக எம் சமூகம் அடைந்துள்ள மாற்றம் அளப்பரியது. அரசியல், பொருளாதாரம், கல்வி என அணைத்துத் துறைகளிலும் எழுச்சிப் பெற்றிருக்கிறோம். கல்வியல் வளர்ச்சி அடைகின்ற உயர் சமூகத்துக்குரிய அந்தஸ்த்தினைப் பெறுவதற்கு மலையகத்தைக்களமாகக் கொண்டு இயங்கி வரும் பாடசாலைகளும் அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர் பெருந்தகைகளினதும் உழைப்பும் போற்றுதற்குரியதே.

அந்த வகையில் எம் சமூக இயக்கத்தில் நு/அக்கரப்பத்தனை தமிழ் மகா வித்தியாலயம் அர்ப்பணிப்புடன் எவ்வித சலனமும் இன்றி சாதனைகளை நிலை நாட்டிக் கொண்டிருக்கிறது. எமது பாடசாலையின் வரலாற்றினை மாற்றியமைக்கும் நோக்குடன் இந்நூல் வெளிவருவதில் பெருமையடைகின்றேன். "செவ்வியல்" என்ற இம் மலரில் பாடசாலை வரலாறு, பாடசாலை வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்த பெருந்தகைகள் அத்தோடு ஆசிரிய, மாணவர்களின் ஆளமைகளை வெளிக் கொணரும் ஆக்கங்கள் என பல்வேறு விடயங்களையும் இச்செவ்வியல் சுமந்து வருகின்றது.

வேதனைகள், சுமைகள் உள்ளத்தை அழுத்தும் போது வெளிப்படுத்துகை அவசியம் பெறுகின்றது. இவ்வாறான ஆறுதல் நோக்கிய வெளிப்படுத்தலின் நகர்வு வடிவங்களில் ஆனதே இலக்கியம். இங்கு ஆசிரியர்கள், மாணவர்கள், அதிபர் ஆகியோர்களின் ஆக்கங்களை கண்டு மகிழ்கின்றேன்.

எனவே தான்......

புத்தாக்கப்படைப்பு என்னும் உணர்ச்சி இயற்கையிலேயே ஒவ்வொருவர் உள்ளத்திலும் உறைந்திருக்கின்றது. அது அழகின் ஆற்றலாக கவிதை, கட்டுரை, சிறுகதை என பல தரப்பட்ட படைப்புக்களாக பல்வேறு உருவில் வெளிப்படுத்தலாம். ஆசிரியர், மாணவர்களின் உள்ளத்தில் உறைந்து கிடக்கும் புத்தாக்க உணர்வுகளுக்கு உரமூட்டுகின்ற காத்திரம் மிக்கதோர் செயற்பாட்டை "செவ்வியல்" ஆற்றுகிறது என்றே நான் நம்புகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி) தலைவரின் எண்ணத்திலிருந்து....

"செவ்வியல்" என்ற நூல் வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்ற அதே வேளை இந் நூலினை வெளியிடுவதற்கு பாடசாலையில் அனுமதித்தந்த அதிபர் திரு A.ஹரிச்சந்திரன் ஐயா அவர்களுக்கும் நூலின் வெற்றிகரமான வெளியீட்டிற்கு காத்திரமான ஆலோசனைகளை வழங்கியதோடு எம்மை வழிநடாத்திய வகுப்பாசிரியர் திரு. செ. டிக்னேஸ்வரன் அவர்களுக்கும் நூலினை வெளியிடுவதற்கு சகல வழிகளிலும் உதவிப் புரிந்த பாடசாலையின் சக ஆசிரியர்கள், இதழாசிரியர், நூலாக்க குழுவினர், ஆக்கங்களை வழங்கிய மாணவர்கள், நிதி உதவி வழங்கிய பெற்றோர்கள், நலன்விரும்பிகள், வர்த்தக பிரமுகர்கள் அனைவரையும் நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

மாணவர்களது உள வெளிப்பாடுகளை ஆக்கங்களாக வெளிக் கொணர்வதற்கு இவை நல்ல களமாக அமைய முடியும். "செவ்வியல்" வெளிவருவதற்கு உழைத்த அனைவரையும் மகிழ்வோடு பாராட்டுகின்றேன். "செவ்வியல்" நல்லதோர் தொடக்கம் தொடர்ந்து வருடந்தோறும் வெளிவர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

பண்பும் அமைதியும் பரிவும் பூண்ட நு/அக்கரபத்தனை தமிழ் மகா வித்தியாலயத்தில் தரம் 10 முதலாம் பிரிவு மாணவர்களினால் அளித்திடும் செந்தமிழ் நலமும் சிந்தனை வளமும் பெருக்கும் "செவ்வியல்" என்கின்ற இந்நூல் மலராய் மலர்ந்து காயாய் பெருகி கனியாய் கனிந்திட வாழ்த்தி மகிழ்கின்றேன்.

நவீனமான பல சிந்தனைகளோடு மாற்றம் மிகு அம்சங்களோடும் இவ்வருடத்தில் "செவ்வியல்" சஞ்சிகை சிறப்பாக மலர நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

R யதுஷா,
தலைவர்,
நு/அக்கரபத்தனை த. ம. வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஞ்சிகைக்குழு செயலாளரின்

## மனதிலிருந்து....



பூகோள அறிவு வேகமாக பரவுகின்ற திறமைமிக்க ஒரு யுகத்தின் பல சவால்களுக்கு மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதற்கேற்றவாறு எமது அறிவையும் காலத்துக்குக்காலம் மாற்றியமைத்துக்கொள்வது சிறந்ததாகும். அந்த விதத்தில் தமது சுய ஆற்றலையும், ஆக்கத்திறமைகளையும் வெளிக்காட்ட முயன்றவர்கள் சிலர், இவ்வையகத்துள் உள்ளனர். அந்த வகையில் நு/அக்கரபத்தனை தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தரம் 10 முதலாம் பிரிவு மாணவர்களாகிய எங்கள் முயற்சியால் வெளிவந்துள்ள "செவ்வியல்" எனும் இதழ் வெளியீடு குறிப்பிடத்தக்கதாகும்.

எமது நண்பர்களின் சுய ஆக்கங்களையும், திறனையும் இவ்விதழின் வாயிலாக வெளிக்கொண்டு வர முடிந்துள்ளது. இவ்விதழ் வெளியீடு வெளிவருவதற்கான முக்கிய காரணமாக எங்களது தேடல் முயற்சியும, பாடசாலை அதிபரின் ஊக்குவிப்பும், வகுப்பாசிரியரின் வழிகாட்டலும் வழிகோலியுள்ளது.

அத்தோடு மாணவர்களாகிய எங்களின் இத்திறமை மென்மேலும் வளர இறைவனை பிரார்த்திப்பதோடு, இவ் இதழ் வெளியீட்டிற்கு உதவி நல்கிய அனைவருக்கும் மற்றும் இந்நூலை உங்கள் கைகளில் கிடைக்க செய்வதில் பங்களிப்புச்செய்த பதிப்பாசிரியர் குழு அங்கத்தவர்கள் உட்பட அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்.

ந. நிதர்சன் (செயலாளர்)
தரம் 10 முதலாம் பிரிவு
மாணவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியரின்
## எண்ணத்திலிருந்து.................



எழில் மிகு இலங்கை திருநாட்டில் மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள அக்கரபத்தனை தமிழ் மகா வித்தியாலயத்தில் 2015 ஆம் ஆண்டு மலரும் செவ்வியல் இதழின் இதழாசிரியராக இருப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பாடசாலைக் கல்வி என்பது வெறுமனே கல்விப்பாதை மட்டுமல்ல. பல அனுபவங்களை கற்றுத்தரும் பயன்மிகு பயணப்பாதையாகவே காணப்படுகின்றது. அதற்கு இவ்வியல் வெளியீடானது சிறந்த களமாக காணப்படுகின்றது.

இவ்விதழ் எமது வகுப்பு மாணவர்களின் சுய ஆற்றல், சுதந்திரமான கற்பனைகள் மற்றும் தர்க்கரீதியான அறிவுசார் தகவல்களின் பிறப்புக் களமாகவே இவ்விதழ் வெளியீடு உள்ளது. இவ்விதழில் அடங்கியுள்ள அனைத்து தகவல்களும் அனைவருக்கும் பயன் மிகுந்தவையாக அமையும் என நம்புகின்றேன்.

செவ்வியழ்களின் வரிசையில் இவ்விதழானது சிறப்பாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அத்துடன் இவ்விதழானது எமது பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்களின் படைப்புக்களை முற்று முழுதாக அலங்கரிப்பதனையும் எதிர் காலத்தில் இன்னும் பல புதிய படைப்புக்களையும் தாங்கிவரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இவ்விதழ் சிறப்பாக வெளிவர உதவிய உள்ளங்களான மதிப்பிற்குரிய பாடசாலையின் முதல்வர் அ.ஹரிச்சந்திரன் ஐயா அவர்களுக்கும், ஒரு மாணவன் என்பவன் வெறும் புத்தக பூச்சிகளாக மட்டுமில்லாமல் அனைத்து திறமைகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என எமக்கு பல நல் வழிகளை வகுத்து இவ்விதழ் வெளியீட்டிற்காக உந்து சக்தியாக அமைந்து பல உதவிகளையும் சிந்தனைகளையும் வழங்கிய எமது வகுப்பாசிரியர் திரு. எஸ் டிக்னேஸ்வரன் அவர்களுக்கும் ஆசிரியக் குழாத்தினருக்கும் மற்றும் மாணவர்களுக்கும் இச் செவ்வியல் இதழ் சிறப்பாக வெளிவர துணைபுரிந்த அனைவருக்கும் என் உளம் கனிந்த நன்றிகளைக் கூறிக் கொள்கிறேன்

— பேனா முனையில் விண்ணைத் தொடுவோம்....! —

S. இந்துஜா
இதழாசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மமா/நு/அக்கரப்பத்தனை தமிழ் மகா வித்தியாலயம்.
## அக்கரப்பத்தனை.

| | |
|---|---|
| கோட்டம் : | ஹோல்புறுக் (111) |
| வலயம் : | நுவரெலியா |
| மாவட்ட செயலாளர் பிரிவு : | நுவரெலியா |
| உள்ளூராட்சி சபை : | நுவரெலியா பிரதேச சபை |
| தேர்தல் தொகுதி : | நுவரெலியா மஸ்கெலியா (இல-06) |
| மாகாணம் : | மத்திய மாகாணம் |
| கிராம அலுவலகர் பிரிவு : | இல 476து கிளாஸ்கோ |
| அஞ்சல் இலக்கம் : | 25010 |
| பாடசாலை அடையாள இலக்கம் : | 0610172 |
| தொகை மதிப்பீட்டு இலக்கம் : | 05172 |
| பாடசாலை வகை : | 1AB |
| மின்னஞ்சல் : | Agrapatnatmv@gmail.com |
| பாடசாலை தொலைபேசி இலக்கம் : | 051-2230424 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மமா/நு/ அக்கரபத்தனை தமிழ் மகா வித்தியாலயம். அக்கரபத்தனை.

## தூர நோக்கு - Vision

"சவால்களுக்கு ஈடுகொடுக்கும் வகையிலான
அறிவு மிக்க சமுதாயத்தை உருவாக்குவோம்"

## பணிக்கூற்று - Mision

" தேர்ச்சியையும் தரத்தையும்
அடிப்படையாகக் கொண்ட
ஆளுமை மிக்க
மாணவ சமூகத்தை
உருவாக்குவதை
உறுதிசெய்வோம்."

## எமது மகுட வாசகம் - Our Motto

"கல்விக்காக வாழ்க்கை
வாழ்க்கைக்காக கல்வி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று நிகழ்வும் நிதர்சனமும்

இலங்கை சோஷலிச குடியரசின் மத்திய மாகாணத்தில் நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவில் நுவரெலியா பிரதேச சபை எல்லைப்பிரிவில் நுவரெலியா கல்வி வலயத்தின் ஹோல்புறூக் கோட்டம் III இல் அமையப்பெற்றிருப்பது நு/அக்கரபத்தனை தமிழ் மகா வித்தியாலயமாகும்.

1984 – 12 – 27ம் திகதியின் பிற்பட்ட காலத்தில் தனியான பாடசாலைத்தொகுதி ஒன்றில் இயங்கி வந்தாலும் இக்காலப்பகுதிக்கு முன்னர் அக்கரபத்தனை சிங்கள வித்தியாலயத்தில் மாலை நேரத்தில் இயங்கும் ஒரு பாடசாலையாகவே இருந்துவந்துள்ளது.

மலையகத்தின் கல்வித்துறையில் பாரிய பங்களிப்புடன் கூடிய வளர்ச்சியை ஏற்படுத்திய தலைவர் அமைச்சர் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களினால் இரண்டு ஏக்கர் காணியுடன் கூடிய 100 X 25 கட்டிடம் அமைக்கப்பெற்று அக்கரபத்தனை தமிழ் மகா வித்தியாலயம் தனித்தியங்கும் தரத்தை பெற்றமை வரலாற்றில் உன்னத உயர்வாகும்.

1984ம் ஆண்டிற்கு பின்னர் பல்வேறு துறை ரீதியான வளர்ச்சியை கண்ட இப்பாடசாலை தர மற்றும் வள ரீதியிலான துறைசார்ந்த வளர்ச்சியை அண்மைக்காலத்தில் துரிதமாக பெற்றிருப்து அதிபர் திரு. அ. ஹரிச்சந்திரன் அவர்களின் பங்களிப்புடனும் முயற்சியுடனும் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதேசத்தில் ஒரு 1AB பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டு உயர்தர கணித, விஞ்ஞான பிரிவுகளை கற்பிக்கக்கூடிய தொழிநுட்ப விஞ்ஞான ஆய்வுக்கூடம் கட்டப்பட்டிருத்தல், 1000 பாடசாலை அபிவிருத்தி திட்டத்தில் உள்வாங்கப்பட்ட உணர்வுப்பூர்வமான செயற்பாடு மற்றும் நீர்சுகாதார மேம்பாட்டு வளர்ச்சி என்பவற்றுடன் கல்விப்பெறுபேறு ரீதியில் பாரிய வளர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதை குறிப்பிடலாம்.

பாடசாலைக்கு மேலும் 100 பேர்ச் காணியை பெற்றிருப்பதையும் குறிப்பிடவேண்டும். அனைத்தையும்விட பாடசாலை மற்றும் கல்விதர வளர்ச்சிக்காக முழுமையாக பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் தந்துக்கொண்டிருக்கும் சமூக பொது நலன் நிறுவனமான வேல்ட் விஷன் லங்கா நுவரெலியா பி.அ.கி யின் பங்களிப்பு பெறுமதி மிக்கதாகும்.

பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், நலன் விரும்பிகள்,, பழைய மாணவர்கள் என பல்வேறு கட்டமைப்பினரின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் பாடசாலை வளர்ச்சியின் பால் சேர்க்கும் பங்காளராவர். வளரும் வளமும் வழங்கும் வலிமைமிகு பங்கும் பாடசாலையை பாரெங்கும் புகழ் பரப்பும் புத்தெழுச்சி பெற்றுயரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலையின் அதிபர்கள்

- பரஞ்சோதி - (1982 - 1985.01.16)
- என். முத்துக்குமார் - (185.01.31 - 1985.12.10)
- வி. ஆனந்தன் (1985.12.11 - 1986.05.31)
- சி. மகாலிங்கம் - (1986.06.01 - 1992.06.19)
- எஸ். ஜோன்சன் - (1992. - 1994.01.03)
- ஆர். நடராஜா - (1994.01.04 - 2003.03.05)
- டி. வடிவேல் - (2003.03.06 - 2008.11.01)
- அ. ஹரிச்சந்திரன் - ( 2008.11.01 முதல் இன்று வரை)



பரஞ்சோதி
(1982 - 1985.01.16)



என். முத்துக்குமார்
(1985.01.31 - 1985.12.10)



வி. ஆனந்தன்
(1985.12.11 - 1986.05.31)



சி. மகாலிங்கம
(1986.06.01 - 1992.06.19)



எஸ். ஜோன்சன்
(1992. - 1994.01.03)



ஆர். நடராஜா
(1994.01.04 - 2003.03.05)



டி. வடிவேல்
(2003.03.06 - 2008.11.01)



அ. ஹரிச்சந்திரன்
( 2008.11.01 முதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுப் படிக்கட்டுகள்



01. இன்றைய சிறுவர்களே : நாளைய தலைவர்கள் 01
02. பயணத்தினூடாக............. 03
03. விடை தேடும் வினா? 05
04. இத்தாலிய ஓவியர் - லியானாடோ டாவின்சி 06
05. விநாயக வழிப்பாட்டின் பயன்கள் 07
06. Famous Vegetarian Mahatma Gandhi 08
07. ஆபத்தும் எச்சரிக்கையும் 09
08. பொறுமை 12
09. The Guest 13
10. தவிக்கும் நிலா / The Charecteristics of 21st Century Educator 14
11. True Love / தலைசிறந்த தந்தைகள 15
13. புனித யோசப் வாஸ் 16
14. What is Life? / E - Interesting English 17
15. அழகியற் கல்வியில் நடனத்தின் பங்கு 18
16. தமிழ் இலக்கியங்களில் பெண்களின் பங்களிப்பு 20
17. ஐக்கிய அமெரிக்கா 21
18. கங்காருவின் சிறப்பு / கறுப்புப் பெட்டி 22
19. விளையாட்டுக்கள் 23
20. English Jokes / Road Safety 24
21. மயில் / ஆசான்கள் 25
22. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சூழல் திட்டம் / கற்பாறைகளுக்கிடையில் வசிக்கும் 'இலங்கை கற்பாறைத் தவளைகள்' 26
23. முட்டுவலி ஏற்படுவதற்கான காரணங்கள் 27
24. தொலைபேசியை முதலில் கண்டுப்பிடித்தவர் அலெக்ஸாண்டா கிரஹம் பெல் அல்லர்? 28
25. இலங்கையின் சைவ ஆலயங்கள் 29
26. தமிழ் மொழியின் சிறப்பு 30
27. நதிகளின் நீளங்கள் 31
28. யாப்பகூவ! / இலங்கையின் பொதுவான கல்வித் தகவல்கள் 32
29. "யார் இந்த ஒஸாமா பின்லேடன்?" 33
30. நூலகங்களின் தோற்றமும் அவற்றின் அவசியமும்... ∴ நாட்டார் பாடல்கள் உயிர் பிரவாகத்தின் மூச்சுகள் 34
31. தியாக வாழ்வின் முன்மாதிரிகை. 35
32. விற்றமின் குறைபாடு உடல் நல குறைப்பாட்டை தரும். 36
33. செஸ் விளையாட்டு வீரன் "விஸ்வநாத் ஆனந்த்" பற்றி................ / 21st Century Skills 37
34. ஊடகங்களும் தமிழ் மொழி வளர்ச்சியும் 38


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. A Tale of The Two Classrooms /
மலையகம் மாறும் போது....... 39
36. மனித உடற் பற்றிய தகவல்கள்./ Adam's PEAK 40
37. உலகிலுள்ள மிகச் சிறந்த
கடற்கரை நகரங்கள் சில.... 41
38. கிளிமாஞ்சாரோ /
உடலுக்கு அவசியமான கல்சியம் 42
39. நுவரெலியா ஏன் குளு குளு என்றிருக்கிறது? 43
40. சாதனைப் பொக்கிஷங்கள் நாங்கள் /
தமிழ் எண் முறைகள் 44
41. ஒலிம்பிக் போட்டிகள் - Olympic games 45
42. Cooking and Preserving Food / සිතාවට ඉඩක් 46
43. இலங்கையின் முற்காலக் குடியிருப்புகள் 47
44. விண்டோஸ் 10 ( Windows 10 )
புதிய வசதிகள் என்னென்ன? 48
45. புவி வெப்பமடைதல் 49
46. எண்களின் விந்தை 50
47. நாட்டார் பாடலில் தாலாட்டு 52
48. இரு நபர்கள் தெரியவில்லை யாரென 54
49. வறுமையின் கொடுமை 55
50. மலையகமும் மலையக கலைகளும் 56
51. உலகின் முதல் நிகழ்வுகள் 58
52. கிரிக்கட் மைதா னங்கள் /
இலங்கையின் கனிய வளங்கள் 60
53. கல்வியும் ஆங்கிலக்கல்வியின் மகத்துவமும் 62
54. எமது நாடு எதிர் நோக்கும் பிரச்சினைகள். 63
55. உலகில் பளு தூக்கும் வீரர்கள் 64
56. கைத்தொழில் புரட்சியின் கதை 65
57. G.C.E. A/L results summary - Arts 2014 68
58. G.C.E. O/L results summary - 11^A & 11^B 2014 69
59. G.C.E. O/L results summary - 11^C 2014 70
60. இழந்த புத்திசாலித்தனத்தை பெறுவது எப்படி? ∴
உங்களுக்கு தெரியுமா? 71
61. ஈழத்தில் தோன்றிய ஆரம்பகால தமிழ் நாவல்கள்
பற்றிய விளக்கம். 72
62. சிறைச்சாலை 73
63. Food 74
64. விஞ்ஞான அறிவியல் பற்றிய பொதுவான தகவல்கள் 75
65. அன்னையே நீ வாழ்க 76

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்



ஆக்கம்
ஆசிரியர்,
செல்வசாமி டிக்னேஸ்வரன்

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவன் நல்லவனாவதும், தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே...." என்கிறது ஒரு திரைப்பட பாடல். பரந்த இவ்வுலகில் பிறப்பும், இறப்பும் வழக்கமானதே. வாழ்க்கை என்பது சுழல் சக்கரம் போன்று உருண்டோடிக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் பூமியில் பிறக்கின்ற குழந்தை ஒன்று மாசுமறுவற்ற மனம்படைத்த நல்லவனாகவே பிறக்கின்றது. அவன் வளரும் போது பலவித வடிவங்களில் வளர்ச்சி பெற்று நல்லவனாகிறான், அறிஞனாகிறான், உத்தமனாகிறான், தலைவனாகிறான்.

எனவே, அவனது குழந்தை பருவத்திலிருந்து அவனது வளர்ப்பே அவனது வளர்ச்சிக்கு அடித்தளமாய் அமைகிறது. அப்போது வளர்ச்சி பெறும் ஒருவன் சிறுவனாகி, இளைஞனாகி, தலைவனாக மலர்கின்றான். இக்கருத்தின் அடிப்படையில் நோக்கும் போது இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியதே, ஆனால் அனைவரும் நாளைய தலைவர்களே என்று குறிப்பிட்டு கூறிவிட முடியாது. வளரும் பயிரை முளையிலே தெரியும் என்பார்கள், அது போல நாளைய தலைவர்களை பள்ளிப்பருவத்திலேயே இணங்கண்டு கொள்ள முடியும். வளரும் பயிர்கள் தனது வளர்ச்சிப்பருவத்தில் பூச்சி, புழுக்கள் போன்றவற்றால் தாக்கமுற்று கருகிப் போவது போல் நல்லொழுக்கமற்ற, விரும்பத்தக்கதாக பழக்கங்களை கொண்ட நண்பர்களுடன் சேர்ந்து நாளைய தலைவர்களுக்கு பதிலாக நாட்டு பற்றற்றவர்களாக கூட இன்றைய சிறுவர்கள் எதிர்காலத்தில் மாறலாம். சிறுவர்கள் வளரும் பருவத்தில் அவ்வாறான தாக்கத்தினை அடையாது நல்லவர்களாகவும், ஒழுக்கமுள்ளவர்களாகவும் வளர்க்கப்பட வேண்டும். இதற்கு அடிப்படையாக அமைவன தாயன்பும் ஒழுக்கமிக்க கல்வியுமாகும். நல்ல கல்வியறிவை பெறும் சிறுவன் ஒழுக்கமிக்கவனாகவும் திகழ்வான்.

இவ்வாறு ஒழுக்கமிக்க கல்வியறிவை பெறும் சிறுவர்கள் நாளைய தலைவர்களாக தலை நிமிர்ந்து வாழ முடியும் என்பதில் ஐயமில்லை. தாயானவர் தொடர்ச்சியாக தனது பிள்ளைக்கு அன்பு காட்டுபவராக இருக்க வேண்டும். அப்போதுதான் அச்சிறுவர்களின் மனம் குளிர்ச்சியடையும், இதனால் பிள்ளைகள் தாய் சொல் கேட்டு நடப்பதோடு பாடசாலை, சமய கூடங்களுக்கு சென்று கற்றலில் ஈடுபடும் போது அங்கு புகட்டப்படும் அறிவு, சொல்லி கொடுக்கப்படும் நல்ல ஒழுக்கங்கள் என்பவற்றை ஆழமாக மனதினுள்ளெடுத்து சிறப்பான வகையில் வளர்கிறார்கள். இதன் விளைவாகவே நாளைய தலைவர்களாக மாற அதிக வாய்ப்பு கிடைக்கின்றது.

இளமையிலே இலட்சிய நோக்குடன், குறிக்கோளுடன் சிறுவர்கள் வளர்வார்களேயானால் அவர்கள் எதிர் காலத்தில் நல்ல தலைவர்களாக உருவாக முடியும். நல்ல இலட்சியங்கள் நல்ல வழியை காட்டும். அவர்களது இலட்சிய வேட்கையும் விடா முயற்சியும் அவர்களது குறிக்கோளை எய்துவதற்கு துணை செய்யும். சிறுவர்களை பொறுத்தவரையில் பாடசாலையில் கல்வி கற்கும் காலத்திலேயே தலைமைத்துவ பண்புகளை கற்றுக் கொள்கிறார்கள். பாடசாலைகளில் நடைபெறும் தமிழ் இலக்கிய மன்றங்கள், இந்துமாமன்றம், ஆங்கிலமன்றம், இன்னும் பல மாணவ மன்றங்கள், விளையாட்டு போட்டிகளில் பங்குபற்றும் போது, குழு செயற்பாடுகளில் ஈடுபடும் போது சிறுவர்கள் தலைமைத்துவ பண்புகளை வளர்த்துக் கொள்வதற்கான சில சந்தர்ப்பங்களாக கூறலாம்.


பணம் வருவதற்கு முன்பே செலவை துவக்கி விடாதீர்கள்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக வரலாற்றில் ஒளி படைத்த தலைவர்களாக மின்னிக் கொண்டிருக்கும் தலைவர்கள் பலரை நாம் அறிவோம். அவர்களது வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து பார்ப்போமேயானால் அவர்கள் இளமை முதலே கொண்ட குறிக்கோளை எய்துவதற்காக அல்லும் பகலும் அயராது முயன்றுள்ளதை காணலாம். அவர்கள் இளமைப் பருவத்திலேயே கொண்ட இலட்சிய வேட்கையே இறுதியில் உலகம் போற்றும் தலைவர்களாக இவர்களை உருவாக்கியது என்பதை உணர முடியும். மகாத்மாகாந்தி, ஆபிரகாம் லிங்கன், மாவீரன் நெப்போலியன் போன்றோர்களை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக கூறலாம்.

மனிதனாக பிறந்த எவருக்கும் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருத்தல் வேண்டும். குறிக்கோள் இல்லாது வாழ்பவர் மாண்டவர்க்குச் சமனாவார். எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற இலட்சியமுடையவர்கள் வாழ்வில் வெற்றிகாண முடியும். இத்தகைய குறிக்கோள் கொண்ட சிறுவர்களே வாழ்வின் உயர் நிலையை அடைவர்.

சிறுவர்களே, கெட்டவன் என்ற பெயர் பெறுவது மிகவும் எளிது. சில நிமிடங்களிலேயே அப்பட்டத்தை பெற்றிடலாம். ஆனால் நல்லவன் என்று பெயர் பெறுவது மிகவும் கடினம். எனவே சிறுவர்கள் வாழ்வில் நல்லவன் என்ற பெயரினை பெற முயல வேண்டும். தாம் நல்லவன் என்று மக்கள் போற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் வாழும் சிறுவர்கள் நாளைய தலைவர்களாவது உறுதி.

நவீன உலகில் நம்ப முடியாத தொழில்நுட்ப அறிவுசார் சாதனைகளை மனித சந்ததியினார் படைத்து வரும் இக் காலகட்டத்தில், இன்றைய உலக நடைமுறையில் கல்வி அறிவற்ற, ஒழுக்கமில்லாத ஒரு வாழ்க்கையை பற்றி கற்பனை செய்து பார்த்தலென்பது மிக கஷ்டமான ஒரு விடயமே என்பது ஒவ்வொரு நாளும் கடந்து செல்கையிலேயே தெரியும். ஆகவே சிறுவர்கள் தாம் அடைய எதிர்பார்க்கும் இலக்கினை அடைய முதலாவது நல்ல முன்மாதிரிகளை அமைத்துக்கொள்ளுங்கள். அதற்கேற்ப நல்ல பழக்கவழக்கம், ஒழுக்கநெறிகளை கற்றுக்கொள்ள கவனம் சிதறாமல் நடந்து கொள்ளுங்கள். நல்ல இயக்கங்களை திரும்ப திரும்ப பாருங்கள். உங்களோடு தொடர்புற்று நடைபெறும் சகல சம்பவங்களையும் சில வினாடிகள் மீட்டுப்பாருங்கள். நல்ல சம்பவங்களை வாழ்வில் தொடர்ந்து பிரதியீடு செய்வதோடு தேவையற்ற சம்பவங்களையும் செயற்பாடுகளையும் விட்டு விலகி நில்லுங்கள். அப்போது நிச்சயமாக வளர்ந்து வாழ்வில் உயர் பதவிகளையும், கௌரவ பெயர்களையும் இலகுவாக பெறுவீர்கள்.

பெற்றோர்கள் தனது பிள்ளையை ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு அனுப்பி வைத்து விட்டு தனது பிள்ளை எல்லா வகையிலும் கெட்டிக்காரர்களாகவே வளர்கின்றனர் என்று எல்லோரிடமும் மார்தட்டிக்கொள்வர். இதனை எந்த ஒரு பிள்ளையும் ஏமாற்றிவிடாமல், அவர்களின் நம்பிக்கையை எதிர்பார்ப்பை நிறைவு செய்பவர்களாக செயற்பட வேண்டும்.

எனவே இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்களாக மிளிர வேண்டுமாயின் அவர்கள் நல்ல கல்வியறிவும், (நல்ல) சிறந்த ஒழுக்கமும், பிறர் நலம் பேணும் பண்பும் உள்ளவர்களாக, நல்ல குறிக்கோள் படைத்தவர்களாக திகழ வேண்டியது மிக மிக அவசியமாகும். நாளைய தலைவர்கள் ஆகும் தகுதி அவர்களது வாழ்க்கை நெறியிலேயே பெரிதும் தங்கியுள்ளது என்பதை மறக்காமல் ஞாபகத்தில் வைத்து வாழ வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணத்தினூடாக...............

ஆக்கம்
ஜெ. ஜெ. பபியான் - ஆசிரியர்
அக்கரைப்பத்தனை த. வி - ஆரம்ப பிரிவு

ஒரு மதியம் தரம் 10 மாணவர்கள் என்னிடம் வந்து தாங்கள் ஒரு நூல் வெளியிட ஆயத்தம் செய்வதாகவும் அதற்கு எனது ஆக்கமும் வேண்டும் என அன்பு வேண்டுகோள் விடுத்தார்கள்.

பன்முக திறமை கொண்ட இம்மாணவர்கள் ஆரம்பக்கல்வியை என்னிடம் கற்றவர்கள் என்பதில் பெருமிதம் கொள்கிறேன். அக்காலங்களில் ஆக்கத்திறன் விருத்தியின் பால் அதீத திறன்களை வெளிப்படுத்தியவர்கள். அத்துடன் நடிப்பு, பாடல், நடனம், அறிவிப்பு, உரையாடல் என பல்கலைத் திறமைகளை கொண்டவர்கள். 2009 — 2010 ஆண்டுகளில் இவர்களுக்கு பல களங்களை Creative Box எனும் தனியார் நிறுவனங்களினூடாக அமைத்துக் கொடுத்து பதக்கங்கள், சான்றிதழ்களை பெற பங்களிப்பு செய்தமை என் நினைவிற்கு வருகிறது. உண்மையில் நான் மனம் நெகிழ்ந்து போனேன்.

ஏனெனில் பொதுவாக குறித்த காலத்துள் ஆரம்பக்கல்வி ஆசிரியரை மறந்து விடுகின்ற பண்பு, கனம் பண்ணும் பண்பு, ஒரு சிலரைத் தவிர எல்லோரிடமும் பரவலாக காணப்படுகிறது. தொடர்ச்சியான கற்றல் வழிகாட்டும் ஆசிரியரை பொறுத்து அது நீடிப்பு பெறுகிறது.

அந்த வகையில் இம் மாணவர்களின் கல்வி நடத்தைகளில் பின்புலமாக நின்று செயற்படுகின்ற வகுப்பாசிரியர் திரு. செ. டிக்னேஸ்வரனை மனதார பாராட்டுகிறேன். இவர்களின் வேண்டுகோளின் படி எதனைப்பற்றி எழுதுவது என சிந்தித்த பொழுது நூல் வரவில் ஆதிக்கம் செலுத்தும் இலக்கியம், எழுத்து, வாசிப்பு குறித்து என் பார்வை நீண்டது.

புதுப்பித்தல் ஊடாக நிகழும் நின்று நிலைக்கும் இச்செயன் முறைக்கு வித்திடுவதற்காக என் வேறுபட்ட கோணத்தில் சிந்திக்க தூண்ட முற்படுகிறேன்.

புதுப்பித்தல் — இலக்கியம் — எழுத்து — வாசிப்பு

இலக்கியம் எனும் சாகரத்தோடு சங்கமிக்க முனையும் உங்களை அன்புடன் வருவேற்கிறேன்.

"புதுப்பித்தல் ஒன்றுதான் உயிரின் அடையாளம்
புதுப்பித்தல் ஒன்றுதான் இயங்குதலின் சமிக்ஞை
புதுப்பித்தல் ஒன்றுதான் காலத்தின் கட்டப்பாடு......"

காலத்திற்கு ஏற்ப தம்மை புதுப்பித்துக் கொள்பவை நின்று நிலைக்கும், தவறின் இடம் கடந்து மறைந்து விடும். ஆகவே, எம்மை புதுப்பித்து நிலைபெறச் செய்பவை இலக்கியமாகி நிற்கிறது. இது பல்வேறு தடங்களிலும் விசாலித்து கலைத்துவத்துடன் மிளிரும் போது, எழுத்தில், சிந்தனை வெளிப்பாட்டுடன் பரிணமிக்கும் போது மொழிப்புலமை வெளிப்படுகிறது.

மொழிப்புலமை என்றால் என்ன? மொழிப்புலமை அவசியம் என்ன? பார்க்கலாம்.........
மொழிப்புலமை கொண்ட இலக்கியச்சிந்தனைகள் இறவாத பெரும் புகழுடையவை. அவ்வாறான இலக்கிய சொல் நெறியினை வளர்த்துக் கொள்ள நிரம்பிய அறிவும், வாசிப்பும் சிந்திப்பும், கற்பனைத் திறனும், கூர்மையான அவதானமும், நுண்ணிய திறனும், படைப்பாளுமையும் அவசியமாகிறது. இதற்கு எழுத்தை உணர வேண்டும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மொழிப்புலமை கொண்ட இலக்கியச் சிந்தனைகள் இறவாத பெரும் புகழுடையவை. அவ்வாறான இலக்கிய செவ்நெறியினை வளர்த்துக் கொள்ள நிரம்பிய அறிவும், வாசிப்பும், சிந்திப்பும் கற்பனைத் திறனும், கூர்மையான அவதானமும், நுண்ணிய திறனும் படைப்பாளுமையும் அவசியமாகிறது. இதற்கு எழுத்தை உணர வேண்டும்.

எழுத்து என்பது உயிர்ப்பும் ஜீவனும் உணர்வும் கொண்டவை. எழுத்தின் அடிப்படையிலேயே சொற்கள் உருவாகின்றன. எது நல்ல எழுத்து என்பதும், எது நல்ல சிந்தனை என்பதும், எது நல் இலக்கியம் என்பதும் நமக்குள் வளர என்ன செய்ய வேண்டும்? வாசிக்க வேண்டும். இது எப்படி சாத்தியம்?.

அவசரமான வாழ்க்கைக்குள் வாசிப்பு என்று இன்று அவசியமற்றதை போல அருகி வருகிறது. அன்றாட வாழ்வியல் தரிசிப்பிற்குள்ளும், எதிர் கொள்ளும் பிரச்சினைகளை ஈடுகொள்வதிலும் எமது நாளாந்த செயற்பாடுகள் இயந்திரமாகி கிடக்கின்றமை இதற்கு மூலக்காரணம் எனலாம்.

எனினும் மாணவர் பராயம் என்பது தேடல் நிறைந்த புதிதை கற்றுக் கொள்ளும் ஆற்றல் நிறை பருவம். அதனை சரியான ஒழுங்கில் பயன்படுத்திக் கொள்ளும் போது, எமது இலக்குகள் வெற்றிச் சாலைக்குள் பயணிக்கும். அதன் மூலம் பெறுமதி மிக்க வெற்றியாளரையும் நாம் அடையலாம் என்பது உறுதி.

இன்றைய காலகட்டத்தில் அநேகர் தொலைக்காட்சிகளின் முன் மண்டியிட்டுக் கிடக்கின்ற அவல நிலையில் இது சிரமமான காரியம் தான் என்றாலும், தொழில் சார்ந்த புறத்தேடலாகிலும் இருத்தல் வேண்டும். அதுவுமற்று சராசரி மனுஷயத்துடன் வாழும் தன்மையானது வெட்கத்ததுக்குரியதாகும்.

"வாசிப்பு என்பது மனிதனை முழுமையாக்குகிறது." என முதுமொழிகளில் படித்ததும், கேட்டதும் கூட மறந்து, யதார்த்த சூழ்நிலைக்கு அப்பால் இலத்திரனியல் ஊடகங்களில் மூழ்கிப்போய் கிடப்பது வாசிப்பின் மேன்மையை உணர மறுக்கிறது. சமூக வலைத்தளங்களின் தாக்கம் இன்னும் மூளையின் வீச்சை முடக்கி விடுகிறது.

எனவே, இவற்றிலிருந்து மீட்சி பெற வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாகும். இவற்றிலிருந்து மீண்டெழும் போதுதான் வாசிப்பின் உயர்த்துவம் சமூகத்தின் கற்றலை விரிவுப்படுத்துகிறது.

சிந்தனை கிளரலை தோற்றுவிக்கிறது. இந்த ஆற்றல் ஆக்கவிருத்தியை மேம்படுத்தி வாழ்க்கை செம்மை படுத்த உதவுகிறது. சிந்தனைகள் இலக்கிய வடிவங்களாகுமிடத்து, பன்முக பயன்பாடுடையனவாக மிளிருகின்றன. எழுத்தை எழுதும் போதும், வாசிக்கும் போதும் அனுபவம் மேலெழுந்து ஆளுமை, புலமை, அறிவு, திறன் உணர்வு வெளிப்படுகிறது. தகைமை, மதிப்பு, மாண்பு, சமூகத் தொகுதி வேண்டுமெனில் புதுப்பிக்கப்பட வேண்டும்.

புதுப்பிக்கப்பட வேண்டும் எனில் —
இலக்கியத்தை நேசியுங்கள்
எழுத்தை நேசியுங்கள்
வாசிப்பை நேசியுங்கள்
எழுதுங்கள்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1st Row: Mr.K.Arulraj, Mr.R.Dharmaraj, Mr.T. Thevakumar, Mr.K.K.Kumaravel, Mr.I.Mathivathanan (Vice Principal), Mr.A.Harichandran (Principal), Mr.S.Dickneshwaran, Mr.A.CharlesThomson, Mr.J.Senthamilselvan, Mr.S.Justin, Mr.B.Longendran, Mr.R.Yogendran

2nd Row: Mr.D.Wijeasiri, Mr.M.Yogeshwaran, Mr.S.Prabu. Mr.S.Pragash, Mr.A.Sebastian, Mrs.J.Dhayani, Mrs.K.Kavitha, Miss.M. Gang Kumari Mrs.T.Mary, Mrs.K.Dayalanthini, Mrs.T.Vasantha Mrs.T.J.Fazeena, Mrs.P.Arulmoli, Mrs.W.Krishanthini, Mrs.P.Shanthalogini, Mrs.S.Sridevi

3rd Row: Mr.M.Sivaraj, Mr.K.Thiyagarajah, Mr.S.Selvarajah, Mr.A.Mohanakumar, Mr.V.V,Vijayananth, Mr.Toskydashan, Mrs.S.Sharmila, Mrs.T.Chandrakla, Miss.S.Kaladevi, Mrs.B.Kalaimani


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை

ஆக்கம்
[illegible] - ஆசிரியர்

## விடை தேடும் வினா?



இயற்கையின் விந்தையில்
இதுவொரு
வித்தியாசமான
விலாசம்....!

கொஞ்சம் திரும்பினோம்
திருப்பங்கள்
திருப்பத்தின்
விளிம்பில்
வழுக்கிறது....!

இன முரண்பாடுகள்
பட்டும் படாததுமாய்....!
இணக்கப்பாடுகள்
நிறைந்த மலையென
மோதும்.... அகத்துக்குள்
சில அரிக்கப்பட்ட
ஏடுகள்
மலையகம்....!

வெளிச்சத்துக்கு வராத
உண்மைகள்
இன்னும் சில தங்கச்
சிற்பங்கள்
இருளுக்குள்ளே....!
ஒளிர்ந்து கொண்டே
இருக்கின்றது....!

சோகங்களின்
சிறைச்சாலையில்
இன்னும் பல
விருட்சங்களின்
வியப்புக்கள்
வெளிவராமல்
தத்தழிக்கிறது
தவணை முறையில்....!

கலைகள்
கவிகள்
கதைகள்
எல்லாமே....
தொடர்கதையாய்
தொடர்கிறது
தேயிலையின்
தேனிசையோடு

மது பானங்களின்
மூலமே
நீதிமன்றம் அறியும்
மக்களின் நிலை
மாறாத போதும் கூட.....!
காத்திருக்கின்றோம்
வழக்கின்
இறுதித்தீர்ப்புக்காய்....!

சந்தா சன்மானம்
அரசியல் அரங்கம்
என்று....!
அலைகளாய்
அலைந்த போதும்....!

எத்தனையோ
கல்விமான்களை
உருவாக்கிய
மலையகம்
இன்னும்
தனிக்காட்சியாக
தத்தழிக்கின்ற நிலை....!

எழுதப்படாத
கவிதைகளாய்....!
படிமங்களாய்
இன்னும்
சுதந்திரமான
கைதிகளாய்
வாழ்ந்துக் கொண்டிருக்கின்றோம்....!

சாதனைகளை
சாதகமாய்
சாமர்த்தியமாய்
சாதுர்யமாய்
சாதித்த போதும் கூட....?
இயற்கைக்கு
பகை ஏற்படுகிறது
எங்கள் மீது
இதற்கு மரணங்களின்
எண்ணிக்கை
சாட்சி....!

வெளிநாட்டு
பத்திரிகைகளில்....!
மலையகத்தை பற்றி
எத்தனையோ
சுயசரிதைகள்
எழுந்தாலும் கூட
இவைகள்
புரியாது
விடை தேட
முடியாது....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாலிய ஓவியர் - லியானாடோ டாவின்சி

ஆக்கம்
க. இந்துஜா $10^A$



லியானாடோ டாவின்சி என்றதுமே முதலில் நினைவுக்கு வருவது அவர் வரைந்த உலகப்புகழ் பெற்ற ஓவியங்களான மோனாலிசா (Monalisa) மற்றும் இறுதி இராப்போசன விருந்து (The Last Supper) என்பவைகளாகும். அவர் உலகப்புகழ் பெற்ற ஓவியர் மட்டுமல்ல. புகழ்ப்பெற்ற கட்டட கலைஞரும், கண்டுப்பிடிப்பாளரும், பொறியியளாளரும், சிற்பியும் ஆவார். ஆக மொத்தமாக அவர் ஒரு பல்துறைக்கலைஞராவார்.

எத்தனையோ ஓவியங்களை அவர் வரைந்திருந்தாலும் இன்றளவிலும் அவர் வரைந்த மோனாலிசா, இறுதி இராப்போசனம் என்பன உலகளாவிய ரீதியில் போற்றிப்புகழப்படுகின்றன. அதுமட்டுமன்றி இவர் உடற்கூற்றியல், வானியல் மற்றும் குடிசார் பொறியில் போன்ற துறைகளிலும் பெரும் பங்காற்றி யுள்ளார்.

விபரம்

லியனாடோ டாவின்சி இத்தாலியிலுள்ள வின்ஸி என்ற இடத்தில் 1452 இல் April 15ம் திகதி பிறந்தார். இவரது தந்தையின் பெயர் செர்பியரோ டாவின்சி என்பதாகும். தாயாரின் பெயர் கத்ரீனா ஆகும். லியனாடோ டாவின்சி தனது தந்தையுடன் புளொரன்ஸ் நகரில் வாழ்ந்து வந்தார். இவர் வாழ்நாள் முழுதும் சைவ உணவுகளை மாத்திரம் உட்கொண்டார். இவர் 1513 முதல் 1516 வரையிலான காலப்பகுதியில் ரோம் நகரில் வாழ்ந்தார். அதன் பின் மிலான் நகரில் தங்கியிருந்தார்.

பல்வேறுபட்ட துறைகளில் தேர்ச்சி பெற்ற லியனாடோ டாவின்சி 1519 ல் பிரான்ஸிலுள்ள குளொக்ஸ் என்ற இடத்தில் காலமானார். இவருடைய விருப்பப்படி அவரது சடலம் இறுதி சடங்குகளுக்காக எடுத்து செல்லப்பட்டபோது ஊர்வலத்தில் 60 பிச்சைக்காரர்கள் தொடர்ந்து சென்றனர். அம்போயிஸ் கோட்டையிலுள்ள சென் ஹியூபெர்ட் சப்பலில் அடக்கம் செய்யப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயக வழிபாட்டின் பயன்கள்

ஆக்கம்
ர. மதுஜன் 10



உலகத்தில் தோன்றிய மதங்களில் காலத்தால் முற்பட்ட மதம் சைவ சமயம் ஆகும். சைவ சமயமானது எல்லா சமயங்களையும் தனக்கு அங்கமாகக் கொண்டு தாயாக விளங்குகிறது. எந்த சமயத்தையும் புறக்கணிக்காது தழுவி நிற்கும் சமரசமுடையது. "ஒரு தாய் தன் குழந்தைகளைத் தழுவுவது போலாகும்." எனவே சைவ சமயம் என்பது அன்புச் சமயமாகும்.

"எவ்வுலகிலும் என்னுயிர்ப் போல் எண்ணி இரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே."

என்பது சைவ சமயத்தின் உயிர் நாடி. இவ் அற்புதமான சைவ சமயத்துள் விநாயகர் வழிபாடு என்பது முதன்மை பெற்று விளங்குகின்றது. "ஓங்கார ரூபாய நம" என்பது கணபதிக்கு வழிபாடு செலுத்தும் மந்திரம். கடவுள் மந்திரங்கள் எல்லாவற்றுக்கும் ஓங்காரம் ஆதியாக அமைகிறது. விநாயகப் பெருமான் இதன் உருவாகவும், பொருளாகவும் அமைகிறார். கணபதி உபநிடதம் கணபதியே ஏனைய தெய்வங்கள் எல்லாவற்றிலும் மேலானவர் என்று கூறுகிறது. விரும்புவருக்கு விரும்பிய வடிவில் தோன்றுவதுடன் பல விரதங்களும் இவருக்கு அனுஷ்டிக்கப்படுகிறது. ஏனைய தெய்வங்களின் கோயில்களிலும் விநாயக பெருமானுக்கு முதலிடம் அளிக்கப்படுவதோடு விநாயகருக்கான தனி ஆலயங்களும் அமைக்கப்படுகின்றன.

இவ் விநாயகப் பெருமானது அருள் எங்கும் நிறைந்திருப்பினும் ஆலயத்திலுள்ள திருவுருவத்தில் விளங்கித் தோன்றுகின்றான். பசுவின் உடம்பு முழுவதும் பால் நிறைந்திருக்கிறது. ஆயினும் பால் பெற பசுவின் மடியை வருடிப் பால் பெறுவதுப் போல இறைவன் அருளைப்பெற விரும்புவோர் ஆலயத்தில் சென்று இறைவன் திருமுன் நின்று வழிப்பட்டுத் திருவருளைப் பெற வேண்டும்.

மக்கள் செல்லும் பாதையில் தடைகளை ஏற்படுத்துபவரும் தடைகளை நீக்குபவரும் விநாயகப் பெருமானே ஆவார். விநாயகரை வழிபடுவோரின் கருமங்கள் எல்லாம் சித்தி பெறுவதோடு, நல்லறிவும் வளரும். விநாயகப் பெருமான் அன்பிற்கு கட்டுப்படுவார் ஈகையால் அனைவரினதும் அன்பிற்கு கட்டுப்படுவதோடு இதயமாகிய குடிசையிலே நுழைந்து வருகின்றார். ஆகவே, விநாயகப் பெருமானது அருளை அடைவதற்கு மிக எளிமையான வழி உருகி நினைப்பதேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் பெருமான் எல்லா உயிர்களிலும் நீக்கமற நிறைந்திருப்பவர். பக்தியுடன் விநாயகப் பெருமானது திருநாமங்களை ஒருமுறை கூறினும் வினைகள் வெந்து நீறாகும். சகல நலன்களும் உண்டாகுவதோடு விநாயகப் பெருமானது அன்பை பெற்றுவிட்டால் அதுவே எல்லாவற்றையும் பெற்றுவிட்டதற்கு சமனாகும்.


"அன்பையுடையார் என்பையும் பிறர்க்கு வழங்குவார்" என்று அன்பு பக்தி சிந்தனையும் முக்தியையும் தருவதாகும்.

இம்மானுடப் பிறப்பானது பல கோடி பிறப்புக்களில் செய்த நல்வினைகளின் பயனாகும். அது கடலை கையால் ஒருவன் நீந்தியது போன்ற அருமையுடையதாகும். இம் மானுட பிறப்பெடுத்த நாம் அன்பு செலுத்துவதன் மூலம் இறைவனை அடையலாம். உய்வு பெறும் தகுதியுடையது உயிர். உய்யும் நெறியை உய்த்துணர்ந்து அந்த உபாயத்தை கடைப்பிடிப்பதே உயிர்களின் கடமையாகும்.

விநாயகப் பெருமானை நினைத்து நினைத்து உருகும் அடியார் திருவுள்ளத்தில் கடைந்த தயிரில் வெண்ணைப் போல் வெளிப்படுகின்றான். கல்லாதவர் உள்ளத்தில் பாலில் நெய்போல் மறைந்திருப்பான். ஆகவே, பக்தியென்ற மதத்தைக் கொண்டு ஞானமாகிய கயிற்றுடன் இணைத்துக் கடைந்தால் மறைந்து நின்ற எம் பெருமானது அருள் கிட்டும். ஆகவே முயன்றவருக்கு பயன் உண்டு. இங்கு எழுந்தருளியிருக்கும் எம் பெருமானை பக்தி சிரத்தையுடன் வழிபட்டு இறை அருளை பெற வேண்டுகிறோம்.

## Famous Vegetarian **Mahatma Gandhi**
(October.02.1869 - January.30.1948)

By : N. Nitharshan



We should all be vegetarians. For why should it be other wish when sir Henry Thompson calls it 'a vulgar error' to suppose that Flesh - foods are indispensable for our sustenance, and the most eminent physiologists declare that fruit is the natural food of man.... muscular vegetarians demonstrate the superiority of their diet by pointing out that the peasantry of the world are practically vegetarians and that the strongest and most useful animal the horse, is a vegetarians, while the most ferocious and practically useless animal the lion is a carnivore...."

Gandhi, 'The superiority of vegetarianism' letter to the National Mercury, Feb 3, 1896. The idea of vegetarianism is deeply engrained in hindu and jain traditions in india, especially in his native Gujarat. gandhi was close to the chairman of the london vegetarian society, Dr.Josiah Old field and corresponded with hendry Stephens salt, a vegetarian campaigner. gandhi became a strict vegetarian. he wrote the book. The moral basis of vegetarianism and wrote for the London Vegetarian Society's publication. Gandhi was some what of a food faddist taking his own goat to travels so he could always have fresh milk.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Gandhi noted in his autobiography that vegetarianism was the beginning of his deep commitment to Brahmachariya would likely falter. "you wish to know what the marks of a man are who wants to realize truth which is god", he wrote "He must reduce himself to zero and have perfect control over all his senses - beginning with the palate or tongue.

Mohandas Karamchand Gandhi was the preeminent leader of Indian nationalism in British - ruled India employing non-violent civil disobedience, Gandhi led India to independence and inspired movements for civil rights and freedom across the world. The honorific Mahatma (Sanskrit,"high-sould," " venerable") applies to him first in 1914 in south Africa is now used world wide. He is also called Bapu ( Gujarati endearment for "father") in India born and raised in a hindu, merchant castle, family in coastal Gujarat, Western India and trained in law at the inner temple, London, Gandhi first employed non-violent civil disobedience as an expatriate lawyer in the resident Indian community's struggle for civil rights. After his return to India in 1945, He set about organizing peasants, farmers and urban labourers to protest against excessive land tax and discrimination assuming leadership of the Indian National Congress in 1921, Gandhi led nation wide campaigns for easing poverty, expanding women's rights building religious and ethnic anity ending untouchability, but above all for achieving swaraj or self-rule.

gandhi famously led Indians in challenging the British - imposed salt with the 400km Dandhi salt march in 1930, and later in calling for the British to quit India in 142. he was imprisoned for many years, upon many occasions, in both south Africa and India.

Gandhi influenced important leaders of the civil rights movements in the united states, including martin luther king, James lawson and James Bevel, drew from the writings of Gandhi in the development of their own theories about non-violence.

# ஆபத்தும் எச்சரிக்கையும்

ஆக்கம்
ச. பிரபு - ஆசிரியர்

நாம் வாழும் இன்றைய நவீன உலகம் நமது கைக்குள் சுருங்கிவிட்டமையினால் மிகப்பெரிய நன்மைகள் இருப்பதைப்போல் தீமைகளும் இருக்கிறது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. மற்றவர்களை தொடர்பு கொள்வதற்காக கைத் தொலைபேசி வைத்திருந்த காலம் தாண்டி இன்று இணையத்தளங்களை யாவரும் பயன்படுத்தும் விதமாக நகரங்கள் முதல் கிராமங்களின் கடைக்கோடி வரைக்கும் விஞ்ஞானத்தின் வளர்ச்சி வியக்கத்தக்கது ஆகும்.

இணையத்தளம் பயன்பாட்டினால் அதிகமான நன்மைகள் ஏற்படுவதைப்போல தீமைகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. உலகில் உள்ள கோடிக் கணக்கான இணையத்தளப் பாவனையாளர்கள் ஏதோ ஒரு தேவை நிமித்தமாக தங்களுக்கு தேவையான இணையத்தளங்களை பயன்படுத்தி வருகின்றார்கள். (வியாபாரத்தேவை, கல்வி, விழிப்புணர்வு, மருத்துவம், வேலைவாய்ப்பு.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக அனைவரும் பயன்படுத்தும் படியாக சில முக்கியமான சமூக வலைத்தளங்கள் செயற்படுகின்றன. குறிப்பாக Google, Youtube (வீடியோக்களுக்கான முன்னனித்தளம்), Twitter, His, Orcut, Flicker, Instagram என்ற தரவரிசையில் மற்றும் Face Book (முகநூல்), என்பன உலகின் முன்னனி இணையத்தளமாகவும் அதிகளவான மக்கள் மத்தியில் பரவிக்காணப்படும் Entertainment தளமாகவும் இன்று வலம் வந்து கொண்டிருக்கின்றது. நம்மவர்களில் 6 வயது முதல் 60 வயது வரை அனைவரும் Face Book இல் (முகநூல்) அங்கத்தவராக உள்ளனர். Face Book ஒருவரை ஒருவர் நண்பராக இணைப்பதினூடாக ஒரு சங்கிலித்தொடர் முறை உருவாக்கப்பட்டு ஆயிரக்கணக்கான லட்ச கணக்கான மக்களை ஒருவர் தனது நண்பராக்கிக் கொள்ளும் வசதியை இத்தளம் வழங்குகின்றது.

பொதுவாக அனைவரும் பயன்படுத்தும் படியாக சில முக்கியமான சமூக வலைத்தளங்கள் செயற்படுகின்றன. குறிப்பாக Google, Youtube (வீடியோக்களுக்கான முன்னனித்தளம்), Twitter, His, Orcut, Flicker, Instagram என்ற தரவரிசையில் மற்றும் Face Book (முகநூல்), என்பன உலகின் முன்னனி இணையத்தளமாகவும் அதிகளவான மக்கள் மத்தியில் பரவிக்காணப்படும் Entertainment தளமாகவும் இன்று வலம் வந்து கொண்டிருக்கின்றது. நம்மவர்களில் 6 வயது முதல் 60 வயது வரை அனைவரும் Face Book இல் (முகநூல்) அங்கத்தவராக உள்ளனர். Face Book ஒருவரை ஒருவர் நண்பராக இணைப்பதினூடாக ஒரு சங்கிலித்தொடர் முறை உருவாக்கப்பட்டு ஆயிரக்கணக்கான லட்ச கணக்கான மக்களை ஒருவர் தனது நண்பராக்கிக் கொள்ளும் வசதியை இத்தளம் வழங்குகின்றது.

## FACE BOOK

**Face Book** என்றால் என்ன?

அதிகமான ஆண்களும் பெண்களும் வாசகர்களாகியுள்ள பேஸ்புக் என்ற இணையத்தளம் 2004ம் ஆண்டு February 04ம் திகதி Mark Elliot Zuckerberg என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் Face Mash என்னும் பெயரால் படிக்கும் கல்லூரி நண்பர்களை இணைத்துக் கொள்வதற்காக M.E. Zuckerberg ஆல் ஆரம்பிக்கப்பட்ட இது மற்றவர்களை கவரும் வீதம் அதிகரிக்கவும் Face Book என பெயர்மாற்றப்பட்டு பொதுத்தளமாக மாற்றப்பட்டது.

2006ஆம் ஆண்டிலிருந்து 13 வயதிற்கு மேற்பட்ட எவரும் Face Bookஐ பயன்படுத்த முடியுமென அத்தளம் அதிகாரப் பூர்வமாக அறிவித்தது. தினமும் இலட்சத்திற்கு மேம்பட்டவர்கள் புதிதாக Face Book அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளும் வேளை உலக சனத்தொகையில் 14 பேரில் ஒருவர் தற்போது Face Bookஇல் அங்கத்தவர்களாக உள்ளனர் என்ற செய்தி இதன் அசுர வளர்ச்சியை காண்பித்தாலும் கலாசார மற்றும் ஒழுக்க சீர்கேடுகளுக்கு முன்னனிக் காரணமாக தற்போது Face Book தளமே சுட்டிக்காட்டப்படுகிறது. அதிக அங்கத்தவர்களை கொண்ட நாடாக **Face Book** தலைமையகம் அமைந்துள்ள அமெரிக்கா திகழ்கின்றது.

அதிகாலை எழுந்தவுடன் தேனீர் அருந்திவிட்டு பத்திரிகை பார்க்கும் காலம் மலையேறி தற்போது காலைக் கடன்களில் முதன்மையானதாக Face Book பார்ப்பது மாறிவிட்டது என்றால் மிகையாகாது. பொழுது போக்குக்காக Face Book பயன் படுத்துபவர்களைத் தாண்டி தற்போது பல நிறுவனங்கள் தங்கள் வியாபாரத்தை அதிகரித்துக் கொள்வதற்கான விளம்பரம் வழங்கும் இடமாக Face Book தான் பயன்படுத்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Face Bookஇன் விபரீதங்களும் அதன் நிலைப்பாடும்:-

உலகளாவிய ரீதியில் Face Book வலையில் விழுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதற்கு இலங்கை மாத்திரம் விதிவிலக்கல்ல. சமூக வலைத்தளங்கள் பல இருந்தாலும் கூட Face Book இன் ஆதிக்கமே நம் நாட்டில் மேலோங்கி காணப்படுகின்றது. பெரும்பாலான இளைஞர்களின் அன்றாடத் தேவைகளில் ஒன்றாக இது மாறிவிட்டது. Face Book உபயோகம் காரணமாக அடுத்தடுத்து கிடைத்த தற்கொலை செய்திகளும் அவை தொடர்பான முறைப்பாடுகளும் இலங்கையர்களை ஆழமாக சிந்திக்க வைத்திருக்கின்றது.

இலங்கையை பொறுத்த வரையில் Face Book பாவனையில் ஈடுபடும் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்து வருகின்றது. போதிய விழிப்புணர்வின்மை காரணமாக Face Book இல் தான் தோன்றித்தனமாக செயற்படும் போது ஏற்படும் பின் விளைவுகளை தாங்க முடியாதவர்களாக பெரும் மன உலைச்சலுககு ஆளாகின்றார்கள். மாணவர்களின் எதிர்காலத்தை பெரிதும் பாதிக்கக்கூடிய இவ்விடயம் குறித்து பெற்றோரும் ஆசிரியரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகின்றது.

இளைஞர் மத்தியில் உளவியல் ரீதியிலான தாக்கங்களையும் மன அழுத்தங்களையும் ஏற்படுவதற்கும் பல சந்தர்ப்பங்களில் தற்கொலைக்குக்கூட காரணமாக மாறிவிடுகின்றமை அண்மைய கால நிகழ்வுகளினூடாக விளங்கிக்கொள்ளலாம்.

Face Book இல்தான் அதிகளவான போலி முகவரிகள் கொண்டவர்கள் இயங்குகிறார்கள். ஆரம்பத்தில் வெறும் நட்பாக ஆரம்பிக்கும் இத்தொடர்புகள் கால போக்கில் காதலாக, காமமாக, கள்ளத்தொடர்புகளாக மாறி பல குடும்பங்களின் சீரழிவுக்கும் இது காரணமாக அமைகின்றது. நண்பர் வட்டத்துடன் தொடர்புராத வேறொரு நபரை Face Book இல் இணைக்கும் போது காமம் கலந்த வார்த்தைகளை மற்றவர்களில் தனிப்பட்ட கணக்கிற்கு அனுப்புதல், நிர்வாண தோற்றமுடையோருடைய தோற்றங்களை உண்மை முகங்கொண்டோருக்கு பொருத்தி புகைப்படமாக வெளியிடுதல் போன்ற முறையற்ற செயற்பாடுகள் இலங்கையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

அதுமட்டுமன்றி Face Book களின் கடவுச் சொல்லினை (Password) திருடுதல், ஒரே பெயரில் இன்னுமொரு கணக்கை உருவாக்குதல், அவசியமற்ற Links ஐ ஏனையோருக்கு அனுப்புதல் போன்ற குற்றச்செயல்களும் Face Book இனூடாக அதிகரித்து வருகின்றன.

Face Book பாதுகாப்பு தொடர்பான முன் நிபந்தனைகள்:-

- எவரும் பார்க்கக்கூடாதென எண்ணுகின்ற புகைப்படத்தை பதிவேற்றக்கூடாது.
- நிஜவாழ்வில் நண்பர்களாக வட்டாரத்தில் இல்லாதவர்களை Face Book இல் நண்ர்களாக சேர்த்துக் கொள்ளக் கூடாது.
- பெற்றோர்கள் இணையத்தளத்தில் தமது பிள்ளைகளின் நடவடிக்கை தொடர்பாக விழிப்புணர்வுடன் இருத்தல் வேண்டும்.
- பயணக்கணக்கு, கடவுச்சொற்களை தனிப்பட்ட ரீதியில் பேணுதல் மற்றும் கடவுச்சொல்லை இலக்கங்கள், குறியீடுகளுடன் கூடியதாக உருவாக்குதல்.
- சமூக வலைப்பின்னல்களில் போலிப் பெயர்களில் விடுக்கப்படும் அழைப்புகளை தவிர்த்தல்
- தேவையற்ற தொடுப்புகள் (Links), கோப்புகளை தொடுக்கும் (Click) போதும் தரவிறக்கம் செய்யும் போதும் அவதானமாக சிந்தித்து செயற்டல்.

மேற்கூறிய வழிமுறையினூடாக குற்றச்செயல்களைத் தவிர்க்கக்கூடியதாக இருக்கும் நடைமுறை உலகில் இவம் பாராயத்தினர் தெரிந்தோ தெரியாமலோ இணைய உலகிற்குள் வெகு சீக்கிரமாக உள் வாங்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவருமே இணையக் குற்றங்கள், விதி முறைகள் குறித்து அறிந்து வைத்திருக்கின்றார்களா? என்பது கேள்வி குறியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இணையக்குற்றங்கள் தொடர்பில் இலங்கை கணணி அவசர தயார் நிலைக்குழுவினிடம் முறைப்பாடு செய்யலாம். மின்னஞ்சல் முகவரி **slcert@cert.ov.lk (link send email) T.P 011 269 1692**. Face Book ஐ அளவோடும் பயனுள்ள வகையிலும் பாவித்தால் Face Book நன்மையானது. அதைவிடுத்து தவறான வகையில் பாவித்தால் இது தீமையான ஒன்றாகும். சமூக ஊடகங்களின் சாதக பக்கங்களை பயன் படுத்துவதன் மூலம் சமூக ஸ்திரத்தன்மைக்கு வழிகோர முடியும்.



# பொறுமை

ஆக்கம்
இ. கலைவிழி - ஆசிரியை

"பொறுத்தார் பூமி ஆழ்வார்" பொறுமை என்பது உயர்ந்தோர் ஆன்மீக சாதனை. அதனை விட சிறந்த பண்பு எதுவும் கிடையாது. உண்மையானாலும் முரட்டுத் தனமாக எதையும் சொல்லக்கூடாது. முரட்டுத் தனமாக பேசுவதால் இனிமை உன்னிடமிருந்து விடை பெற்று விடுகின்றது.

ஒரு குடும்பத்திலும் சரி சமூகத்திலும் சரி ஒவ்வொருவருக்கும் உரிய இடத்தினை கொடுத்து அவர்களின் சுதந்திரம் அவர்களின் அபிப்ராயங்களை கேட்க வேண்டும். நாம் வார்த்தையாலும் பிறரைத் துன்புறுத்தக் கூடாது. எப்போதும் கூட ஒருவருக்கு இனிமையாகத் தரக்கூடிய ஒன்றையே கூற வேண்டும். நாவை அடக்கும் சக்தி இல்லாதவர்கள் மனதில் தூய்மையை இழக்கின்றனர்.

பொறுமை மடலினும் பெரிது என்பர். இதன் மூலம் வெளிப்படுவது யாதெனில் ஒவ்வொருவரும் தம் வாழ்வில் வெற்றியை பெற வேண்டும் என்றால் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் பொறுமையுடன் வாழ வேண்டும்.

"கீழ்ப்படியக் கற்றுக்கொள் கட்டளையிடும் பதவி தானாக உன்னை வந்தடையும்"

— சுவாமி. விவேகானந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# The Guest

By : S. Kaushalya
Grade - 10

A story is told about a soldier who was finaly coming home after having fought in vietnam. He called his parents from San Fransisco. " mam and dad, I am coming home, but I've faver to ask. I have a friend I don't like to bring home with me. "sure", they replied, "we" don't love to meet him"

"There's something you should know," the son continued, "he was hurt pretty badly in the fighting. He stepped on a land mind and lost an arm and a leg. he has nowhere else to go, and I want him to come live with us."

"I'm sorry to bear that, son. may be we can help him find somewhere to live."

"no, Mam and dad, I want him to live with us." "son said the father, "you don't know what you 're asking someone with such a handicap would be a a terrible burden on us. We have our own lives to live, and we can't let something like this interfere with our lives. I think you should just come home and forget about this guy. He'll find a way to live on his own."

At that point , the son hung up the phone. The parents heard nothing more from him. A few days later, however, they received a call from the sun fransisco police, their son had died after falling from a building, they were told. The police believed it was suicide.

The grief stricken parents flew to San Francisco and were taken to the city morgue to identify the body of their son. They recognized him, but to their harror they also discovered something they didn't know, their son had only one arm and one leg.

Moral: The parents in this story are like many of us. we find it easy to love those who are good looking or fun to have around, but we don't like people who inconvenience us or make us feel uncomfortable , we would rather stay away from people who aren't as healthy, beautiful or smart as we are. thankfully there's someone who won't treat us that way. Someone who loves us with an unconditional love that welcomes us into the forever family, regardless of how messed up we are.

Tonight, before you tuck yourself in for the night, say a little prayer that God will give you the strength you need to accept people as they are, and to help us all be more understanding of those who are different from us.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# THE CHARECTERISTICS OF 21ST CENTURY EDUCATOR

By K. Thiyagaraja
Teacher

The Adapter

The Communicator

The Learner

The Visionary

The Leader

The Model

The Collaborator

The Risk Taker

# தவிக்கும் நிலா

ஆசிரியை
M. [illegible] குமாரி

தெரியும் என்று
சொல்லிக் கொள்ளவோ
தெரியாது என்று
சொல்லிக் கொள்ளவோ
தெரியவில்லை எனக்கு....

இருந்தும் நிசப்த ஓசையிலே
செருப்பின்
காலடிச்சத்தம் கேட்டு
குரைக்கும் நாயின்
குமுறலைப் போல - நானும்
காணும்
மனித உருவங்களை
கண்சிமிட்டி ஏற்றுக்கொள்கிறேன்
இதுதான் எனக்கு தெரிந்த உறவென்று....



கரும் கம்பளம்
போர்த்திய இருளை வரவேற்று
காத்திருக்கும் நிலவைப்போல
என்னுள் தவித்திருப்பது
நான் மட்டுமல்ல என்
இதயம் சுமக்கும்
நினைவுகளும்தான்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# True Love

By
Mrs. G. Fazeema
Teacher

Every day
Every second
Through whole my life
You were with me
Every second you encouraged me
to become success in my life
you were beside me
like a shadow



You were filled my heart
only with **Joy and Happiness**

My loving dad............
But,..............
Today I missed my shadow
Because, I am not lucky that much
You went on a journey
that you will never return again forever

Your loving daughter
missing your love and comfort ever

**Dad................**
No one can fill your place forever
I love you so much dad
and
I am missing you my loving dad...................

## தலைசிறந்த தந்தைகள்

[illegible] அஞ்சலி - 10

| | | |
|---|---|---|
| கணிப்பொறியின் தந்தை | - | சாலஸ் பாபேஜ் |
| செல்லிடத் தொலைபேசியின் தந்தை | - | மார்டின் கூப்பர் |
| பொருளாதாரத்தின் தந்தை | - | ஆடம் சிமித் |
| துப்பறியும் நாவல்களின் தந்தை | - | எட்கர் அலன்போ |
| தொலைபேசியின் தந்தை | - | அலெக்ஸாண்டர் கிரகம் பெல் |
| மருத்துவத்தின் தந்தை | - | ஹிப்போக்கிரட்டிஸ் |
| பிளாஸ்டிக் கால்களின் தந்தை | - | அப்துல் கலாம் |
| நவீன விஞ்ஞானத்தின் தந்தை | - | நிக்கலஸ் கொப்னிக்கஸ் |
| செயன்முறை விஞ்ஞானத்தின் தந்தை | - | கலிலியோ கலிலி |
| ஈர்ப்பு விசையின் தந்தை | - | ஐசாக் நியூட்டன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித யோசப் வாஸ்

ஆக்கம்
T. மேரி - ஆசிரியை



இலங்கை நாடானது ஆரம்பக்காலத்தில் அன்னிய நாட்டவனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அன்று முதல் எமது நாட்டில் அந்நிய மொழிகள், உடைகள், கலாசாரங்கள், பழக்கவழவங்கள் என்பன எமது கலாசாரத்தில் மாற்றத்தை கொண்டுவந்தது. அந்த வகையில் இலங்கை போர்த்துக்கேயரின் ஆட்சியில் உட்பட்டிருந்த போது கத்தோலிக்க சமயமானது பரப்பபட்டது. அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த ஒல்லாந்தரால் கத்தோலிக்க சமயம் பல அழிவுகளை நோக்கியது. கத்தோலிக்க சமய குருவானவர்கள் 120ற்கும் மேற்பட்டவர்கள் கொடூர கொலை செய்யப்பட்டனர். கத்தோலிக்க தேவாலயங்கள் உடைக்கப்பட்டமை, குருவானவர்கள் நாடு கடத்தப்பட்டமை, கத்தோலிக்க மக்களுக்கு கொடூர தண்டனைகள் வழங்கல் என

திருவருட் சாதனங்களை வழங்கவோ, அவர்களை விசுவாசத்தில் வழிநடத்தவோ குருக்கள் எவருமின்றி மக்கள் ஆயனில்லா மந்தைகளை போல கடினங்களை வாழ்வில் சுமந்தனர். இலங்கை கத்தோலிக்க திருச்சபைக்கென பொறுப்பாயிருந்த ரு.மு.வின் ஆயர்கள் எவரும் இலங்கைக்கு பணிபுரிய முன் வரவில்லை. எனவே இவ்வாறாக காலம் செல்லச் செல்ல இலங்கை கத்தோலிக்க திருச்சபை சற்றுத் தளரத் தொடங்கியது. இதனை எதிர் பார்த்திருந்த ஒல்லாந்தர் மனப்பால் கத்தோலிக்க திருச்சபையை இலகுவில் அழித்து விடலாம் என எண்ணிக் கொண்டிருந்தனர். ஆனால் இறைவனின் திட்டமோ வேறு

ஆயனில்லா அல்லலுறும் மந்தைகளுக்கு உதவுவதைப் போல இறைவன் ஞூடு கத்தோலிக்கர்களுக்கெனவே தம் வாழ்க்கையை முற்றாக அர்ப்பணிக்க எளிமையான ஓர் இளம் இந்திய மேற்றிராசனக் குருவை ஏவினார். அவரோ தமது "இலங்கை நாட்டின் அப்போஸ்தலர்" என அழைக்கப்படும் யோசப் வாஸ் அடிகளாவார்.

இவர் இந்தியாவில் கோவா மாநிலத்தில் சல்செத்தே (Salcete) என்னுமிடத்தில் உள்ள சுவாரி (Zuari) நதிக்கு தெற்கு கரையோர சன்கோலா (Sancole) எனும் கிராமத்தில் கொங்காணி மொழிப் பேசும் ஒரு உயர்ந்த பிராமணக் குடும்பத்தில் கிறிஸ்தோபர் வாஸ் என்பவருக்கும் மரிய டொ மிரண்டா ஆகிய இருவருக்கும் 1651ம் ஆண்டு சித்திரை 21ம் திகதி 3ம் குழந்தையாக யோசப் வாஸ் அடிகளார் பிறந்தார். இவர் யோவான் தேவாலய யேசு சபை முதல்வர் யசிந்தோ பெரேய்ரா என்பவரிடம் திரு முழுக்கு பெற்றார். இவரின் குடும்பம் மிக உயர் பணக்கார குடும்பமாக விளங்கிய போதிலும் இவர்கள் விசுவாசத்திலும் தேவ பக்தியிலும் தர்மம் செய்வதிலும் குறைவு படவில்லை. இளமைக் கல்வியை கற்றப்பின் தமது இறைபணி வாழ்வை துவங்கும் ஆசையுடன் யோசப் வாஸ் அடிகள் நாம் குருவாகும் நோக்குடன் புனித தோமஸ் அக்வைனசின் சாமிநாத குரு மடத்தில் இணைந்த இவர் 1676 இல் கோவை அதிமேற்றிராசனத்தை சேர்ந்த



கடப்பதற்குத் தடைகளும் வெல்வதற்கு போர்களும் இல்லை என்றால் வாழ்க்கை சப்பிட்டு போய்விடும். ATMV
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக பணியில் ஈடுபட்டிருந்த யோசேப் வாஸ் அடிகளார் இலங்கையில் பணிபுரிய ஆசைப்பட்டார். அவ்வாறே இலங்கையில் நுழைந்து கொழும்பு, நீர்கொழும்பு, இரத்தினபுரி, வன்னி, மாந்தோட்டம், மன்னார், பூநகரி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் பணிபுரிந்து 1697 ம் ஆண்டு நடுப்பகுதியில் கண்டி நகரிலும் அதன் அயலிலும் கொடிய தொற்று நோயான சிறிய அம்மை (வைசூரி) பரவியது. அடிகளார் வைசூரி நோய்களால் 1711 ஆம் ஆண்டு தை மாதம் 16 ம் திகதி இறைவனடி சேர்ந்தார். இவருக்காக இரண்டாவது அருள் சின்னப்பர் 1995ம் ஆண்டு வருகைத் தந்து அருட்திரு யோசப் வாஸ் அடிகளாருக்கு முந்திப் பேறு பெற்ற பட்டம் அளித்து அவரை கௌரவித்தார். பின்னர் அன்மையில் 2015ம் ஆண்டு எமது புதிய பாப்பரசர் 1ம் பிரான்ஸிஸ் அவர்கள் முக்தி பெற்ற யோசப் வாஸ் அடிகளிற்கு புனிதர் பட்டத்தினை அளித்தமை இலங்கைத்திரு நாட்டிற்கு பெருமைக்குரியதாகும்.

# E - Interesting English

By : J. Shenthamilselvan
English Teacher

'E' is the most commonly used letter in the English language. In fact as many as one in eight of all the letters written in English is 'e'

More English words begin with the letter 's' than any other letter of the alphabet.

'I am' is the shortest complete sentence in the English language.

The longest English word that can be spelled without repeating any letter is uncopy rightable.

Do you know what is special about the following sentence?. **The Quick brown fox jumps over the lazy dog.** This type of sentence is called a 'Pangram' as it uses every letter in the English language.

The longest word in English has 45 letters 'pneumonoultramicroscopicsilicovolcanoconiosis' It is a type of lung disease caused by inhaling ash and sand dust.

There is no word in English language that rhymes with month, orange, silver or purple.

Queuing is the only word with five consecutive vowels (five vowels) This is a great word to use when you play hangman.

Approximately one new word is a added to the Enlisg language every two hours and around 4,000 new words are added to the English dictionary every year.

A sentence with only 'a' vowel. Each word has letter 'a'

A man can plan a canal panama.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகியற் கல்வியில் நடனத்தின் பங்கு

ஆக்கம்
T. சந்திரகலா - ஆசிரியை,

"அழகியற் கல்வி" என்பது நுண்கலைகளான இசை, நடனம், ஓவியம், சிற்பம் என்பவற்றை உள்ளடக்கியது. அழகு என்பது தமிழில் அம்மை, ஐ, அணி, எழில், ஏர், திரு மா, முருகு, கவின், காமர், பொற்பு, பொலிவு, வனப்பு எனப் பல சொற்களால் சூட்டப்படுகிறது. அழகியலைத் தொகுத்துத் திரட்டிப் பார்ப்பதற்கு தொல்காப்பியம் ஈறான பல நூல்களில் குறிப்புகள் காணப்படுகின்றன. அழகியலை இன்றைய காலத்துக்குப் பொருத்தமாகவும் ஏற்புடையதாகவும் மீட்டுருவாக்கம் செய்வது என்பது தமிழில் வருங்காலத்தில் தொடங்கப்பட வேண்டியதாக இருக்கிறது.

மேற்கத்தேய நாடுகளில் கூட அழகியல் என்பது தத்துவத் தளத்தில் ஒரு கொள்கையை விளக்கும் கலைச் சொல்லாக கி.பி 18ஆம் நூற்றாண்டில் தான் முதன்முதலில் அலெக்சாண்டர் கோட்பீப் பாம்கார்த்தன் (Alexender Gotilieb Baumgarten) என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. இன்று அழகியலானது தத்துவத்திலும் கலை இலக்கியத்திலும் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு பரிமாணமாக விளங்குகிறது.

"அழகு" என்பது இயற்கையிலும், மனிதன் உருவாக்கிய பொருட்களிலும் கலைகளிலும் காணப்படுவதும் அழகியல் என்பது இவற்றின் பண்புகளை விளக்க கூடியது என்று பொதுவாகக் கருதப்படுவதும் கலைப் பொருட்களை விளக்கும் ஒரு சிந்தனைச் சாதனமாகவே இன்று பலராலும் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன என திரு. தி. சு. நடராசன் தமிழ் மரபில் அழகியல் கொள்கை எனினும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

கலைகள் கலை இலக்கியம், விஞ்ஞான இலக்கியம் என இரு வகைப்படும். இவற்றுள் கலை இலக்கியம் எனப்படுவது சாதாரண கலைகள், நுண் கலைகள் என இரு பிரிவுகளை கொண்டது. இந் நுண்கலைகளுள் சித்திரம், சிற்பம், ஓவியம் போன்ற கலைகள் நிலையான கலைகள் எனவும் இசை, நடனம், நாடகம் ஆகிய கலைகள் இயங்கும் கலைகள் எனவும் கொள்ளப்படுகின்றன. இவ் இயங்கும் கலைகளுள் பரத நாட்டிய கலையானது இன்று உலகெங்கும் காணக்கூடிய ஓர் அரும் பெருங் கலையாக இன, மதமொழி, பேதங்களுக்கு அப்பாற்பட்டதாக பல்லின மக்களாலும் பயிலப்பட்டு வருகின்ற கலையாகும். கோயிற் கலையாக வளர்க்கப்பட்டு பின்னர் அரங்கக் கலையாகப் பரிணமித்த, இன்று அவை காற்றுக் கலைகளுள் ஒன்றாக சிறப்பானதோர் இடத்தை பரதக் கலை வகிக்கின்றது.


இலங்கையில் நடனக் கலையானது 1972ஆம் ஆண்டில் கல்விப் பாட விதானத்தில் ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின் கலையைக் குறிப்பதற்கென நடன ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். இன்று பல பாடசாலைகளிலும் கலைவிழா, பரிசளிப்பு விழா, ஆண்டு நிறைவு விழா, நவராத்திரி விழா, சரஸ்வதி விழா, கல்லூரி தின விழா எனப் பல விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. இவ் விழாக்களில் தமிழர் கலை கலாசாரத்தை பிரதி பலிக்கும் வகையில் இசை, நடனம், நாடகம் ஆகியன இடம் பெறுகின்றன. பாடசாலைகளில் நடைபெறும் இவ்வாறான நடன அரங்குகளுக்கு அகில இலங்கை ரீதியில் ஒரு தளத்தை அமைத்துத் தருவன தமிழ் மொழி தினப்போட்டிகள், பாடசாலை, வலய, மாகாண மட்டங்களில் நடத்தப்பட்டும் பின்னர் அகில இலங்கை மட்டத்தில் நடத்தப்படுகின்றன. இப் போட்டிகளில் வெற்றிப் பெறுபவர்களுக்குத் தங்கப்பதக்கங்கள், கேடயங்கள், சான்றிதழ்கள் ஆகியன வழங்கப்படுகின்றன. இச்செயற்பாடானது மாணவர் மத்தியில் கலை உணர்வையும் கலைத் தாகத்தையும் ஏற்படுத்தி அவர்களை இத்துறையில் முழு ஆர்வத்துடன் ஈடுபட வழிவகுக்கிறது.

இன்று பல்கலைக் கழகங்களிலும் கல்விக் கல்லூரிகளிலும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளிலும் பாடசாலைகளிலும் பயிற்றப்பட்டு வருகின்ற நடனக் கலையானது மரபு வழிவந்த பரதக் கலையாகும். பாரம்பரிய பரத நாட்டியக் கலை, கிராமிய நடனங்கள், நாட்டிய நாடகங்கள், புத்தாக்கங்கள் ஆகியன. இன்றைய நடனப் போட்டிகளில் இடம் பெறுகின்றன பல அம்சங்களாகும். போட்டிகள் மாணவரது ஆற்றலை வளர்க்கவும் வெற்றி தோல்வியை சமமாகக் கருதவும். நல்மனப்பாங்குகளை வளர்த்துக் கொள்வதற்கும், போட்டிகளில் பங்காளர்களாக கலந்து கொண்ட பெறுமையினை பெறுவதற்கும் வழி கோலுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1st Row: N. Pradeep, V.Divaskar, J.Regno, Mr.A.Harichandran (Principal), Mr. S.Dickneshwaran (Class Teacher), N.Nitharshan. Thison, R.Mohaneshwaran

2nd Row: P.Suganya, S.Kaushalya, S.Indujah, K.Kumuthini, R.Yadhursha, I.Regina, S.Sanjali, K.Gayathri, M.Saranya, N.Bawanisha, K.Dinupriya, K.Prabawathi, Y.Kuganeshwary, P.Anuja, G.Sasikala, M.Dhanushini, T.Chandrapriya, K.Dharshika, C.MeriyanAnjalina

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில் அறிமுகப்படுத்தியுள்ள அழகியற் கல்வியானது சங்கீதம், சித்திரம், நடனம் ஆகிய தெரிவுப் பாடங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. ஆரம்ப, கனிஷ்ட, இடைநிலைப் பள்ளியிலும் உயர்நிலை வகுப்புகளாலும் நடனப் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டு பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படக்கூடிய விளங்குகின்றது. இசை, சித்திரம் ஆகிய நுண்கலைப் பாடங்கள் ஏற்கனவே பாடத்திட்டத்தில் இடம்பெற்று க.பொ.த (சா/தரப்) பரீட்சைக்கு தோற்றக்கூடிய் பாடங்களாகவும் அமைந்திருந்தன. 1972ம் ஆண்டு இலங்கையின் கல்விச்சீர்த்திருத்தத்தில் ஒரு பாரிய மாற்றத்தினை ஏற்படுத்திய அழகியற் கல்வி பாடநெறியைக் கல்வி அமைச்சு 1974 ஆம் ஆண்டு ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சியாக வழங்கத் திட்டமிட்டு அதனைப் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆரம்பித்தது. ஆசிரிய மாணவர்களின் வசதியைக் கருத்திற் கொண்டு இவ் விசேட பயிற்சி நெறியானது 1978ஆம் ஆண்டில் கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டு இற்றை வரை தொடர்ந்தும் அங்கு நடைபெற்று வருகின்றது.

கல்வி சீர்த்திருத்தத்திற்கமைய உருவாக்கப்பட்ட புதியமுறைக் கல்வித் திட்டத்தில் அழகியற் கல்வியில் ஆக்கம், நயத்தல், கலாசாரப் பின்னனி ஆகிய அம்சங்கள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விடயங்களாகும். இவற்றைத் தன்னுள் அடக்கிய பரத நாட்டிய பாடத்திட்டமானது மாணவர்களின் கற்பனை வளத்தைப் பெருக்குவதற்கும், இரசனை, இரகசியத்தன்மை ஆகியவற்றின் விருத்தி செய்வதற்கும் தமிழ் கலாசார பாரம்பரியத்தினைத் தெரிந்து கொள்வதற்கும் அனுசரனையாக அமைகின்றது.

இன்றைய கல்வி மாணவர் மையக் கல்வியாகும். ஆதலால் இந்த மாணவர்கள் முக்கியத்துவப்படுத்தப் படுகிறார்கள். இன்றைய இளையத் தலைமுறையினரே நாளைய சமுதாயத்தை உருவாக்கி கட்டிக்காக்கப் போகின்றவர்கள். இவ் இளஞ் சமுதாயத்தினர் விழிபுணர்வோடு செயற்படுவதற்கும் நாட்டின் ஒருமைப்பாடு அமைதி ஆகியன குலையாது பேணப்படுவதற்கும் கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றில் இவ் இளைஞர்களின் வளர்ச்சியும் முதிர்ச்சியும் அவசியம் எனக் கருதப் படுகின்றது.

நடனக் கலை மூலம் புதிய சிந்தனைகள், எண்ணங்கள், கருத்துக்கள், கற்பனைகள் என்பன வெளிப்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக திருக்குறளின் எண்ணம் பகுத்தறிவு எழுச்சியுறுவதற்கு அழகியற் கலை ஒரு நிபந்தனையாகும் என்பது கால் மாக்ஸின் கருத்து, மனிதனின் கற்பனைத்திறன், புலன் நுகர் காட்சி சிந்தனை, விருப்பம் ஆகியன எல்லாம் பல்வேறு உளவியல் உள்ளடக்கங்களிலும் பரந்த செயல்களையுடையதொன்றாக அமைகின்றது. ஆகையினால் இது மனிதனின் விருத்தி, ஒழுங்கு, கல்வி, பொதுவான பண்பாட்டு உருவ அமைப்பு ஆகியவற்றில் மிக முக்கிய இடம் பெற்றுள்ளது. முழுமையான ஒன்றினைந்த ஆளுமைத்தன்மையின் விருத்திக்கு தேவையானவற்றின் அழகியற் கல்வியானது ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. காணல், கேட்டல் ஆகியவற்றின் தன்மையை வளமாக்குவதால் கலையானது அழகியல் அறிவை வளர்ப்பதற்குத் தேவையான முன் அறிவைக் கொடுக்கிறது. சிந்தனையானது கலையுணர்வை வெளிப்படுத்தம் என்பது அறிஞர் லெனினின் கூற்றாகும்.

பரத நாட்டிய கலையானது உடல் உறுதியையும் மன வலிமையையும் கட்டமைப்பான தேகத்தினையும், அழகான தோற்றத்தினையும் திட்டத்தையும் அழிக்கின்றது. உடல் நல்ல நிலையில் இருந்தால் தான் உள்ளமும் நல்ல நிலையில் இருக்கும். அத்தோடு "கைவழி நயனஞ் செய்ய" கருத்து ஒருமைப்பாடு அடைவதால் நடனம் உடலை மட்டுமல்ல, உள்ளம், சிந்தனை, ஆகியவற்றின் ஒழுங்குப்படுத்தும் அருங்கலையாக விளங்குகிறது. ஒட்டு மொத்தமாக ஒருவர் சிறந்த ஆளுமையுடையவனாக விளங்குவதற்கு நடனக் கலை ஓர் அரும் பெரும் சாதனமாக விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கியங்களில் பெண்களின் பங்களிப்பு

ஆக்கம்
திருமதி. P.சாந்தலோஜினி
ஆசிரியை

"கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி" தமிழ் என்று போற்றப்படுகின்றது. தமிழ் மொழி சங்க காலத்தில் சங்கங்கள் அமைத்து வளர்க்கப்பட்டது. தமிழானது இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழால் ஆனது. இவ்வாறான வகையில் தமிழை வளர்த்த புலவர்களில் பெண் புலவர்களின் பங்கும் மிகப்பெரியதாகும். ஔவையார் முதல் இன்று வரை இலக்கியங்கள் பல படைத்து தமிழ் இலக்கியங்களில் தங்கள் பங்களிப்பை செலுத்தியுள்ளார்கள் எனலாம்.

இன்று உலகின் பல பாகங்களிலும் தமிழர்கள் இடம் பெயர்ந்து வாழ்கின்றனர். இதனால் நாளுக்கு நாள் தமிழ் மொழி மூலமான இலக்கிய படைப்புக்கள் உலகெங்கிலும் வெளிவருகின்றன. இதற்கு உதாரணமாக இந்தியா, இலங்கை தவிர்ந்த அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, கனடா, சுவீடன் போன்ற நாடுகளைக் கூறலாம். இந் நாடுகளில் குடியேறிய மக்கள் கவிதை, கட்டுரை, பத்திரிகை, நாவல், சிறுகதை என பல இலக்கியங்களை வெளியிடுகின்றனர்.

இலக்கியங்களின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்த பெண்கள் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் பல இலக்கியங்களை படைத்தனர். இந்த வகையில் இந்தியாவில் ஔவையார், காரைக்கால் அம்மையார், ஆண்டாள், போன்ற பெண் புலவர்களையும் இலங்கையில் கோகிலம் சுப்பையா, நளாயினி, நயீமா போன்ற பெண் எழுத்தாளர்களையும் சிறப்பித்துக் கூறலாம்.

இலக்கியங்களின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்த பெண் புலவர்களுள் ஔவையாரை எடுத்து நோக்குவோமானால் இவர் சங்கக் காலத்தில் வாழ்ந்தவர் என்றும் சோழர் காலத்தில் வாழ்ந்தவர் என்றும் சில கருத்துக்கள் கூறப்படுகின்றன. சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையார் அதியமானுக்கு நெல்லிக்கனி தந்தவர் எனவும் கூறப்படுகின்றது. இவர் இலக்கியத்துறைக்கு ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, வாக்குண்டாம் (மூதுரை) போன்ற இலக்கியங்களைப் படைத்து தனது பங்களிப்பினை நிலைநாட்டினார்.

ஔவையார் போன்று இலக்கியத்துறைக்கு பங்காற்றிய பெண் புலவர்களுள் ஒருவர் காரைக்கால் அம்மையார், இவர் புனிதவதி என்ற இயற்பெயரைக் கொண்டவர். சிறுவயது முதல் சிவபெருமான் மீது பக்தி கொண்டவர். தனது கணவனான பரமதத்தன் தன்னை விட்டு பிரிந்து சென்றதால் பொய்யான இவ்வுலக வாழ்வை வெறுத்து இறையருளால் என்புருவைப் பெற்று சிவபெருமானைப் போற்றி திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், அற்புத திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை போன்றவற்றை படைத்தார். இவரது படைப்புக்களில் இருந்தே இவர் வாழ்ந்த காலத்தில் இலக்கியம் உயிர் பெற்று வாழ வழிவகுத்தார். இவர் சங்கமருவிய காலத்தின் இறுதிப்பகுதியில் வாழ்ந்து பல்லவர் கால பக்தியிலக்கியங்கள் சுடர் விட துணைப்புரிந்தவர் எனலாம்.

காரைக்கால் அம்மையாரைப் போன்று பல்லவர் காலத்தில் இலக்கியங்கள் பல படைத்து இலக்கியத்துறைக்கு உதவிப் புரிந்தவர் ஆண்டாள். ஆண்டாள் பெரியாள்வார் என்ற ஆழ்வாரின் புதல்வியாவார். இவர் கண்ணப்பிரானை காதலனாகக் கொண்டு பல பாடல்களைப் பாடியுள்ளார். இவர் பாடிய நூல்களில் நாச்சியார் திருமொழி, திருப்பாவை போன்ற படைப்புக்களை எடுத்துக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் தமிழகத்தின் இன்றைய பெண் எழுத்தாளர்களில் ரமணிச்சந்திரன், தேவிபாலா, அனுராதா ரமணன், லக்சுமி போன்றோர்களும் பல நாவல்களையும் சிறுகதைகளையும் படைத்து இலக்கியத் துறைக்கு பெரும் பணிகளை புரிகின்றனர். இலங்கையில் அதிகமாக தமிழ் நாவல்களை எழுதிய பெருமைக்குரிய எழுத்தாளராக ந. பாலேஸ்வரியைக் குறிப்பிடலாம். தமிழ் நாட்டின் லக்சுமியை போன்று குடும்பப் பாங்கானவையும் தனிமனித உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவையுமான படைப்புக்களை பாலேஸ்வரி வழங்கியுள்ளார். இலங்கையில் குறிப்பிடத்தக்க முஸ்லிம் எழுத்தாளராக நயிமா ஏ. சித்திக் விளங்குகிறார். இலங்கைத்தமிழ் நாவல்த்துறையில் குறிப்பிடத்தக்கவர்களாக கோகிலம் சுப்பையா, கோகிலா மகேந்திரன், தாமரைச்செல்வி, ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம், பூரணி, அசோகா, கவிதா, யோகா, பாலரஞ்சனி சர்மா, ரூபராணி ஜோசப், இஜ்மாலிகா, அன்னலட்சுமி, பவானி, பத்மா போன்றோர்களையும் குறிப்பிடலாம்.

கோகிலம் சுப்பையாவின் "தூரத்துப்பச்சை" என்ற நாவல் நல்ல வரவேற்பினைப் பெற்றது. இவர்கள் அனைவரும் சிறுகதைத் துறையிலும் கூடிய பங்கினை செலுத்தியுள்ளார்.

இவ்வாறு குறிப்பட்ட சில பெண் எழுத்தார்கள் இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் தமிழை வளர்ப்பது போல புலம்பெயர்ந்து வாழும் பெண்களும் ஆங்காங்கே படைப்பிலக்கியத்துறையிலும் ஈடுபட்டு வருகின்றனர். இது தவிர மேலும் பல பெண் எழுத்தாளர்கள் இலைமறைக்காய்களாக ஆக்க இலக்கியத்துறைக்கு தமது பங்களிப்பை செய்து வருகின்றனர். இனிவரும் காலங்களிலும் பெண் எழுத்தாளர்களின் முயற்சிகள் ஆக்கப்பூர்வமாகவும் சமுதாய முன்னேற்றத்தை கருத்திற் கொண்டதாகவும் அமையுமென்பது வெளிப்படை.

# ஐக்கிய அமெரிக்கா

ஆக்கம்
K. கோகனேஸ்வரன்-10'

ஐக்கிய அமெரிக்கா என்று அழைக்கப்படும் அந்நாட்டின் வடக்கே கனடாவும் தெற்கே மெக்ஸிக்கோவும் அமைந்துள்ளன. உலகின் புகழ் பெற்ற கலாசார முறைகளையும் புதிய தொழிநுட்பங்களையும் புதிதாக அறிமுகம் செய்வதில் முன்னோடி நாடாகவும் அமெரிக்கா திகழ்கின்றது. அங்கு இன்றும் அமெரிக்காவில் செவ்விந்திய மக்களை காணலாம்.

கி.பி. 1776 ஜீலை 4 ஆம் திகதி ஐக்கிய அமெரிக்காவுக்கு சுதந்திரம் கிடைத்தது. அமெரிக்காவில் 1861 முதல் 1865 வரை உள்நாட்டு யுத்தம் நடந்தது. அமெரிக்காவின் மொத்த நிலப்பரப்பு 9.161.966 Km. அமெரிக்காவின் மொத்த சனத்தொகை 318,892,103 பேர் ஆகும். அமெரிக்காவின் தலைநகரம் வொஷிங்டன் ஆகும். அமெரிக்காவில் சோளம், கோதுமை உள்ளிட்ட தானியங்களும் காய்கறிகள் மற்றும் பழ வகைகளும் அதிகமாக பயிரிடப்படுகின்றன. அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமா ஆவார். அங்குள்ள அரசியல் அமெரிக்க காங்கிரஸ் கட்டடம் என அழைக்கப்படும். அமெரிக்காவின் இயற்கை வளங்கள் நிலக்கரி, செம்பு, மொலிபீடினம், பொக்சைட், இரும்பு, வெள்ளி, பெற்றோல், எரிவாயு, ஆகும். மோட்டார் வாகன உற்பத்தியிலும் விண்வெளியை வெற்றி கொள்ளும் போட்டியிலும் அமெரிக்கா முன்னனி வகிக்கின்றது. அமெரிக்காவில் உள்ள ஹொலிவுட் நிறுவனம் உலகின் முதல் தர சினிமா தயாரிப்பு நிறுவனமாகத் திகழ்கின்றது.

தேசிய பறவை - கழுகு

தேசிய மலர் - ரோஜா

இனங்கள் :-
வெள்ளையர் - 80%
கறுப்பர் - 12.85%
ஆசியர் - 04%
ஷவாய் மற்றும் பசுபிக் தீவு மக்கள்-0.18%
ஆர்மேனிய மற்றும் அலாஸ்கா மக்கள் - 0.97%

மொழிகள் :-

ஆங்கிலம் - 82.1%
ஸ்பெயின் - 10.7%
ஏனைய இந்து - ஐரோப்பிய - 3.8%
ஆசிய / பசுபிக் தீவுகள் - 2.7%



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கங்காருவின் சிறப்பு

ஆக்கம்
T. கேதீஸ்வரன்

மற்ற விலங்குகளுக்கு இல்லாத தனிச்சிறப்பு கங்காருவுக்கு உண்டு. அது பிறந்த தன் குட்டியை அதனுடனே வைத்திருக்கும். இயற்கையாகவே கங்காருவின் உடல் அமைப்பில் பை ஒன்று உள்ளது. அதன் பெயர் மதலைப்பை. அதனுள் தன் குட்டியை வைத்துக் கொள்ளும். கங்காருகள் பயந்த சுபாவம் கொண்டவை. குதித்தோடக்கூடிய ஆற்றல் கொண்டவை. இவற்றின் பின் புறக் கால்கள் 3 மீற்றர் உயரமுள்ள வேலிகளைத் தாண்டும். மணிக்கு 60 கிலோ மீற்றர் வேகம் செல்லும் ஆற்றல் கொண்டவை. இவற்றில் 40 வகைகள் உள்ளன.

கங்காரு கருத்தரித்து 33 நாட்களில் குட்டி போடும். ஒரு தடவையில் ஒரு குட்டி மட்டுமே போடும். பிறந்த ஒரு கங்காரு குட்டி 2.5 சென்றி மீற்றர் நீளம் இருக்கும். கண்கள் மூடியவாறும், காதுகள் முழுமையாக வளராமலும், வாய் பார்ப்பதற்கு சிறிய அட்டை போன்றும் இருக்கும். முன் புற கால்கள் மட்டும் பாதம் மற்றும் நகத்துடன் வளர்ந்திருக்கும். குட்டி பிறந்தவுடனேயே அவற்றின் பிறவி உள்ளுணர்வால் அதுவாகவே தாயின் மதலைப்பைக்குள் சென்று அமர்ந்துக் கொள்ளும். பின் கொஞ்சம் கொஞ்சமாக உரோமங்கள் வளரும். கண்களைத் திறக்கும், காதுகள் முழுமையாக வளரும். இதன் வளர்ச்சி முழுவதும் தாயின் மதலைப் பைக்குள்தான் நடைபெறும்.

சில மாதங்கள் சென்றப் பின் வெளி உலகிற்கு வரும். ஆனால், ஏதேனும் அபாயத்தை கண்டால் உடனே ஓடிச் சென்று தாயின் மதலைப் பைக்குள் அமர்ந்து கொள்ளும். ஆறு மாதத்தில் இருந்து அவற்றால் பையில் அமர முடியாது.

பைக்குள் இருந்தே குட்டி ஆரோக்கியமாக வளர்ந்து இந்த உலகில் வாழ்வதற்கு ஆயத்தமாகும். தாயின் மதலைப் பைக்குள் இல்லாமல் அவற்றால் வாழவே முடியாது. மிருகங்களிலே குடும்ப பராமரிப்பை முறையாக செய்வது பெண் கங்காரு என்றே சொல்லலாம்.

# கறுப்புப் பெட்டி

ஆக்கம்
N. சிரதீப் - தரம் 10A

விமான விபத்துக்கான காரணத்தை அறிய உதவுவது கறுப்புப் பெட்டி என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அது பற்றி மேலும் சில சுவாரஸ்ய தகவல்கள். கறுப்புப் பெட்டி விமானத்தில் நடக்கும் இரகசியங்களை அறிவதற்காகவே உருவாக்கப்படும் சாதனமாகும். இது இரு விதமான பதிவுக் கருவிகள் அடங்கிய பெட்டியாகும். விமானம் பறக்கும் உயரம், வேகம் ஆகியவற்றை ஒரு கருவி பதிவு செய்யும் மற்றொரு உபகரணம் விமானியின் அறையில் நடைபெறும் உரையாடல்களைப் பதிவு செய்யும்.

கறுப்புப் பெட்டி விமானத்தின் பின் பகுதியில் வைக்கப்பட்டிருக்கும். பொதுவாக விமானம் விபத்துக்கு உள்ளாகும் போது பின் பகுதி பெருத்த சேதம் அடைவதில்லை. 11 ஆயிரம் டிகிரி செல்சியஸ் வெப்பத்தைக் கூட கறுப்புப் பெட்டி சுமார் 30 நிமிடங்கள் வரை தாங்கும் திறன் கொண்டது இப்பெட்டி கறுப்பு பெட்டி என அழைக்கப்பட்டாலும் அதன் நிறம் கறுப்பு நிறம் அல்ல. ஒரேஞ் (செம்மஞ்சள்) வண்ணம் கொண்டது. விபத்து நடந்த இடத்தில் சேதங்களுக்கிடையே எளிதில் கண்டுபிடிக்க செம்மஞ்சள் நிறம் பூசப்படுகின்றது.

இப் பெட்டி விமானத்தில் காணப்படும் ஒரு சாதனமாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுக்கள்

ஆக்கம்
V. நிவாஸ்கர் - 10A



ஒரு தனி மனிதனுடைய ஆற்றலையும் திறமையையும் வெளிக் கொணர்வதற்கான ஒரு உத்தி "விளையாட்டு" என சுருக்கமாக வரையறை செய்யலாம். இவ்வாறு திறமையையும் ஆற்றலையும் அடிப்படையாகக் கொண்டே எந்த விளையாட்டேனும் விளையாடப்படும். இவ்வாறே ஒவ்வொரு விளையாட்டுக்களும் தனித் தனி பண்புகள், வீரர்கள், வீரர்களின் எண்ணிக்கை, மைதான முறை, அவ்விளையாட்டிற்குரிய சட்டத்திட்டங்கள், ஒவ்வொரு விளையாட்டினை கண்காணிக்கின்ற ஒரு அமைப்பு என்பனவற்றை மூலப் பொருளாக கொண்டிருக்கும்.

இவ்வாறே ஒவ்வொரு விளையாட்டையும் எவராயினும் அவர் உணர்வு பூர்வமாக இரத்தத்தின் மூலமாக பற்றிக்கொண்ட விளையாட்டையே உயிர்மூச்சாக கையாண்டு அவ்விளையாட்டை தேர்ந்தெடுத்து அந்த விளையாட்டின் மூலமாக தேர்ச்சி பெறுவர். மேலும் விளையாட்டையே தொழிலாகக் கொண்டு விளையாடும் வீர வீராங்கனைகளும் காணப்படுகின்றனர். மேலும் ஒரு தனி விளையாட்டை இரசித்து ஆதரிப்போருக்கு ஏனையவிளையாட்டின் மீதுள்ள பற்று அல்லது ஈடுபாடு குறைவாகவே காணப்படும். இந்த வகையில் உதாரணமாக கிரிக்கட் விளையாட்டை எடுத்து கொண்டோமானால் இது ஒரு சர்வதேச விளையாட்டாகவே நிகழ்கிறது. இவ் விளையாட்டை நேசித்து விளையாடிய வீரர்களின் தர வரிசையில் நட்சத்திர துடுப்பாட்ட வீரர்களான குமார் சங்க்ககார, மகேந்திர சிங் டோனி, மஹெல ஜெயவர்தன, சச்சின் டெண்டுல்க்கா மற்றும் சேவாக் என்போர் கிரிக்கட்டை நேசித்தவர்கள் என்பதை எளிதாக விளங்கிக் கொள்ள முடியும்.

மேலும் இவற்றை நோக்கும் போது விளையாட்டுக்குரிய ஆதரவாளர்களும் குறிப்பிட்ட வீரர்களுக்குரிய ஆதரவாளர்களும் காணப்படும். உதாரணம்:- இந்திய அணி வீரர் (ஓய்வுப் பெற்ற) சச்சின் டெண்டுல்க்கர் விளையாட்டு மீது கொண்ட அதிகளவான பற்று காரணமாக திறமையானவராக விளையாடி பல ஓட்டங்களை குவித்த இவர் தனது கைக்குள்ளாக 8 மில்லியன் ஆதரவாளர்களை தன்வசம் வைத்திருந்தார். இது இவர் படைத்த சாதனையாகவே இருந்தது. ஆகவே, விளையாட்டை மட்டுமல்ல எதையுமே நேசிக்கக்கூடிய மனப்பாங்கை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நேசிக்க துணிவு கொள்பவன் என்றாவது ஒரு நாள் வெற்றியை அல்லது அவனது குறிக்கோளை அடைந்தே தீருவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ENGLISH JOKES

By - N. Bawanisha

Boy :- Our principal is too stupid
Girl :- Don't you know who I am?
Boy :- No
Girl :- I am the principle's daughter
Boy :- Do you know who I am?
Girl :- No
Boy :- Good (Walks Away)

Teacher :- Why are you late Joseph?
Joseph :- Because, of a sign down the road.
Teacher :- What does a sign have to do with your being later?
Joseph :- The sin said "school ahead, go slow"

Kevin gets drunk and comes home late. To avoid confrontation with his dad. he quietly sits and starts working with his laptop
Dad :- Are you drunk?
Kevin :- No
Dad :- Then what are you doing with my briefcase?
Kevin :- !!!

The teacher asked for sentences using the word "beans".
"my father grows beans". said a girl
"My mother cooks beans" said a boy.
Then a third child spoke up, "we're all human beans: he said.

# ROAD SAFETY

M. Saranya
10

As you are aware the number of road accidents is increasing day by day. This situation has been arisen due to several reasons. As school children we should know road rules well. We should walk on right side of the road. If we want to cross the road, we should use the pedestrian crossing. We should not walk more than two abreast. Accidents take place almost everyday. Unfortunately a considerable number of the victims are school children. There fore special programs should be implemented to teach the children about road safety measures most of our brothers and sisters living in rural areas come to school on foot. They must be very careful because the most of the drivers do not care the road rules or road signals some drivers are in the habit of driving under the influence of liquor.

These who travel to school on their bicycle should keep their bicycles in good condition brakes should be checked regularly. If you travel by bus or by train you should realize the danger in traveling on the foot board. Sometimes you maybe thrown off the vehicle. At present some accidents take place even at pedestrian crossings. It is essential for every child to know about the highway code and the road sins. you must have a thorough knowledge of the road rules. If there is a pavement we should use it without walking on the road.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயில்

ஆக்கம்
சி. நிரஜினா - 10

மயில் பசியானிடே குடும்பத்தின் பேவோ இனத்தைச் சேர்ந்தது. ஆண் மயில் ஆடம்பரமான தோகைக்காக பேர் பெற்றது. ஆண்மயில் பெண்ணைக் கவர்வதற்காக தோகையை விரித்து ஆடும். ஆண் மயில்கள் அழகிய பளபளப்பான நீலம் கலந்த பச்சை நிறமுடையவை. தோகையில் வரிசையாக சுமார் 200 கண் வடிவங்கள் உள்ளன. தோகையை விரிக்கும் போது இவை மிகவும் அழகாக தோற்றமளிக்கின்றன.

இவற்றின் குரல் கரடு முரடாக கேட்க இனிமையற்றதாக இருக்கும். பெண் மயில்களின் உடல் மங்கலான பச்சையும், பளபளப்புக் கொண்ட நீலமும், பச்சை நிறைந்த சாம்பல் நிறமும் கலந்தது. நீண்ட தோகை பெண் மயில்களுக்குக் கிடையாது. நீண்ட தூரம் பறக்க இயலாத மயில்கள் உயரமான மரங்கள் போன்றவற்றில் ஏறி அமர்ந்துக்கொள்ளும்.

# ஆசான்கள்

ஆக்கம்
D. [illegible] - 11

ஆண்டாண்டுக்காலம் வாழ்ந்து
மாண்டு போகாத உமது சேவையில்
இந்த அகிலத்தை ஆளும் பயனாளர்கள்
பல்லாண்டுக் காலம் வாழ
பணியாற்றும் ஆசான்களே!

போர்க்களத்தில் போர் தளபதி
போல நீரும்
படை வீரர்களை போல நாமும்
பரீட்சை எனும் போரில் ஜெயம் பெற
வழிநடத்திய உமக்கு

வெற்றிப் பெற்றால் விசுவாசமாகவும்
தோல்வி அடைந்தால் - அதன்
படிகளால் உயர்ந்திடவும் - அகரம்
கற்று சிகரம் அடைய உதவிய
உமக்கு ஓராயிரம் நன்றிகள்.

இயல், இசை, நாடகம் ஆகிய
முத்தமிழைக் கற்க
முன்னின்று முதல்
கல்லைகளை கல்வியாக
புகட்டிய நினைவாளர்களை
நினைக்க உலக ஆசிரியர்
தினத்தில் அகிலமே உம்மை
புகழ நீடூழி காலம் வாழ
வாழ்த்துகின்றோம் !!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சூழல் திட்டம்

ஆக்கம்
K. விஜயகுமரன்
12 - கலைப்பிரிவு

ஐக்கிய நாடுகளின் சூழல் திட்டமானது (U.N. Enviroment Programme - U N E P) பூகோளச்சூழல் மாசடைவதினை தடுப்பதற்கான திட்டங்களும் ஆலோசனைகளையும் நிதியுதவிகளையும் இது வழங்கி வருகின்றது.

சூழல் பேணலிற்காக உலக வங்கி ஒரு நிதியத்தை ஆரம்பித்துள்ளது. அதனை பூகோள சூழல் நிதியம் (Global environment fund) என்பர். தடுப்பதற்கான திட்டங்களை உருவாக்கி அதனை செயற்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் நிதியுதவிகளையும் ஒவ்வொரு வருடமும் 300 மில்லியன் டொலர் தொடக்கம் 400 மில்லியன் டொலர்களை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு சூழல் பேணலிற்காக வழங்கி வருகின்றனர். ஓசோன் படையைப் பேணல், பேணதகு காட்டு வளம் பேணல், கரையோர எண்ணெய் கசிவு நீக்கல், நதிகளின் கழிவுகளையகற்றல், முதலான கருத்திட்டங்களுக்கு நிதி உதவி செய்து வருகின்றது.

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சூழல் திட்டத்தின் கீழ் (UNEP) காலத்துக்கு காலம் மகா நாடுகளை நடத்துவதோடு அனைத்து ஆணைக்குழுக்களையும் கூட்டி புவிக்கோள சூழற் பிரச்சினைகளை ஆராய்ந்துள்ளனர்.

உதாரணமாக :- ஸ்ரொக்கோம் மாநாடு 1972
புறுண்லாண்ட் ஆணைக்குழு 1987
புவி உச்சி மாநாடு :- 1992

கற்பாறைகளுக்கிடையில் வசிக்கும்


# 'இலங்கை கற்பாறைத் தவளைகள்'

ஆக்கம்
S. சீசோன்

உயிரியல் பெயர் - Nannophrys Ceylonensis

இலங்கையில் காணக்கிடைக்கின்ற கற்பாறைத் தவளைகள், ஈரவலயக் காடுகளில் வசிக்கும் ஈருடகவாழ் உயிரினமாகும். Nannophrys பேரினத்தைச் சேர்ந்தது. இந்த தவளை இனம் இலங்கைக்கு மட்டுமே உரித்தான உயிரினமாகக் காணப்படுகின்றது.

இலங்கையின் ஈரலிப்பு வலயக் காடுகளில் கற்பாறைகளுக்கிடையே இவை வசிக்கின்றன. தவளைகள் வசிப்பதற்கேற்ப கற்பாறைகளில் துவாரங்களை காணலாம். இந்த துவாரங்கள் வருடமொன்றின் அதிக காலம் ஈரலிப்புத் தன்மையுடனேயே காணப்படும். இந்த தவளைகள் பகல் பொழுதில் இத் துவாரங்களில் மறைந்திருந்து இரவிலேயே செயற்படுகின்றன.



இவற்றின் உடல் அமைப்பு தட்டை வடிவமாக இருக்கும். மேற்தோல் பகுதி மஞ்சள் சார்ந்த மண்ணிறமாகவும், பச்சை சார்ந்த மண்ணிறமாகவும் இருக்கும். பாதங்களில் மண்ணிற குறுக்குக் கோடுகளும் புள்ளிகளும் காணப்படும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

## Lekha's Jwellery

**Excellent jewells for your choice**

No. 195, Sea Street, Colombo 11
Tel: 011 2449647

*With Best Compliments From:*

## KawshalyA
Jewellers

**Wholesale and Retail**
**Genuine 22ct Jewellwey**

No. 1st Floor, Sea Street, Colombo 11
Tel: 077 1293984
E mail: kawshalya.jwellery@gmail.com

*With Best Compliments From:*

## Madusha Jewellers

No. 171-1/14,
Sea Street, Colombo 11.
Tel: 011 2430455
Mob: 077 3209186 / 077 3500719

Van For Hire

*With Best Compliments From:*

## Bobby
JEWELLERS

*Orders Executed Promptly Dealers in 22Kt Jewellery*

**Tel : 2449682 / 2458930**
**Fax : 245831**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*



Anusha
Jwellery (Pvt) Ltd

அனுஷா 165 අනුෂා

165 SEA STREET, COLOMBO - 11, TEL: 2338891

*With Best Compliments From:*



G. R. Accessories

**Importers & Wholesale Dealers in Textiles & Garments Accessories**

No. 69, Bankshall Street,
Colombo 11.

Tel: 011 4723414 / 011 2424566
Fax: 011 2342027

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூட்டுவலி ஏற்படுவதற்கான காரணங்கள்

ஆக்கம் - J. ரெக்னோ 10^A

ஆத்திரைடிஸ் மூட்டுவழி குமாட்டாய், ஆஸ்டியே ஆர்த்தரைடிஸ் மற்றும் கீழ்வாதம் அல்லது லூபால் போன்ற இணைப்பு தகவல்களில் ஏற்படும் கோளாறுகள்.

கால்மூட்டு அடிக்கடி அழுத்தத்திற்கு உட்படுவதால் மூட்டை சுற்றியுள்ள கப் வடிவிலான சவ்வு காயமடைவது (அதிக நேரம் முட்டியிடுவதால் அதிகமாக மூட்டுக்களை பயன்படுத்தும் போது) உதாரணம் :- நடப்பது ஓடுவது மற்றும் காயங்கள் ஏற்படுவது.

டெண்டிரைடிஸ் (தசைநார் பாதித்தல்) - மூட்டின் முன் பகுதியில் வலியிருக்கும். மாடிப்படி ஏறி இரங்கும் போது மற்றும் சாயும் போது வலியின் தன்மை அதிகரிக்கும். ஓட்டப்பந்தய வீரர்கள் மற்றும் சைக்கிள் ஓட்டுபவர்களுக்கு இவை ஏற்படும்.

பேக்கர்ஸ் சிஸ்ட் - கால்மூட்டின் பின்புறத்தில் நீர் நிறைந்த பை போன்று வீக்கம் காணப்படுவதால் இந்தப் பை போன்ற சிஸ்ட் உடையும் போது வலி ஏற்பட்டு இந்த வலி முழங்காலுக்கு கீழ் பரவும்.

கார்டிவேஜ் என்னும் எழும்பில் உள்ள திசுக்கள் கிழிவது அல்லது உடைவது. இதனால் உள்வெளி பகுதிகளில் வலி ஏற்படுத்தும் எழும்புகளை ஒன்றோடு ஒன்றாக இணைக்கும் தசை நார் கிழிதல். இதனால் வலி மற்றும் மூட்டை செயற்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது.

சுளுக்கு மூட்டுகளை முறுக்குவதால் எலும்புகளை இணைக்கும் தசை நார்களில் ஏறபடும் சிறுசிறு காயங்கள்.

மூட்டின் சிப்பி இடமாற்றம் அடைதல்.

மூட்டுக்களில் நோய் தொற்றுவது.

மூட்டுக்களில் ஏற்படும் காயங்களால் மூட்டினுள் இரத்தக் கசிவு ஏற்பட்டு வலியை அதிகப்படுத்தும்.

இடுப்பில் ஏற்படும் குறைபாடுகள் அல்லது கோளாறுகள். இதனால் இடுப்பில் வலி ஏற்படும். இந்த வலி மூட்டுப் பகுதிகளில் உணரப்படும்.

அதிக குளிர்ச்சி மற்றும் வெப்பமான கால சூழலில் இருத்தல்.

குறிப்பிட்ட காலத்தில் மூட்டு இணைப்பு சவ்வு வளராமை மற்றும் சாதாரணமாக முழங்கால் மூட்டுகள் மீது போர்த்தப்படாமை.

வழக்கத்திற்கு மாறாக உடல் வெப்பநிலை அதிகரிப்பு.

அறிகுறிகள் :-
இவ்விரு மூட்டு நோய்களையும் சாதாரணமாக வரும் வலியை வைத்து கண்டறியலாம். காலையில் விழிக்கம் போது அதிக வலியுடன் விரைப்புத்தன்மை உடலிலிருந்தால் அதை நியூமொட்டாய்டு நோய் அறிகுறி எனலாம். வயதானவர்கள் இதனால் அதிகம் இயங்க முடியாது. குளிர்க்காலங்களில் உடற் பயிற்சி மற்றும் நடக்கும் போது அதிக வலி ஏற்பட்டால் அது ஆஸ்டியோ ஆாதிரிடிஸ் நோய் அறிகுறி ஆகும்.


சோதனை :-
இரத்த பரிசோதனைகள் மற்றும் எக்ஸ்ட்ரே மூலம் இந்த நோய் இருப்பதை உறுதி செய்துக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைபேசியை முதலில் கண்டுப்பிடித்தவர் அலெக்ஸாண்டர் கிரஹம் பெல் அல்லர்?

ஆக்கம் - I. கேதீஸ்வரன் 10A



தொலைப்பேசியை முதன் முதலாக கண்டுபிடித்தவர் என உலகம் பூராகவும் அறியப்பட்டவர் பிரிட்டனைச் சேர்ந்த அலெக்ஸாண்டர் கிரஹம் பெல் ஆவார். இவருக்கு 16 வருடங்களுக்கு முன்பே தொலைபேசி கண்டுப்பிடிக்கப்பட்டுவிட்டதாம். இத்தாலியைச் சேர்ந்த அன்டொனியா மியூசியே என்பவரே முதன் முறையாக தொலைபேசியைக் கண்டுப்பிடித்துள்ளார். அதனை 2002ஆம் (ஜுன் 1) ஆண்டு அமெரிக்க நாடாளுமன்றம் உத்தியோக பூர்வமாக அறிவித்தது.1860 ஆம் ஆண்டில் மியூஸி முதலாவது தொலைத்தொடர்பு சாதனத்தை கண்டுப்பிடித்துள்ளார். இதுவே முதல் தொலைபேசி என நம்பப்படுகின்றது. இருப்பினும் அப்பொழுது 10 அமெரிக்க டொலர்களை செலுத்தி மியூஸி காப்புரிமை பெறாததினால் 1874 ஆம் அண்டு கிரஹம் பெல்லுக்கு அதற்கான காப்புரிமை வழுங்கப்பட்டதாக அமெரிக்கா காப்புரிமை நிறுவனம் கூறியிருந்தது.

தொலைப்பேசியை கிரஹம் பெல் கண்டுப்பிடித்திருந்த போதிலும் முதலில் கண்டுப்பிடித்தவர் மியூஸி என்று நம்பப்படுகின்றது. ஆனால் கிரஹம் பெல்லே கண்டுப்பிடித்ததாக எல்லோரும் நம்புகிறார்கள். எனவே தொலைபேசியை முதன்முதலாக கண்டுப்பிடித்தவர் அன்டெனியா மியூஸியோ என்பவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சைவ ஆலயங்கள்

ஆக்கம்
K. நிரோபாலினி 10A



திருக்கேதீஸ்வரம் பண்டைய வரலாறு :-

ஆதியில் கேதுவினால் பூசிக்கப் பெற்ற சிவத்தலம் ஆகையால் இது திருக்கேதீஸ்வரம் எனும் சிறப்புப் பெயர் பெற்றது. பின்னாளில் திருக்கேதீசர மூர்த்தியை மயன், மகாதுவட்டா என்னும் இரு தேவதச்சர்கள் பூசித்து திருப்பணி புரிந்ததினால் திருக்கேதீஸ்வரம் மகாத வட்டாப்புரம் எனவும் பெயர் பெறலாயிற்று என்று தட்சிணைகைலாய மான்மியம் கூறுகிறது. மகாது வட்டாபுரம் என்பது காலப்போக்கில் மருவி மாதோட்டம் என வழங்குகிறது. இராவணன் மனைவி மண்டோதரி இத்தலத்தை வழிபட்டாள் எனவும் தீர்த்த யாத்திரைக்காக இலங்கை வந்த அர்ச்சுனன் வழிபட்டான் எனவும் தட்சிணகைலாய புராணம் கூறுகின்றது. விஜயன் கி.மு 6ஆம் நூற்றாண்டில் தன் நண்பர்களுடன் இலங்கையின் வட மேற்கிலுள்ள தம்பதெனியவை அடைந்தான். அவனுடன் இலங்கைக்கு வந்த உபதிஸ்ஸன் என்னும் பிராமணன் திருக்கேதீச்சரத்திலேயே பூசை செய்ததாக மகா வம்சம் கூறுகிறது. எனவே திருக்கேதீஸ்வரம் விஜயனின் காலத்தை விட பழமையானது எனக் கொள்ள முடிகிறது. விஜயனின் வருகைக்கு முன்னரே வாழ்ந்த இயக்கர்களும் நாகர்களும் அத்தலத்தை வழிபட்டு வந்துள்ளனர். இராவணன் இயக்க இனத்தை சேர்ந்தவன் என்பது ஐதீகம். திருக்கேதீஸ்வரத்தை நாகர்கள் வழிபட்டதற்குச் சான்றாக "நாகநாதன்" என்ற ஒரு பெயரும் திருக்கேதீஸ்வர நாதனுக்கு இன்னமும் வழங்கப்படுகின்றது. பிற்கால சோழர்களில் இராசேந்திரன், இடைக்காலப் பாண்டியர்களுள் முதலாம் சுந்தர பாண்டியன் முதலியோர் இவ்வாலயத்தில் திருப்பணிகள் செய்துள்ளனர். சோழர்களது காலத்தால் இராசுவர மகா தேவன் கோயில் என இவ்வாலயம் அழைக்கப்பட்டது. அத்தோடு மாதோட்டம், இராஜராஜப்புரம் எனவும் தேரோடும் திருவீதி ராஜாராஜ பெருந்தெரு எனவும் அழைக்கப்பட்டது. இங்கு தருவி இராமேஸ்வரம் என்னும் சிவாலயம் ஒன்று இருந்ததாகவும் அறியமுடிகின்றது.

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மீது சைவர்கள் மாத்திரமன்றி பௌத்தர்களும் மிகுந்த ஈடுபாடுடையவர்களாக விளங்கினர். இவ்வாறாக பெருமையுடன் விளங்கிய ஆலயம் 1690 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரால் இடித்து அழிக்கப்பட்டது. கடற் பெருக்கால் இருந்த இடம் மறைந்து 300 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் வேதமாகிய தேவாரத் திருவுருவாக மட்டுமே திருக்கேதீஸ்வரப் பெருமான் உறைந்திருந்தார். ஆதலால் புராதன ஆலயத்தின் பிரமாண்டமான அமைப்பினையும் பெருமையும் வெளிப்படுத்தவதாக திருக்கேதீஸ்வரம் விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியின் சிறப்பு

ஆக்கம் - A. சுபாஷினி
தரம் 11A

நமது தாய் மொழி தமிழ் மொழி.... தமிழை உயர்தனி செம்மொழி. செந்தமிழ் மொழி உயர்ந்த மொழி, தனித்த மொழி என்றெல்லாம் கவிஞர்கள் கூறியுள்ளார்கள். தமிழுக்கு "அழகு" எனவும் "இனிமை" எனவும் பொருள் உண்டு. தமிழுக்கு "முத்தமிழ்" என்றும் பெயர் உண்டு. இதனை இயல், இசை , நாடகம் என்றும் கூறலாம். இயற்றமிழ் எண்ணத்தை வளர்க்கும் இசைத்தமிழ் உள்ளத்தை உருக்கி ஒரு முடிவுக்கு வரச்செய்யும். நாடகத் தமிழ் நடந்து காட்டி மக்களை நல்வழிப்படுத்தும்.

மேலும் தமிழைப் பற்றி கூறுவோமாயின் தமிழுக்கு அனேக பெயர்கள் உண்டு. அவற்றில் சிலவற்றை கூறுவோமாயின் சங்கத்தமிழ், சங்குமுகத்தமிழ், தூயத்தமிழ், செந்தமிழ், வன் தமிழ், இருந்த தமிழ் என பல்வேறாக பெரியோர்கள் போற்றி இருக்கின்றனர். இவை அனைத்தும் தமிழின் பெயரையே சிறப்பிப்பன எனலாம். இந்தியாவின் ஒரு பகுதியை தமிழ் நாடு எனவும் அதனையே செந்தமிழ் நாடு என தேசிய கவி, மகா கவி சுப்பிரமணிய பாரதியார் பெயர் சூட்டியுள்ளார். அதிலும் தமிழுக்கு அமுதென்று பெயர், அமுதெங்கள் உயிருக்கு நேர் என்று உயிரையே தமிழுக்கு ஒப்பாக கூறிய கவிஞரே அவர்.

தமிழை பேசுகின்ற ஒவ்வொரு மனிதனும் தமிழின் சுவையினை நன்கறிந்து வார்த்தைகளை தெட்டத் தெளிவாக சொற்களைப் பயன்படுத்தியே பேசுகின்றான். தமிழின் சிறப்புப்பற்றி விளங்கிக்கொள்ள முடியாதவன் தமிழை கொச்சையாக பயன்படுத்துகின்றான். தமிழை சுவைப்பதன் மூலம் சாவேவரினும் அதை இன்முகத்தோடு ஏற்றுக் கொள்கின்ற மனப்பக்குவம் அடைந்தவர்கள் தமிழ் பண்டிதர்கள் ஆவர். தமிழ் மொழியானது எழுதவும் பேசுவதற்கும் மிகவும் எளிதானது. எனவே எளியத்தமிழ், இனியத்தமிழ் எனவும் கூறலாம். தமிழில் ஒரு எழுத்திற்கு ஒரே ஒலி ஆதலால் எவரும் எளிதாக விளங்கிக் கொள்ளவும் எதையும் படிக்கவும் முடிகிறது.

பல அறிஞர்கள் கூட தண்ணீரும் அருந்தாமல் பல மணி நேரம் பேசுவதிலிருந்து கூட இம்மொழியின் சிறப்புப் பற்றி நன்கு அறியலாம். தமிழ் மொழி ஒரு தனி மொழி தனித்துத் தோன்றி தனித்து இயங்கும் சக்தி கொண்டது.

ஔவையார் கூட ஆத்திச்சூடி புத்தகத்தின் முன் பகுதியிலே அழகாக இவ்வாறு கூறுகிறார். "ஆத்திச்சூடி அமர்ந்த தேவனை ஏத்தி ஏத்தி தொழுவோம் யாமே" என்று எனவே செந்தமிழுக்கு தொண்டாற்றிய ஔவையார் பெருமிதத்திற்குரியவர். பாரதி கூட அவரது கவிதையில் வருகிறபோது பாரதியின் நெஞ்சத்தின் பரந்த நிலை பளிச்சிடுகிறது. பாரதியைக் கூட டாக்டர் மே. இராமமூர்த்தி இவ்வாறு கூறுகிறார். தீர்க்க தரிசன கவிஞர் செம்மை மிகுந்தவர் செந்தமிழ்ச் சீராளன். பன்மொழி அறிந்த பண்டிதர் கவிஞன் என்றெல்லாம் பாரதியை குறிப்பிடுகின்றார். காரணம் தமிழ் தமிழுக்கே உயிர் தமிழை தனது செப்பு மொழியாக கொண்டு பல்வேறுப்பட்ட கவிதைகளாக்கி தமிழ் பேசும் மக்களிடையே பெரும் பெருமையைத் தேடித்தந்த கவிநாயகன் பாரதியே. எனவே தமிழின் பெருமையைத் தலைத்தூக்கி விட்டார் என்றுக் கூட நாமும் கூறலாம். இலங்கையை பொறுத்த வகையில் தமிழை தேசிய மொழியாக்கி விட்டார்கள். உயிர் உள்ள வரை தமிழைக் கஸ்டப்பட்டு கடினமில்லாச் சொற்களை பயன்படுத்தி பேசக்கூடிய வகையிலும் இலகுவில் கற்றறிந்துக் கொள்ளக்கூடியதுமான மொழி இதுவாகும். எனவேதான் பாரதி கூட இவ்வாறுப் பாடுகின்றார்.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன் வந்துப் பாயுது காதினிலே - எங்கள்
நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே"

என்று நாட்டை வைத்து தமிழ் மொழியின் சிறப்பை எடுத்துறைக்கின்றார். அன்றும் கூட தமிழின் சிறப்பு உயர்வு பெற்று இருக்கின்றது. தேன் மதுர தமிழோசை உலகமெல்லாம் பரவ வேண்டும். இறவாத புகழுடைய புது நால்கள் தமிழிலே இயற்றல் வேண்டும் என்று பாரதி கவிதையிலேயே குறிப்பிட்டுள்ளார். மேலும் கூறுவோமாயின்,





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!"

என்று தமிழ் மொழி வாழ்த்திலே மகாகவி பாரதி தமிழின் சிறப்பை பாட்டாய் பாடியுள்ளார். இதிலும் தமிழின் சிறப்பு எவ்வாறு தெளிவுப்படுகின்றது என்பது தமிழ் மொழியின் சிறப்பு பற்றிக் கூறுவதில் மகாகவி பாரதியைக் கூறுவது மிகையாகாது.

"முத்தமிழ் இன்பக் களஞ்சியங்கள் - கலை
முத்துக்கள் மாமணிக் காவியங்கள்"

எத்தனை எத்தனை பொன்சுவடி இருந்து இன்பம் தருகின்ற செம்மொழி செந்தமிழ் மொழி என்று கூறலாம்.

அத்தோடு தமிழில் உள்ளடக்கப்பட்ட சில விடயங்களை நோக்கினால், உயிர் எழுத்துக்களில் குறில், நெடில் எனவும் பிரிக்கப்பட்டுள்ளது. சொல் பகுப்பதம், பகாப்பதம், பெயர்ச்சொல், இடைச்சொல், வினைச்சொல், உரிச்சொல் எனவும் புணர்ச்சி, வேற்றுமை, மெய்முன், உயிர் புர்னத்தல், விஷேட சொற்புணர்ச்சிகள், வாக்கிய அமைப்பு, வல்லினம், மெல்லினம், இடையினம் என பல்வேறு கருத்துக்கள் தமிழ் மொழியிலே நிறைந்துள்ளன. உவமானம், உவமேயம் முது மொழி மரபு ரீதியான சில சொற்கள் இருக்கின்றன. இவற்றோடு ஒரு சொல் பல பொருள் போன்ற பல்வேறு அம்சங்கள் இம்மொழியினை சிறப்பிக்கின்றன எனலாம்.

எனவே எல்லா மொழிகளிலும் யாமறிந்த மொழி தமிழ் மொழியே சிறப்புப் பெற்றது. ஆறுமுக நாவலர், வீரமாமுனிவர், சிவஞான முனிவர், கம்பர் போன்றோர் தமிழுக்கென தொண்டாற்றியவர்கள். இன்னும் பலர் தமிழ் மொழிக்கு உரமூட்டியுள்ளனர்.


எனவே இவ்வாறாக யானறிந்த சில விடயங்களை மாத்திரம் தமிழ் மொழியின் சிறப்பு இவ்வாறாக வெளிப்படுகின்றது எனக் கூறுவதில் பெருமிதம் அடைகின்றேன் எனவே எல்லா மொழிகளையும் விட தமிழ் மொழியே சிறப்பு பெற்றது.

"வாழ்க தமிழ்மொழி
வளர்க தமிழின் சிறப்பு"

## நதிகளின் நீளங்கள்

ஆக்கம் - K. பிரவாதி 10

| | |
|---|---|
| பெரியாறு:- | 208 km |
| காவிரியாறு:- | 762 km |
| கோதாறு:- | 1440 km |
| மகாநதி:- | 848 km |
| துங்கபத்திரை:- | 640 km |
| யமுனை:- | 1882 km |
| சிந்து:- | 3040 km |
| பிரம்மப்புத்திர:- | 2880 km |
| வட பெண்ணை:- | 568 km |
| வைகை:- | 623 km |
| பம்பை:- | 260 km |
| பெருநகை:- | 144 km |
| கங்கை:- | 2491 km |




எப்போதும் அச்சத்தில் இருப்பதை விட ஆபத்தை ஒருமுறை சந்திப்பதே மேல்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாப்பகூவ!

ஆக்கம் - G. சசிக்கலா 10^A

இலங்கை மீது அந்நியரின் பார்வைப் பட நம் நாட்டின் இயற்கை வளம் மட்டுமல்ல இலங்கையின் கலை அம்சங்களும் கூட நிச்சயம் ஒரு காரணமாக அமைந்ததெனலாம். இலங்கை மன்னர்கள் தான் வாழும் இடத்தை பாதுகாப்பான அரனாக அமைத்துக் கொள்வதில் செலுத்திய அக்கறைக்கு நிகராக நம் நாட்டிற்கே உரித்தான கலை அம்சங்களைக் கொண்டு அரன்மனைகளை அலங்கரிக்கவும் தவறுவதில்லை. அதற்கு இலங்கையின் புராதான சின்னங்களாக விளங்கும் அரன்மனைகளே சாட்சி! அந்த வகையில் ஈழத்தின் கலை வரலாற்றில் இரண்டாவது சீகிரியா என வர்ணிக்கப்படும் இடமாக திகழ்கிறது யாப்பகூவ அரன்மனை.

இலங்கையின் குருநாகல் மாவட்டத்தின் மகவ கிராமத்திலிருந்து சுமார் 3km தூரத்தில் யாப்பகூவ மலையில் கம்பீரமாக காட்சித்தரும் கிட்டத்தட்ட 300m உயரமான மலையில் உள்ளது அரன்மனை. தம்தெனிய இராசதானிக்குப் பின்னர் இலங்கையில் உருவான இராசதானி இதுவாகும். 1273 இல் 1ம் புவனேக பாகு மன்னனால் அந்த மாளிகைகளும், கோட்டை கட்டிடங்களும் கட்டப்பட்டன. 1ம் புவனேக பாகு மன்னன் இறப்பின் பின்னர் பாண்டிய தளபதியான மாறவர்மன் குலசேகரன் இந்த இராட்சியத்தை ஆக்கிரமித்தான். இங்கு வைக்கப்பட்டிருந்த புத்தரின் தந்ததாதுவைக் கொண்டுச் சென்றவர் மாறவர்மன் ஆவார்.

கலை நயம்மிக்க யாப்பகூவ அரன்மனையைச் சுற்றி 300 அடி உயரமான அரண்கள் கட்டப்பட்டுள்ளன. அழகிய நீர்த்தடாகங்களும் ஆங்காங்கே சேறு நிரப்பப்பட்ட குழிகளும் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள கருங்கற் சிற்பங்கள் 8ம் நூற்றாண்டிற்குரியவை. இக்கட்டிட அமைப்பு தென்னிந்திய கட்டிட முறையை தழுவியமைக்கப்பட்டுள்ளது என்பது நிச்சயமாகும். தற்போது பராமரிப்புகளற்றுக்கிடக்கும் யாப்பகூவ காலப்போக்கில் வனமாக மாறிப்போகும் அபாயம் உள்ளது. உரியவர்களின் பார்வை யாப்பகூவ மீது படும் சந்தர்ப்பத்தில் திராவிட தொடர்புடைய இவ் இராசதானி அடுத்த சந்ததியினருக்கும் பார்க்கக்கூடியதாக இருக்கும்.

# இலங்கையின் பொதுவான கல்வித் தகவல்கள்

ஆக்கம் - திருப்பிரியா 10^A

இலங்கையின் முதலாவது கல்வி அமைச்சர்:- நு. யு. நுகாவெல
பாடசாலையின் வகைகள்:- 1AB, 1C, வகை ii, வகை iii
கல்வியலுக்காக தனிப்பீடம் இருக்கும் பல்கலைக்கழகம்:- கொழும்புப் பல்கலைக்கழகம்
(அடிப்படை கல்வியியலுக்காகவும் சமய கல்விக்காகவும்)
போர்த்துக்கேயர் ஆரம்பித்த பாடசாலையின் வகை:- திண்ணைப்பள்ளி
கிராமப்பிரதேசங்களில் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் கல்வி அமைச்சினால் ஆரம்பித்த புதிய வகை பாடசாலை:- இசுறு
சார்க் வலயத்தில் உள்ள நாடுகளிடையே தேசிய வருமானத்தில் அதிகளவு சதவீதத்தை கல்விக்காக ஒதுக்கும் நாடு:- இலங்கை
பாடசாலை பாடவிதானத்திற்கு தொழில் முன்னிலைப் பாடங்கள் புகுத்தப்பட்ட ஆண்டு:- 1972
அரசாங்கத்தினால் சமயப்பாடசாலைகள் கையேற்கப்பட்ட ஆண்டு:- 1960/61
இலங்கை ஆசிரியர் பிரமாண குறிப்பு சேவை தாபிக்கப்பட்ட ஆண்டு :- 1994
ஆசிரியர் சேவை:- 31.10.1992 திகதியிடப்பட்டு 843/4 இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 6.10.1994 இல் இருந்து அறிமுகமானது.
ஆசிரியர் சேவை தரங்கள்:- 3ii, 3i, 2ii, 2i, 2
கல்வி வலயங்கள்:- 96

உலகில் முதல் கல்வித் துறையில் தேர்வுகளை அறிமுகப்படுத்திய நாடு:- சீனா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "யார் இந்த ஒஸாமா பின்லேடன்?"



ஆக்கம்
C. கேரியன் ஏஞ்சலினா 10

ஒஸாமா பின் லேடன் முஹம்மது பின் அவாத் பின் லாடின் - இது தான் ஒஸாமா பின் லேடனின் முழு பெயர். சவுதி அரேபியாவின் ரியாத் நகரில் 1957 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் திகதி பிறந்தார். சவுதி அரச குடும்பத்துடன் நெருங்கிய நட்புக் கொண்ட நிறுவனமும் உலகப் புகழ் பெற்ற பின்லாடின் குருப் நிறுவனம் ஒஸாமாவின் முக்கிய முகவரி எனலாம். அவ்வாறானதொரு செல்வாக்குமிக்க செல்வந்த குடும்பத்தில் பிறந்தவர் தான் ஒஸாமா.

இந்த குடும்பத்தில் பிரபல தொழிலதிபராக விளங்கிய முஹம்மது பின்லேடனின் 10வது மனைவி ஹமிதாவுக்கு மகனாக பிறந்தார். ஒஸாமாவின் தந்தைக்கு மொத்தம் 52 பிள்ளைகள். அவர் 17வது பிள்ளையாவார். ஜித்தா நகரில் உள்ள அல் தாகர் ஆரம்ப கல்லூரியில் கல்வியைப் பயின்றார். கிங் அப்துல் அஸீஸ் பல்கலைகழகத்தில் பொருளாதாரம் மற்றும் வர்த்தக முகாமைத்துவம் படித்தார். படிக்கும் காலத்திலேயே மதம் தொடர்பான கருத்துக்களில் ஒஸாமா அதிக ஆர்வம் காட்டி வந்தார். புனிதப்போர் தொடர்பாக கூறி வந்துள்ள கருத்துக்களை நிறைய படித்து வந்ததோடு அதில் அதிகமாக கவரப்பட்டார். 1974 இல் திருமண பந்தத்தில் நஜ்வாவுடன் இணைந்தார். 2002ஆம் ஆண்டு கணக்குப்படி அவருக்கு மொத்தம் 4 மனைவிகள் 26 குழந்தைகள்.

பாகிஸ்தானைச் சேர்ந்த தனது பல்கலைக்கழக பேராசிரியரான அப்துல்லா அஜாம் மூலம் விடுதலைப் போராட்டத்தில் கவரப்பட்டார். மக்தாப் அல் மடாமத் என்ற அமைப்பை ஒஸாமா தனது பேராசிரியர் இஜாமுடன் இணைந்து 1984 இல் ஆரம்பித்தார். அத்தோடு 1988-89 ம் ஆண்டு காலப்பகுதியில் அல் கைதா அமைப்பை ஆரம்பித்தார். சட்டங்களுக்கு எதிராக செயல்படுவதாக கூறி சவுதி அரேபியா அரசு ஒஸாமாவின் குடியுரிமையை இரத்து செய்தது. சவுதி அரேபியா அரசு தடை விதிக்கவே சூடானில் அடைக்கலம் புகுந்தார். ஒஸாமா, நைரோபி, கென்யா, தான்சானிய உள்ளிட்ட பல இடங்களில் உள்ள அமெரிக்கா தூதரகங்களிலும் அமெரிக்காவிலும் "அல் கைதா" அமைப்பு குண்டு வெடிப்பை நடத்தியது. இதன் போது சூடானிலிருந்து அவரை நாடுக் கடத்துமாறு அமெரிக்கா சூடான் அரசை வற்புறுத்தியது. சூடானிலிருந்தும் நாடு கடத்தப்பட்ட பின்லேடன் ஆப்கானிஸ்தானில் தஞ்சமடைந்து அமெரிக்காவுக்கு எதிராக புனித போர் என அறிவித்தார்.

உலகையே உலுக்கிய 2001 செப்டெம்பர் 11 சம்பவத்திலும் முக்கிய குற்றவாளியாக ஒஸாமா அறிவிக்கபட்டார். அத்தோடு அவர் மீது அமெரிக்கா பல குற்றங்களை சுமத்தி ஒஸாமாவை தேடுவதாக கூறி ஆப்கானில் தனது இராணுவ நடவடிக்கைகளை கட்டவிழ்த்தது. அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில் 10 ஆண்டு தேடுதல் வேட்டை நடத்தியது. அதற்கான பதில் அவ்வருடம் (2011.05.01) மே மாதம் முதலாம் திகதி கிடைக்கப் பெற்றதாக அறிவிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகங்களின் தோற்றமும் அவற்றின் அவசியமும்...

ஆக்கம் - S. இந்துஜா 10A

நூலகம் என்பது (Library) பொது அமைப்புக்கள், நிறுவனங்கள் அல்லது தனி நபர்களால் உருவாக்கப்பட்டு பேணப்படுகின்ற தகவல் மூலங்களின் அல்லது சேவைகளின் ஒரு சேமிப்பு ஆகும். இந்நூல்களையும் மூலங்களையும் வேறு சேவைகளையும் சேமிப்புகளையும் தாங்களே சொந்தமாக வாங்க விரும்பாத அல்லது வாங்க முடியாத அல்லது ஆய்வுகளுக்காக தொழில்முறை உதவிக்கு தேவைப்படும் மக்கள் பயன்டுத்துகிறார்கள். இதன் மூலம் தமக்குத் தேவையான தகவல்களை இலவசமாக பெற்றுக் கொள்ளக்கூடியதாக அமைகின்றதுடன் எமது அறிவிற்கான தேடலுக்கு சிறந்த களமாகவும் நூலகங்கள் அமைகின்றன.

சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மொசப்பத்தேமியாவில் வாழ்ந்த மக்கள் களிமண் தகடுகளில் எழுதினர். அதனை சூளைகளில் சுட்டு கோயில் அரண்மனைகளில் பாதுகாத்தனர். இவை தனித்தனி ஏடுகளாக துறைவரியாகப் பேணப்பட்டு வந்தன. ஆகவே நூலகத் தோற்றத்தின் முன்னோடி என வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எகிப்தியர்கள் பப்பிரசு தாளில் எழுதத் தொடங்கியப் பின்னர் கி.மு. 300 ஆம் ஆண்டளவில் அலெக்சாந்திரியாவில் ஏழு இலட்சம் பப்பிரசு உருளைகளைக் கொண்ட கருகூலம் ஒன்று அமைக்கப்பட்டது. இது இன்றைய நவீன நூலகங்களின் முன்மாதிரியாகக் கொள்ளத்தக்கது. ரோமானியர்களின் காலத்தில் ஜூலியஸ் சீசர் வசதிப்படைத்தவர்களின் உதவியைப் பெற்று பொது நூலகங்களை அமைத்ததாகவும் கி.மு. 4ஆம் நூற்றாண்டளவில் 28 பொது நூலகங்கள் நிறுவப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

அதன்பின் பிரான்ஸ், எடின்பேர்க், பிரோனிஸ் பல்கலைக்கழகங்கள் நூலகங்களை நிறுவத் தொடங்கின. அமெரிக்காவில் காணப்படும் Library of Congress எனும் நூலகமே உலகின் பெரிய நூலகமாகும்.

# நாட்டார் பாடல்கள் உயிர் பிரவாகத்தின் மூச்சுகள்

ஆக்கம் - I. ஜெஜினா 10A

பாரதியார் பல்வேறு பாடல்களில் நாட்டுப் பாடல்களின் சத்தத்தையும் அமைப்பையும் பயன்படுத்தி இருந்தார். சிறப்பாக பாஞ்சாலி சபதத்தில் நாட்டுப்பாடலின் நடையை பின்பற்றிய புதிய காவிய மரபொன்றையே அவர் தோற்றுவித்திருந்தார். பாரதியாருக்கு முன்னரும் கோபால கிருஷ்ண பாரதியார், இராமலிங்க சுவாமிகள் கும்மி போன்ற நாட்டுப்பாடல் வடிவங்களைப் பின்பற்றி பாடியுள்ளனர்.

சீர்காழிச் சிற்றம் பல நாடிகள், தாலாட்டுத் தத்துவராய தாலாட்டு, நம்மாழ்வார் தாலாட்டு, நீதிநெறித் தாலாட்டு, நால்வர் தாலாட்டு முதலியன மரபு முறையாக வந்த சமய, தத்துவ அறநெறிக் கருத்துக்களைத் தாலாட்டுப்பாடல் வடிவிலே தருவதற்கு செய்யப்பட்ட முயற்சிகளாகும்.

இவற்றை விட பாரதி தாசன், தேசிய விநாயகம் பிள்ளை, நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, வாணிதாசன், முடியரசன் போன்ற கவிஞர்கள், தாய்மார்கள் பாடத்தக்க இனிய சில தாலாட்டுப்பாடல்களை இயற்றித்தந்துள்ளனர். மேலும் நாட்டார் பாடல்களுக்கே சிறப்பாகவுரிய கும்மி, குறவஞ்சி, நொண்டிச்சிந்து, தெம்மாங்கு போன்ற சந்தங்களை இக்கால கவிஞர்களும் திரையிசைப் பாடகர்களும் பெரிதும் பயன்படுத்துவதை காண்கின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015ம் ஆண்டில் பாடசாலையில் இடம் பெற்ற சில நிகழ்வுகள்

மது ஒழிப்பு வேலைத்திட்டம்



கல்வி சுற்றுலா



சிறுவர் தின நிகழ்வுகள்





ஆசிரியர் தின நிகழ்வுகள்





அச்சுப்பதித்தல் இயந்திரம் வழங்குதல் வைபவம்



வாணி விழா நிகழ்வுகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாக வாழ்வின் முன்மாதிரிகை.

ஆக்கம் - S. கௌசல்யா 10A



கிறிஸ்தவ மதம் என்பது தீய வழியில் செல்லும் நபரை மீட்டெடுக்கப் பெரிதும் துணைப்புரிகிறது. இச்சமயமானது எளிமையானதும் மனதுக்குப் பிடித்தமான சமயமுமாகும். இச்சமயத்தை பின்பற்றி வந்தவர்களுள் தூய இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அவரும் ஒருவராவர்.

1920.05.18ம் திகதி போலந்தில் பிறந்தார். இவரது இயற் பெயர் கார்ல் ஜோசப் வொய்ரெல்லா. தாயின் கருப்பையில் இருக்கும் போதே இறைப் பராமரிப்பைக் கொண்ட இவரது வாழ்க்கை துன்பம் நிறைந்ததாகும். 1942 ல் ஜகிலோனியா பல்கலைக்கழகத்தால் இரகசியமாக நடாத்தப்பட்ட இறையியல் பீடத்தில் நான்கு மாணவர்களுடன் சேர்ந்து ஆயர் இல்லத்தில் தங்கிக் கல்வி கற்றார். 1946 ல் குருவாகவும், 1958 ல் ஆயராகவும் அபிகேம் பெற்றார். 1967 ல் கருதினாலாக பதவி உயர்வு பெற்றதோடு, 1978 ல். இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் என்றப் பெயரில் திருத்தந்தையாக தெரிவு செய்யப்பட்டார்.

இவர் 129க்கும் அதிகமான நாடுகளுக்குப் பயணம் செய்துள்ளார். இவர் 1995 தை மாதம் 20ம் திகதி இலங்கைக்கு வருகைத்தந்து தை 21ம் திகதி யோசப்வாஸ் அடிகளாரை அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். இவரால் புனிதராகவும் அருளாளராகவும் உயர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 1823 ஆகும். இவர் 14 சுற்றுமடல்களையும், 110 அப்போஸ்தலிக்க உரைகளையும், II அப்போஸ்தலிக்க அறிவுரைகளையும், பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவர் எழுதிய "குறொசிங் த திரஷ்கோல்ட் ஒப் ஹோப் (crossing the threshold of hope) என்ற நூல் 40 மொழிகளில் மொழிப்பெயர்க்கப்பட்டு, அதன் பிரதிகள் மில்லியன் அளவில் விற்னையாகி உள்ளது. ஜேர்மனியை மேற்கு, கிழக்கு என வேறுப்படுத்திய போலின் மதிலை உடைத்து நாட்டை ஒன்றுப்படுத்துவதில் முன்னின்று செயற்பட்டவர் இவரே. 1981.05.13 ஆம் திகதி துருக்கி இனத்தைச்சேர்ந்த அலி அகா என்பவரால் சுடப்பட்டாலும் குறைப் பராமரிப்பில் மரணத்திலுருந்து காப்பாற்றப்பட்டார். சிறைச்சாலைக்குச் சென்று தன்னைச் சுட்டவனுக்கு மன்னிப்புக் கொடுக்கவும் அவர் தயங்கவில்லை.

2005 சித்திரை மாதம் 02 ம் திகதி இறைவனடி சேர்ந்த இவர் 2011 மே மாதம் 01 ம் திகதி அருளாளர் நிலைக்கும், 2014 சித்திரை 27 ம் திகதி புனிதராகவும் உயர்த்தப்பட்டார்.

இறைவனுக்கு அளப்பறிய சேவையை ஆற்றிய இவர் வாழ்வு எளிமையாகவும், இறைவன் மீது கொண்ட நம்பிக்கையும் மேற்கூறப்பட்டவற்றிலிருந்து இவர் வாழ்வில் வெளிப்படையாகிறது. கிறிஸ்தவராகிய் எல்லோரும் இறைவன் மேல் நம்பிக்கை வைத்து சமூகத்துக்கு நல்ல கிறிஸ்தவர்களாக வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்றமின் குறைபாடு உடல் நல குறைப்பாட்டை தரும்.

ஆக்கம் - N. நிதர்சன் 10A

எமது ஆரோக்கிய வாழ்விற்கு பலவேறு போஷாக்குள்ள உணவு வகைகள் அவசியமாகும். நாம் உணவு மூலம் பெற்றுக் கொள்ளும் இந்த போஷாக்கு பதார்த்தங்கள் நமது நரம்புத்தொகுதியின் வளர்ச்சியிலும் செயற்பாடுகளிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்ததுகின்றன. இந்த போஷாக்குள்ள உணவு பதார்த்தங்களில் ஏதேனும் குறைப்பாடுகள் ஏற்பட்டால் நரம்புத் தொகுதி நோய்வாய்ப்படும். அதனால் பல்வேறு நோய்களுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டிய நிலை வரும். எமது உடலின் இருப்பிற்கு விற்றமின்கள் அத்தியாவசியமானதொன்றாகும். விற்றமின் எனப்படும் போசனை பதார்த்தங்கள் குறைவடைந்தால் உடலில் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படும். குறிப்பாக நரம்பு மண்டல நோய்கள் ஏற்படுவதற்கு விற்றமின் குறைப்பாடுகளே காரணமாகும்.

இதில் நீரில் கரையாதது நீரில்கரையக்கூடியது என விற்றமின் இரண்டு வகை உண்டு. அதில் A, D, E, K என்பன நீரில் கரையாத விற்றமின்களாகும். விற்றமின் B, C நீரில் கரையாத விற்றமின்களாகும். விற்றமின் A குறைப்பாட்டால் கண் விழிப்படலத்தில் உள்ள நரம்புகள் செயலிழந்து போகும். அப்பொழுது இரவு வேளைகளில் கண் பார்வை மிகவும் பாதிக்கப்படும். பார்வை குறைவடையும்.பகல் வேளைகளிலும் பார்வை குறைவடையும். தோல் உலர்தல், அடிக்கடி கை, கால் விரைத்துப்போதல் போன்ற நோய் அறிகுறிகள் தோன்றும். விற்றமின் டி குறைவடைந்தால் நரம்புகளின் செயற்பாடுகள் குறைவடையும். சில சந்தர்ப்பங்களில் நரம்புகள் செயலிழந்து விடும். கை, கால்கள் விறைத்தல், உடல் வலி சக்தியை இழத்தல், போன்ற நோய் அறிகுறிகள் ஏற்படும். இந்நிலை நீடித்தால் கழுத்து முதுகில் அதிக வலி ஏற்படும். விற்றமின் ஈ குறைப்பாட்டால் தசை நார்களின் செயற்பாடு குறைவடையும். தசைப்பிரள்வும் ஏற்படும்.

நரம்புத் தொகுதியின் இருப்பிற்கு மகவும் அவசியமானதும் இவ் விற்றமின்னே ஆகும். விற்றமின் பி இல் பி, பி1,பி 2, பி 6, பி 12 என பல வகைகள் உண்டு. இவற்றில் விற்றமின் பி குறைவடைந்தால் நரம்புத் தொகுதி முறையாக செயற்படாது. அதனால் உடற்செயற்பாட்டில் பெரும் தளர்வு ஏற்படும். கை, கால்கள் விரைத்துப் போகும். விற்றமின்பி 12 குறைப்பாட்டால் சுவாசத் தொகுதி நோய்கள் ஏற்படலாம். சுவாசத் தொகுதி செயற்பாடுகள் பாதிப்படைய வாய்ப்புண்டு. விற்றமின் சி குறைவடைந்தால் சுவாசிப்பதற்கு சிரமங்களை எதிர் நோக்கல், உடலில் சில இடங்கள் விரைத்து போகுதல். உணவில் சில சத்துக்கள் அகத்துறிஞ்சிக் கொள்ளும் செயல் குறைவடைவதால் உடலில் பல மாற்றங்கள் உண்டாகும்.

இதனால் உடல் பலவீனமடைய வாய்ப்புண்டு. விற்றமின்கள் எமது ஆரோக்கியத்திற்கு எந்தளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை இப்போது உணர்ந்திருப்பீர்கள். எனவே இயற்கையான உணவுகளினூடாக உடலுக்கு தேவையான விற்றமின்களை இன்று முதல் பெற்றுக் கொள்வதில் அதிக அக்கரை செலுத்துவதே நலமாயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21st Century Skills

By (Tony wagner in the global achievement gap)
K. Thiyagarajah (Teacher)

1. Critical thinking and problem solving
2. Collaboration across networks and leading by influence
3. Agility and adaptability
4. Initative and enterepreneurialism.
5. Effective oral and written communication.
6. Accessing and analysing information.
7. Curiosity and imagination.



## செஸ் விளையாட்டு வீரன் "விஸ்வநாத் ஆனந்த்" பற்றி.................

ஆக்கம் - S. இந்துஜா 10^A

விஸ்வநாதன் ஆனந்த் இந்திய சதுரங்க (Chess) விளையாட்டு வீரர் ஆவார். இவர் 1969 ஆம் ஆண்டு டிசெம்பர் 11 ஆம் திகதி தமிழ் நாட்டிலுள்ள நாகப்பட்டினம் மாவட்டத்தின் மயிலாடு துறையில் பிறந்தார். இவரின் தந்தையாரின் பெயர் விஸ்வநாதன் ஐயர். இவரின் தாயாரின் பெயர் சுசீலா. இவர் தனது தாயாரிடம் இருந்தே செஸ் விளையாட்டைக் கற்றார்.

2000 ஆம் ஆண்டு முதல் தடவையாக உலக செஸ் சம்பியன் பட்டத்தை வென்ற ஆனந்த், 2007, 2008, 2010 மற்றும் 2012 என மொத்தமாக 5 தடவைகள் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

தனது 14வது வயதில் 1983 இல் இந்தியவின் தேசிய சதுரங்க போட்டியில் 9/9 புள்ளிகள் பெற்று இளநிலை சம்பியன் (Junior Champion) பட்டத்தை வென்றார். 15 வயதில் 1984 இல் தேசிய சம்பியன் (National Master) விருதினைப் பெற்றார். 16வது வயதில் இந்தியாவின் தேசிய சதுரங்க போட்டியில் மீண்டும் சம்பியனானார். இவர் சதுரங்க காய்களை வேகமாக நகர்த்தி மின்னல் பையன் (Lightning Kid மின்னல் வேகக் குழந்தை) என்ற பட்டப்பெயரையும் பெற்றார். 1987 ஆம் ஆண்டு உலக இளநிலை வாகையாளர் என்ற பெருமையை பெற்ற முதல் இந்தியராக பெயர் பெற்றார்.

இவரது நண்பர்கள் விஷி எனச் செல்லமாக இவரை அழைப்பர். பல்வேறு பட்டங்களை வென்றுள்ள இவர் செஸ் விளையாட்டில் உலக சம்பியன் பட்டத்தை வென்ற ஒரேயொரு இந்திய வீரரும் ஈவர். அர்ஜுனாவிருது, இந்தியாவின் தேசிய குடிமகனுக்கான விருது, பத்மஸ்ரீ விருது, ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது, பத்ம பூஷன், பத்ம விபூசன் உள்ளிட்ட பல விருதுகளையும் பெற்றுள்ளார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகங்களும் தமிழ் மொழி வளர்ச்சியும்

ஆக்கம் - K. தர்ஷிகா 10A

ஆதிகாலத்திலிருந்து இன்றைய சமூகம் வரை எல்லா மட்டங்களிலும் ஒரு வகையிலான தொடர்புமுறைகள் இருந்து வருகின்றன. இத் தொடர்பு முறைகள் சமூக நடவடிக்கைகள் சீராக நடைபெறுவதற்கும் பண்பாட்டு கையளிப்பினை மேற்கொள்வதற்கும் வழி ஏற்படுத்துகின்றன. ஆதி காலத்தில் தூது முரசறைதல் என்ற நிலையிலிருந்து பாரிய மாற்றம் பெற்றது பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, தொலைக்காட்சி இணையம் என எத்தனையோ ஊடகங்கள் வளர்ச்சி பெற்றுள்ளது. அவற்றின் தரம் வளர்வதோடு மட்டுமல்லாமல் சமூகத்திற்கு தேவையானவற்றையும் வளர்த்து கொண்டிருக்கின்றன. அந்த வகையில் இச்சாதனங்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றி வருகின்ற பங்கு விதந்து கூறக்கூடியதாகும்.

மிக பழைமை வாய்ந்த தொடர்பு ஊடகமான பத்திரிகை தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வருகின்றது. பத்திரிகைகள் இலக்கிய மறுமலர்ச்சிக்கு அடிப்படையானது எழுத்துருவாக்கம் நிலைபேறாக்கம் புதுமையாக்கம் எழுத்து சீர்த்திருத்தம் போன்றவற்றிற்கும் பத்திரிகைகள் முன்னோடியாக விளங்குகின்றன எனலாம்.

இந்தியாவில் கி.பி 1780 பத்திரிகை இதழ் வெளிவந்தது, 1831 ல் தமிழ் மகசீன் என்ற இதழ் வெளிவந்தது. தமிழில் வெளிவந்த முதல் இதழ் இதுவாகும். இதனை தொடர்ந்து தினவர்த்தமானி சுதேசமித்திரன் போன்றன தோற்றம் பெற்றன. இவை செய்திகளோடு அவ்வவ்போது இலக்கிய விடயங்களையும் வெளியிட்டன. பாரதியாரால் தொடங்கப்பட்ட இந்தியா விஜயா போன்ற பத்திரிகைகளும் திரு.வி.கா.வினால் தொடங்கப்பட்ட தேசபக்தன் நவசக்தி போன்ற பத்திரிகைகளும் தமிழ் இலக்கிய பணியை முழுமூச்சுடன் செய்யத் தொடங்கின. தேசபக்தன் உலகின் தமிழின் இனிமையை வளர்த்து பெருமைக் கொண்டது.

தமிழ் மொழி வளர்ச்சியில் சஞ்சிகைகளும் தமது பங்களிப்பினை செலுத்தாமலில்லை மணிக்கொடி, கலை மகள், கலாமோகினி, கிராம ஊழியன், ஆனந்த விகடன் போன்ற சஞ்கிகைகள் தோன்றின. தமிழ் இலக்கிய வரலாற்றில் மணிக்கொடிக்கு தனியானதோர் இடமுண்டு தற்காலத்தில் பல்லாயிரக்கணக்கில் விற்பனை ஆகும். ஆனந்த விகடன், கல்கி, குங்குமம் போன்றன தமிழிலக்கிய வளர்ச்சியில் புதியதொரு சூழ்நிலையைத் தோற்றுவித்தது.

1930 ல் ஆரம்பிக்கப்பட்ட தினபால், வீரகேசரி, ஈழகேசரி ஆகிய் பத்திரிகைகள் தமிழ் இலக்கிய வளர்ச்சியை நோக்கி செயற்பட தொடங்கி இருப்பினும் தமிழிலக்கிய வளர்ச்சியில் அதிகப்பங்கு கொடுத்தது ஈழகேசரியே ஆகும். ஈழக்கேசரியின் ஆசிரியராக சோ சிவபாத சுந்தரம் இருந்தகாலத்தில் ஈழக்கேசரியை நவீன இலக்கிய வடிவங்களின் பரிசோதனை களமாக விளங்கச் செய்தார். இப்பத்திரிகை "மாணவன் அனுபந்தம்" என்ற பகுதியை வெளியிட்டு புதிய இளம் எழுத்தாளர்களை உருவாக்கியது எனலாம்.

நன்றி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Tale of The Two Classrooms

By: K. Thiyagaraja,
Teacher of English.

| Classroom A (past) | Classroom B (present) |
|---|---|
| 1. Teacher know everything | 1. Teachers are learners |
| 2. Teachers Questions, Kids listen | 2. Kids questions = Kids think |
| 3. Goal is good grades | 3. Goal is learning |
| 4. Memories fact | 4. Problem solving |
| 5. Finish pages | 5. Creative |
| 6. Rules enforced | 6. Rules unnecessary |
| 7. Mistakes | 7. Mistakes = learning |

# மலையகம் மாறும் போது......


ஆக்கம் - K. குமுதினி 10

துளி அளவேனும்
பேச இயலாத ஊமைப்பிறவிகளும்
தனக்குத் தெரிந்த ஒருவித
உலறல் பாஷையுடன் பேசத்தொடங்குவர்!
மலையகம் மாறும் போது

முனைப்பேனையைப் பிடிக்கத் தெரிந்திருந்தாலும்
சிறு அளவேனும் கையெழுத்தில்
தவறுவிடும் வயோதிபர்களும்
என்றாவது வாத்தியார்களாக
பள்ளிக்கூடங்களில் கற்பிக்கத் தொடங்குவர்!
மலையகம் மாறும் போது

"இன்னும் இருக்கிறது தனக்கு வயது'
அதுவரையும் தவழ்ந்துக்கொண்டிருப்போம்
என நினைக்கின்ற குழந்தையும்
தான் இத்தனை நாள் தவறு செய்து
விட்டோம் என நினைத்துத் தாவிச் செல்லும்!
மலையகம் மாறும் போது

நேற்றுத் தான் அடைந்த தோல்விக்காக
இன்றைய வாய்ப்பைத் தவற
விடாத மனிதனும் துடிப்புடன்
வாழ்ந்துக்கொண்டிருப்பான்!
மலையகம் மாறும் போது



அப்போது
இருண்டிருந்த மலையக
மக்களும்
வெளிச்சமாகி
ஒளிவிடுவர்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உடற் பற்றிய தகவல்கள்.

ஆக்கம் - K. காயத்ரி
10

| | |
|---|---|
| ✔ மனிதனின் சராசரி நாடிதட துடிப்பு - | 72 தடவை |
| ✔ உயிரற்ற கலங்களால் ஆக்கப்பட்ட பகுதி - | நகம், மயிர் |
| ✔ முதலில் இறக்கும் பகுதி - | மூளை |
| ✔ நாக்கில் உள்ள நரம்புகள் - | 10 000 |
| ✔ மிக கடினமான உறுப்பு - | கடைவாய்ப் பற்கள் |
| ✔ இதயம் ஒரு நாளில் துடிக்கும் தடவைகள் - | 103 689 |
| ✔ மிக அழுத்தமான தோல் - | கால் பாதம் |
| ✔ தொடை எழும்பு தாங்ககககூடிய எடை - | 3600 பவுண்ட் |
| ✔ தும்மலின் வேகம் - | மணிக்கு 100 மைல்கள் |
| ✔ ஒரு நிமிடத்திற்கு பேசக்கூடிய சொற்கள் - | 150 |
| ✔ உடலில் வியக்கத்தகு பகுதி - | உதடு |
| ✔ ஒரு நாளில் சுவாசிக்கும் தடவைகளின் எண்ணிக்கை - | 6220800 |
| ✔ கண் இமைக்கும் நேரம்- | 75 மில்லி செக்கன் |
| ✔ உணர்வு அதிகமுள்ள விரல் - | சுட்டு விரல் |
| ✔ ஒரு நாளில் உதிரும் தலை முடிகள் (சராசரியாக) - | 40 - 100 வரை |
| ✔ மூளையினை இயக்கும் நரம்புகள் - | 12 கோடி |

# ADAM'S PEAK



By M. Saranya
10th

There are several places of religious importance in Sri Lanka. Among them Adam's peak or Sri Pada is regarded as the most iomportant religious place.

Sri Pada is a special mountain situated in the sabaragamuwa province. The distance from Colombo to this place is 101 km. The height of this mountain is 7362 feet.

The chief significance of Sri Pada is that its scared by people belonging to all the four major religions.

Buddhist believe that the sacred foot print at Sri Pada is that of lord Buddha whileHindus believe the foot print is of God Siva and they call it Sivan Adi Padham. Islamic devotees believe that is the foot print of Adam. So they call it Adam's peak. Christians believe it to be the foot print of Christ's desciple Thomas. Accordingly, Sri Pada ha be come a sacred place of all religions.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகிலுள்ள மிகச் சிறந்த கடற்கரை நகரங்கள் சில....

ஆக்கம் - R. மோகனேஸ்வரன்
10

**சீனாவின் மிக்பெரிய செயற்கை கடற்கரை:-**

உலகின் மிகப்பெரிய அளவில் செயற்கைக் கடற்கரை கட்டிடத்தை சீன தேசம் உருவாக்கியுள்ளது. இதுவரை உலகின் மிகப்பெரிய கட்டிடமாக துபாய் விமான நிலையம் இருந்தது. அதனை மாற்றிய வரலாற்று சாகசத்தை சீனர்கள் உண்டாக்கியுள்ளார்கள். நியு செஞ்சரி குளோபல் மையம் என்ற இந்தக் கட்டிட வளாகத்தில் 1.9 கோடி சதுர அடி பரப்பளவிலான கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. முழுவதும் எஃகு கம்பிகள், கண்ணாடிகளால் உருவாக்கப்பட்ட இந்தக் கட்டிடத்தில் கடைகள், அலுவலகங்கள், வீடுகள் என்பன காணப்படுகின்றன. சூரிய அஸ்தமன வீடியோ காட்சியை காணும் வகையில் மிகப் பெரிய எல்.இ.டி. திரை அமைக்கப்பட்டுள்ளது. இவற்றை விட கட்டிடத்தின் நடுவே மிகப் பெரிய செயற்கைக் கடற்கரையும் கடற்கரை பூங்காக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

**பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ:-**


பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ மிகவும் பிரபலமான கடற்கரை நகரங்களுள் ஒன்று. இங்கு இராணுவக் கோட்டைகள், போர்த்துக்கீச வடிவமுள்ள உல்லாச நடைப்பாதைகள், உணவகங்கள், அழகான இரவு விடுதிகள், போன்றவை அமைந்து இந்த நகரத்திற்கு இன்னும் அழகைக் கூட்டுகின்றது.

**இந்தியாவின் மெரீனா:-**

மெரினா கடற்கரை உலகின் நீளமான கடற்கரைகளில் ஒன்றாகும். இதன் நீளம் 13கி.மீ ஆகும். இந்தியாவின் கிழக்கு கடற்பகுதியில் அமைந்துள்ள மெரீனா இந்திய மாநகரங்களில் ஒன்றான சென்னையின் கடல் எல்லையை வரைவு செய்வதாகவும் அதன் அடையாளங்களில் ஒன்றாகவும் அமைந்துள்ளது. இது இந்தியாவின் மிக நீளமான நகர்ப்புர கடற்கரை ஆகும். மும்பை நகரின் பாறைகள் நிறைந்த ஜிகு கடற்கரையைப் போன்று அல்லாமல் மெரீனா கடற்கரை மணற் பாங்காக உள்ளது. இக்கடற்கரையை ஒட்டி புகழ்பெற்றோரின் உருவச்சிலைகள், நினைவிடங்கள், சமாதிகள் அமைந்துள்ளதால் இது சென்னை நகரின் சுற்றுலா தலங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது.

**ஸ்பெயினின் பார்ஸிலோனா கடற்கரை:-**

பார்ஸிலோனா மத்தியத்தரைக் கடலின் விளிம்பில் அமைந்துள்ளது. மேலும் இங்கு அதிர்ச்சி தரக்கூடிய வகையில் 2.5 மைல் தூரம் வெள்ளை நிற மணல் உள்ளது. இது சுற்றுலா செல்வதற்கு ஏற்ற நகரங்களுக்குள் சிறந்ததாகக் கருதப்படுகின்றது.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிளிமாஞ்சாரோ

ஆக்கம் - J. ரெக்னோ

ஆபிரிக்க கண்டத்தின் மிக உயரமான மலை கிளிமாஞ்சாரோ. கென்யா தங்கனிக்கா எல்லையில், தங்கனிக்கா பகுதியில் உள்ளது. கிளிமாஞ்சாரோ மலைமுடி நைரோபியிலிருந்து 132 மைல் தெற்கே இம்மலை இருக்கிறது. கிளிமாஞ்சாரோவின் உயரம் 19,565 அடிகள். உலகின் கம்பீரமான ஆசிய மலைகளின் ஒன்று இதுவாகும். இம்மலையின் அடிப்பாகம் 40 மைல் குறுக்களவைக் கொண்டது.

கிளிமாஞ்சாரோமலை மீது ஏற முயற்சிகள் பல மேற்கொள்ளப்படுகின்றன. முதன் முதலில் 1848 இல் இம்மலையைப் பற்றி உலகிற்கு கூறியவர் ஜோன்னல் ரெப்மான் என்ற ஜேர்மனிய பாதிரியார். ஆனால் இப்போது யாரும் இவர் கூறியதை நம்பவில்லை. 1861 - 1862 இல் டெக்கான் என்ற மற்றொரு ஜேர்மனியர் இங்கு போய்வந்து கொடுத்த குறிப்புகளை உலகம் ஏற்றுக் கொண்டது.

15 ஆயிரம் அடிகளுக்கு மேல் பனிமுடிக்கிடக்கும் இம் மலை மீது 13000 அடியிலிருந்து 15000 அடி வரை மண்மூடிய பகுதியும் 9,500 அடியிலிருந்து 13000 அடிவரை புல் வெளியும், 6000 அடியிலிருந்து 9000 வரை காடுகளும், 6000 அடிகளுக்கு கீழே பயிரிடுவதற்கான நிலங்களும் 4000 அடிவரை மனிதர் நுழையாத புதர்களும் மண்டிக்கிடக்கும் இம் மலையின் வடக்குப் பகுதி வரட்சியானது. தென் பகுதிதான் வளமான பிரதேசம். இங்கு வாழும் சக்கா இன மக்கள் உழைப்பாளிகள். இங்கு ஏராளமான வாழைகள் பயிரிடப்படுகின்றது. பிக்மி என்ற குட்டையான மாடுகள் உண்டு. 6000 அடியிலிருந்து 9000 அடிகள் வரை மனிதர்கள் வாழ முடியாத பகுதி. 10000 அடிகள் வரை அடர்ந்த காடுகளும் மரங்களும் செடி கொடிகளும் பின்னிப் பிணைந்து கிடக்கும் இப் பகுதிகள் யானைகளின் வாழிடம், காட்டு மான்கள், காட்டுப் பன்றிகள், விதவிதமான பறவைகள், வண்ணத்துப்பூச்சிகள், அணில்கள் ஏராளம்

உலகின் அற்புதங்களில் ஒன்று கிலிமாஞ்சாரோ மலைப்பகுதியின் அழகு என்பது உலகச் சுற்றுலா வாசிகளின் கணிப்பு!

# உடலுக்கு அவசியமான கல்சியம்

ஆக்கம் - உ. மதுஷா 10A

கல்சியம் என்றால் சுண்ணாம்பு. இலத்தீனில் கல்சிஸ் என்ற வார்த்தைக்கு சுண்ணாம்பு என்பதுதான் பொருள். பூமியின் மேட்டில் கிடைக்கும் சாம்பல் நிற சாம்பல் தனிமம்தான் கல்சியம். பூமியில் கிடைக்கும் தனிமங்களில் 05 ஆவது இடத்தை இது பெற்றுள்ளது.

நமது உடலில் இருக்கும் தனிமங்களில் கல்சியமும் ஒன்று. 70 கிலோ மனிதனின் எடையில் 20% கல்சியம் உள்ளது. நம் உடலின் தசைச் சுருங்கி விரியவும் இதயத்தின் இனிமையான தாள லயத்துடிப்பிற்கும் கல்சியத்தின் உதவி தேவை.

அது மட்டுமல்ல காலில் முள் குத்தினாலோ, செருப்பு சுட்டு விட்டாலோ வலி உணர அந்தச் செய்தியை நரம்புகள் மூலம் மூளைக்கு கொண்டு செல்லவும் ஏதாவது வெட்டுக்காயம் ஏற்பட்டால் அதன் வழியே இரத்தம் வெளியேறுவதை தடுத்து இரத்தத்தை உறைய வைக்கவும் கட்டாயம் கல்சியம் தேவை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மட்டுமல்லாமல் நாம் உண்ணும் உணவை இரசிக்க, ருசிக்க மற்றும் கரைக்க தேவையான எச்சிலை சுரக்கவும் உதவி செய்கிறது இந்த கல்சியம். பொதுவாக 30 வயதிற்கு மேல் ஆகிவிட்டால், எலும்பிலுள்ள கல்சியம் மெதுவாக குறைய ஆரம்பிக்கும். ஏனெனில் நம் எலும்புகளின் வளர்ச்சி அத்துடன் நின்றுவிடும்.

ஆகையால் உடல் ஆரோக்கியத்துடன் இருக்க தொடர்ந்து உடலுக்கு வேண்டிய கல்சியத்தை தந்துக் கொண்டே இருக்க வேண்டும். பொதுவாக நம் உண்ணும் உணவில் கல்சியம் சத்து குறைவாக உள்ளது. இது தொடர்ந்து நிகழ்வதாலும் எலும்பிலுள்ள கல்சியம் குறைவதாலும் அரிமானம் ஏற்பட்டு எலும்பின் உறுதி குறையும்.

இந்நிலை குழந்தை பருவத்தில், ஏற்பட்டால், எலும்பு வலுவின்றி வளைந்து ரிக்கெட்ஸ் என்ற நோய் வரும். தினமும் சுமார் 400 தொடக்கம் 500 மில்லி கிராம் வரை கல்சியமானது வியர்வை, சிறுநீர் மற்றும் மலத்தின் வழியே வெளியே தினந்தோறும் குறைகிறது. கல்சியம் பெண்களுக்கு மாதவிடாய் ஏற்படுவதற்கு முந்தைய நாட்களில் மன நிலையை ஒழுங்கப்படுத்துகிறது. இல்லையெனில் பெண்களுக்கு தசைப்பிடிப்பு, எரிச்சல், மன அழுத்தம் போன்றவை ஏற்படும். மாதவிடாயின் போது தினம் 1 கிராம் கல்சியம் எடுத்துக் கொண்டால் பெண்களுக்கு தொந்தரவு இருக்காது.

## நுவரெலியா ஏன் குளு குளு என்றிருக்கிறது?



ஆக்கம் - R. மதுமிரா
10

கோடைக்காலத்தில் கடும் வெயில் வீசுகிற நேரத்தில் நுவரெலியா, ஹட்டன் உள்ளிட்ட மலைப் பிரதேசங்களில் மட்டும் குளு குளுவென்று இருப்பதோடு குளிர் காற்றும் வீசுகிறது. அதற்குக் காரணம் காற்று அழுத்தக் குறைவுதான் கடல் மட்டத்தில் காற்று அழுத்தம் 1000 மில்லி பார் அளவிலுள்ளது. தரையிலிருந்து உயரச் செல்லச் செல்ல காற்று அழுதம் குறைகிறது. அதே போல காற்று அடர்த்தியும் குறைகிறது.

ஓரிடத்தில் வெப்பம் அதிகரிக்கும் போது காற்று மூலக் கூறுகள் ஒன்றோடு ஒன்று முட்டி மோதுகின்ற நிலையில்தான் வெப்பம் அதிகமாக உணரப்படுகிறது. தரையிலிருந்து உயரே செல்லச் செல்ல காற்று மூலக்கூறுகள் குறைகிறது. அவற்றின் இடையே மோதலும் குறைகிறது. ஆகவே வெப்பம் குறைகிறது.

தரையிலிருந்து உயரே செல்லச் செல்ல 1000 அடிக்கு 3.6 டிகிரி பாரன்ஹீட் வீதம் (3.6°F) வெப்பம் குறைவதாக நிபுணர்கள் கணக்கிட்டுள்ளனர்.

பொதுவாக மலைப் பிரதேசங்கள் உயரத்திலுள்ளதால் அங்கு காற்று அழுத்தம் குறைவாகவும் அதன் விளைவாக வெப்பம் குறைவாக, அதாவது குளு குளுவென்று இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சாதனைப் பொக்கிஷங்கள் நாங்கள்

ஆக்கம்
K. சுருதினி - தரம் 10

இந்த நடு வயதிலும் கூட
சிறகுகள் முளைத்திருக்கவில்லை
பறப்பதற்கு!
போசணைக் குறைப்பாடோ, ஏனோ தெரியவில்லை!

ஆனாலும் சாதிப்பதற்கான எண்ணப்பறவை
முன்பே முளைத்துத்தான் இருந்தது.
சாதிப்பதற்கு!
அதிபர், ஆசிரியர்களின் துணையோடு அறிய முடிந்தது.
இனங்காணப்படாத சிந்தனைகள்
எம்முள் இருந்ததை
ஒளிந்து!

அந்த ஒவ்வொரு பொக்கிஷங்களையும்
கவனமாய் செதுக்கி ( தயாரித்து )
அதனை ஒவ்வொரு கையேட்டு வடிவிலும்
அமைத்து அதில்
உள்ள பிழைகளை நுணுக்கமாக
திருத்தி பல இன்னல்களுக்கு
மத்தியில் புத்தகமாக
அச்சிட்டு வெளியிடப்பட்ட
திடீர் இடி மின்னலே
"எமது நடுத்தர இளவயது"



# தமிழ் எண் முறைகள்

By
Thiyagarajah - Teacher

| | | |
|---|---|---|
| 0 | - | 0 |
| க | - | 1 |
| உ | - | 2 |
| ங | - | 3 |
| ச | - | 4 |
| ரு | - | 5 |
| சா | - | 6 |
| எ | - | 7 |
| அ | - | 8 |
| கா | - | 9 |
| ய | - | 10 |



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் போட்டிகள் - OLYMPIC GAMES

ஆக்கம் - S.இந்துஜா

| இல | ஆண்டு | போட்டி நடைபெற்ற இடம் |
|---|---|---|
| 01. | 1896 | ஏதென்ஸ் - கிறீஸ் |
| 02. | 1900 | பாரிஸ் - பிரான்ஸ் |
| 03. | 1904 | சென்லூசியா - அமெரிக்கா |
| 04. | 1908 | லண்டன் - இங்கிலாந்து |
| 05. | 1912 | ஸ்டொக்கோம் - சுவீடன் |
| 06. | 1916 | பேர்லின் - ஜேர்மனி |
| 07. | 1920 | அன்டர்வேர்ப் - பெல்ஜியம் |
| 08. | 1924 | பாரிஸ் - பிரான்ஸ் |
| 09. | 1928 | ஆம்ஸ்டர்டாம் - நெதர்லாந்து |
| 10. | 1932 | லொஸ்ஏஞ்சல்ஸ் - அமெரிக்கா |
| 11. | 1936 | பேர்லின் - ஜேர்மனி |
| 12. | 1940 | உலகயுத்தம் காரணமாக போட்டிகள் எதுவும் நடைபெறவில்லை |
| 13. | 1944 | உலகயுத்தம் காரணமாக போட்டிகள் எதுவும் நடைபெறவில்லை |
| 14. | 1948 | லண்டன் - இங்கிலாந்து |
| 15. | 1952 | ஹெல்சிங்கி - பின்லாந்து |
| 16. | 1956 | மெல்போர்ன் - அவுஸ்திரேலியா |
| 17. | 1960 | ரோம் - இத்தாலி |
| 18. | 1964 | டோக்கியோ - ஜப்பான் |
| 19. | 1968 | மெக்சிகோ சிட்டி - மெக்சிகோ |
| 20. | 1972 | முனிச் - ஜேர்மனி |
| 21. | 1976 | மொன்றியல் - கனடா |
| 22. | 1980 | மோஸ்கோ - சோவியத்யூனியன் |
| 23. | 1984 | லொஸ்ஏஞ்சல்ஸ் - அமெரிக்கா |
| 24. | 1988 | சியோல் - தென்கொரியா |
| 25. | 1992 | பார்சிலோனா - ஸ்பெயின் |
| 26. | 1996 | அக்லாண்டா - ஜோர்ஜியா |
| 27. | 2000 | சிட்னி - அவுஸ்திரேலியா |
| 28. | 2004 | ஏதென்ஸ் - கிரிஸ் |
| 29. | 2008 | பீஜிங் - சீனா |
| 30. | 2012 | லண்டன் - இங்கிலாந்து |
| 31. | 2016 | பிரேசில் - ரியோடிஜெனிரோ |
| 32. | 2020 | ஜப்பான் - டோக்கியா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Cooking and Preserving Food*

By - R. Yadusha 10[th]

*Raw foods such as fresh vegetables have to be washed well. before they are eaten. Many foods are cooked. We can fry, boil, steam, bake or roast food. Cooking makes food soft, tasty and easy to digest. Cooking kills germs in foo. Over - cooking food can spoil it. All the minerals and vitamins are removed from food if it is over cooked.*

*Frying, Boiling, Steaming, Roasting, Baking.*

*When exposed to air, food can go mouldy and germs can begin to grow in it. We have ways to preserving food. So that it stays fresh.*

*Food that is put into cans bottles is kept free from air. Certain chemicals and added to the food to preserve it. These are called preservatives.*


*Foods can be frozen, Some foods are dehydrated by removing water from them. They are then sealed in tins or packets. Some foods can be salted. This helps to preserve it. Bacteria cannot grow in frozen dehydrated or salted food.*

# සිතාවට ඉඩක්

ஆக்கம்
[illegible] - ஆசிரியர்

හුරුබුහුටි බලාපොරොත්තුවක්......
මුවගේ රැඳි සිනාරැල්ලක්.......
ඒක්වුනු තැනක නැත කදුලක්
සිගිති මුව කමල..... දුනික විට
අමතක යයි මුග ලොවම
පුංචි දොනිගේ සිතාවට.... යටයි
හිතේ පරිමිතා දොමිතසේ

නොදෙන මේ කුරිරු ලොවගෙන
සිතාසෙයි මුලු ලොවසමග
එත් මගේ දුව පුතුනේ
ඔබේ සිතාව සොරාංගෙන යන්නට
මානතාවූ ලෝකයකි මේය
පැහැම්...... ඒක් තුබ සෝයන නිදහස
කවදා හෙක් ලැබෙන්නට






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் முற்காலக் குடியிருப்புகள்

ஆக்கம் - R. பிரபாவதி
10



இலங்கைக்கு இடம் பெயர்ந்து வந்த மக்கள் கூட்டங்கள்.

S/L நாகரீகம் ஏறக்குறைய 2500 வருடங்களை விட பழமையானது. அதாவது ஏறக்குறைய கி.மு 6ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்திலிருந்து S/L நாகரிகம் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. அதற்கு முன்னர் இந்த நாட்டில் வாழ்ந்த மக்களைப் பற்றிய மரபுக்கதைகள் பல உண்டு. இந்த நாட்டில் வாழ்ந்தவன் என்று கருதப்படும் இராவணன் என்னும் ஓர் அரசனைப் பற்றியும், இயக்கர் நாகர் என்னும் ஆதிக்குடிகளைப் பற்றியும் பல மரபு வழிக்கதைகள் பல உண்டு. எனினும் இவர்களைப் பற்றி நம்பத்தகுந்த சான்றுகள் எவையும் கிடைக்கவில்லை. எனவே, இவர்களைப் பற்றி எதனையும் திட்டவட்டமாக கூற முடியாது.

இந்தியாவில் இருந்து வந்தவர்கள் S/L குடியிருப்புக்களை அமைத்தனர். இவ்வாறான இடப்பெயர்வுகள் மிகவும் முற்பட்ட காலத்திலும் இடம் பெற்றன. ஆகவே அக்காலத்தில் உண்மையாகவே என்ன நிகழ்ந்தது என்றுக் கூறுவது கடினமாக உள்ளது. இதுவரை கிடைத்துள்ள சான்றுகளின் படி அவ்வாறு இடம் பெயர்ந்து வந்துள்ளவர்கள் வட இந்தியபவிலுள்ளவர்கள். அவர்கள் ஆரிய மொழிகளை பேசும் கூட்டத்தினராவர்.

திராவிட மொழிகளை பேசிய மக்கள் கூட்டத்திலுருந்து தென் இந்தியாவிலுருந்து காலத்துக்கு காலம் இங்கு வந்துள்ளனர். இவர்கள் ஆரியர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். ஆகவே இதிலிருந்து தெரிய வரும் கருத்து இங்கு குடியேறிய மக்கள் ஒரே இனத்தவர் அல்ல.

குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டமைக்கான காரணங்கள்:-

அந்தக் காலத்தில் S/L க்கு இடம் பெயர்ந்த மக்களின் வாழ்க்கைக்கு வழி வகுத்த தொழில் விவசாயமாகும். எனவே பயிர்ச் செய்கைக்கு தகுதியான பிரதேசங்களைக்கருத்திற் கொண்டு அவர்கள் தங்களுடைய குடியுருப்புக்களை தெரிவு செய்தனர். அவர்கள் இங்கு குடியேறியப் பிறகும் நெற் பயிர்ச்செய்கையைத் தொடர்ந்து செய்து வந்தனர். ஆயினும் அவர்களுக்கோ குடியிருப்புகளை அமைப்பதற்கோ உகந்ததாக அமையவில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்டோஸ் 10 (Windows 10) புதிய வசதிகள் என்னென்ன?

ஆக்கம்
திருமதி. K. ஜெயானந்தினி - ஆசிரியை

கணிணி துறையில் முடி சூடா மன்னனாக விளங்கி வரும் மைக்ரோசொப்ட் (Microsoft) தனது முதல் இயங்கு தளமான எம்.எஸ் விண்டோஸ் கடந்த 1985ம் ஆண்டு வெளியிட்டது.

தற்போது சரியாக 25 ஆண்டுகள் அதாவது கால் நூற்றாண்டுக்கு பிறகு Windows 10 இயங்கு தளத்தை வெளியிட்டுள்ளது.

இந்த 25 ஆண்டுகளில் அதன் வளர்ச்சி அபரிவிதமானது. எனினும் அதன் முந்தைய வெளியீடான Windows 8 எதிர்ப்பாராத அளவு வாடிக்கையாளர்களை கவரவில்லை. எனவே உடனடியாக ஒரு புதியதை வெளியிட்டாக வேண்டிய கட்டாயத்தில் Windows 10 தற்போது வெளிவந்துள்ளது.

கடந்த யூலை 29ம் திகதி வெளியிடப்பட்ட Windows 10 வாடிக்கையாளர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இது வெளியிடப்பட்ட 24 மணித்தியாலங்களில் 1 கோடிக்கு அதிகமானவர்கள் இந்த இயங்குதளத்தை பயன்படுத்தி இருப்பதே இதற்கு சாட்சி.

சரி Windows 10இன் முக்கிய அம்சங்களை பார்ப்போம்.

✔ விண்டோஸ் 7ல் இருந்தது போன்று ஸ்டார்ட் மெனுவை (start menu) சிறிதாக மீண்டும் கொண்டு வந்துள்ளது.

✔ மேலும் இதில் இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர்க்கு (Internet Explorer) பதிலாக கோர்டானா (Cortana) என்ற புதிய செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலமாக உங்கள் தேடல் எளிமையாக இருக்கும்.

✔ ஒரே நேரத்தில் நான்கு அப்ளிகேசன் வரை பயன்படுத்தலாம்.

✔ எக்ஸ்புலோருக்கு மாற்றாக எட்ஜ் பிரிவுசர் (Edge Browser) இணைக்கப்பட்டுள்ளது. இதன் அதிவேக பிரவுசர் மூலம் உங்கள் நேரம் மிச்சப்படும்.

✔ விளையாட்டு பிரியர்களுக்காகவே எக்ஸ் பாக்ஸ் (X Box) செயலியும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு சிறந்த கேமிங் அனுபவத்தை பெறலாம். சாதாரண கணனியை மட்டுமன்றி தொடுதிரை வசதியுள்ள சாதனங்களையும் மனதில் வைத்து இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

✔ வட்ஸ் அப்பை (Wats app) கணணியில் பயன்படுத்தும் வகையில் வாட்ஸ் அப் வெப் என்ற சேவையை கொண்டு வர முடிவு செய்துள்ளது.

✔ மேலும் Windows 7 மற்றும் Windows 8 பயன்படுத்தி வந்தவர்கள் இலவசமாக Windws 10 க்க தரம் உயர்த்தி கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.

மொத்தமாக பார்த்தால் இதன் முந்தைய பதிப்பான Windows 8 (8.1) ஐவிட பல சிறப்பு வசதிகளுடன் Windows 10 களமிறங்கியுள்ளது.

நன்றி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# புவி வெப்பமடைதல்

ஆக்கம்
[illegible] சந்திரப்பிரியா

புவி கோளினை ஓசோன்படை சூரிய கதிர்களில் நேசமானதையும் தேவையான வெப்பநிலையை தக்க வைத்துக்கொள்வதற்கும் தேவையற்ற வெப்பக்கதிர்களை வெளியேற்றுவதற்கும் இது காரணமாக இருக்கின்றது. இது ஒரு பச்சை வீடு போல செயற்படுகின்றது. இதுவே புவி வெப்பமடைதல் எனப்படும். புவிச்சூழலில் Co2(கரியமில வாயு: $Co_2$ & $Co_1$ ), மீதேன், $So_2$ நைதரொட்சைட்டு ($No_2$), குளோரோ புளோரோ காபன் ($CFC_{11,12}$) தாழ் ஓசொன் மற்றும் நீராவி இவை வளிமண்டலத்தில் குவிந்து வெப்பத்தை உறுஞ்சுகின்றன. இதனாலேயே புவி வெப்பமடைகின்றது.

புவி வெப்பமடைவதற்கான காரணங்கள்:-

உயிர்ச்சுவட்டு மற்றும் காடுகள் எரிக்கப்படல் அல்லது அழிக்கப்படல். உ+ம் : இதனால் கரியமில வாயு தோன்றுகிறது இது சுமார் 50% பூகோள வெப்பத்திற்கு காரணமாகும்.

நிரப்பபட்ட சதுப்பு நிலம், நெற்செய்கை வயல்கள், மாடுகளின் சானம் மற்றும் இரைமீட்டல் போன்ற தொழிற்பாடுகள் (உ+ம். மீதேன் வாயு தோன்றல்)

இரை மீட்டல் விலங்கினங்கள் அதிகரித்தல்

இயற்கை காரணியான எரிமலை வெடிப்பு

கைத்தொழில் நடவடிக்கைகளாக உருவாகும் வாயுக்கள். (உ+ம். நைதரொட்சைட்டுகள்.) இது 6% பூகோள வெப்பத்திற்கு காரணமாகும்.

சூழலில் ஏற்படும் விளைவுகள்:-

பனிமலை உருகுதல்
கடல் மட்டம் உயர்தல் (உ+ம் - பங்களாதேசம், மாலைதீவு)
கரையோர அன்றாட நடவடிக்கைகளால் பாதிக்கப்படல்.
கரையோரம் தின்னப்படல்.
உயிர்ப் பெருந்திணிவு பாதிக்கப்படல்.

சூழலில் ஏற்படும் தாக்கம்:-

பருவக்காலநிலை மாற்றம்
அருமைமிகு உயிர்ப் பல்வகைமை அருகிவரல்
காலநிலை அனர்த்தங்கள் உருவாதல்
பசுமை சுருங்கல் மற்றும் பாலை விரிதல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்களின் விந்தை

ஆக்கம்
N. பவனிஷா
தரம் 10A

சர்வதேச ரீதியில் யாவரும் அறிந்த விடயம் எதுவென்று கேட்டால் இலக்கங்கள் என்றே கூறலாம். 0,1,2,3,4,5,6,7,8,9 ஆகிய எண்களை அறியாதவர்கள் யாரும் இல்லை. எவ்வளவு பெரிய எண்ணாயிருந்தாலும் 1-9 வரையுள்ள எண்களே மாறி மாறி வரும். இருந்தாலும் இவ்வெண்கள் சில சந்தர்ப்பங்களில் எம்மை வியக்க வைக்கும் விந்தையான விடயங்களை உள்ளடக்கி இருக்கும். அவ்வாறான சில சந்தர்ப்பங்களை அவதானிப்போம்.



எண் 1இன் விந்தை.

0 x 9 + 1 = 1

1 x 9 + 2 = 11

12 x 9 = 3 = 111

123 x 9 + 4 = 1111

1234 x 9 + 5 = 11111

12345 x 9 + 6 = 111111

123456 x 9 + 7 = 1111111

1234567 x 9 + 8 = 11111111



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடருந்து வரும் எட்டுக்கள்.

$$9 \times 9 + 7 = 88$$
$$98 \times 9 + 7 = 888$$
$$987 \times 9 + 7 = 8888$$
$$9876 \times 9 + 4 = 88888$$

விசித்திர எண் 15873

$$7 \times 15873 = 111111$$
$$14 \times 15873 = 222222$$
$$21 \times 15873 = 333333$$

விசித்திர எண் 15873

$$7 \times 15873 = 111111$$
$$14 \times 15873 = 222222$$
$$21 \times 15873 = 333333$$

விசித்திர எண் 37.

$$37 \times 3 = 111$$
$$37 \times 6 = 222$$
$$37 \times 9 = 333$$
$$37 \times 12 = 444$$

142857 இன் விந்தை.

1 - 6 வரையுள்ள எண்களால் இவ்வெண்ணை பெருக்கும் போது இதே இலக்கங்களை கொண்ட எண்ணே விடையாக வரும்.

$$142857 \times 6 = 857142$$
$$142857 \times 5 = 714285$$
$$142857 \times 4 = 571428$$
$$142857 \times 3 = 428571$$
$$142857 \times 2 = 285714$$
$$142857 \times 1 = 142857$$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் பாடலில் தாலாட்டு

ஆக்கம்
திருமதி. பு. சாந்தலோஜினி
(ஆசிரியர்)

"முந்தின" வழக்கம் மங்கிவிடவில்லை என்பது தொல்காப்பிய வழக்கு. மகளிர் கப்பலேறி தமிழ் நாட்டுக்குச் செல்லலும் வழக்கம் பண்டைய காலத்தில் இருந்ததில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் ஏற்பட்ட மாற்றங்களால் ஆயிரக்கணக்கான மக்கள் கடல் கடந்து இலங்கையில் குடியேறினர். இவர்கள் ஏழைகளாகவும் கல்வியறிவு இல்லாதவர்களாகவும் இருந்தனர். எனினும் வாய்மொழி இலக்கியமும், கலைகளும் செழித்தோங்கின தங்கள் இன்பத்துன்பத்தை வெளியேற்றும் வடிகாலாக பாடல்களை அமைத்தனர்.

இப்பாடல்களை நாட்டார் பாடல்கள் என குறிப்பிடப்படுகின்றன. நாட்டுப்பாடல்கள் எளியவை,, பரிசுத்தமானவை, பொய்க்கலப்பற்றவை., இனிமையும், இசைப்பொலிவும் நிறைந்தவை. செயற்கை பூச்சுக்கள் இப்பபாடல்களில் மது படிவதில்லை. நாட்டார் பாடல் எனும் தேவதையின் நெஞ்சமே தாலாட்டு பாடல்களாகும்.

"தாய்மை" உலகிற்கு வழங்கிய முதல் இலக்கிய பரிசுதான் தாலாட்டு: என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குழந்தையை தூங்க வைப்பதற்காக தாயின் பாச உணர்வுடன் எழுதுவதே தாலாட்டுப் பாடல். இது குழந்தை நெஞ்சில் இடப்படுகின்ற

தாலாட்டு என்கிற சொல் இலக்கியத்திலும் நாட்டுப்புறப்பாடல்களிலும் இடம் பெற்றுள்ளது. தாலாட்டு, தாராட்டு, தாலேலோ, ஓராட்டு, ரோராட்டு, ராராட்டு, தொட்டில் பாட்டு என பலவாறு உலக வழக்கில் வழங்கி வருகின்றது. தாலதட்டின் இசையொன்று, இராகம் நீலாம்பரியாகும்.

ஆராரோ ஆரிராரோ ஆராரோ ஆரிராரோ, ராரி ராரி ராராரோ போன்ற பொருளற்ற ஓசையுடன், தொடர்புடைய சொற்களும் கலந்து வருவதுண்டு. தாலாட்டில் குழந்தையை தூங்கும்படியே தாய் வேண்டுகிறாள்.

"வாகன தொட்டிலிலே - கண்ணே நீ
வச்சிரம் போல் தூங்கிடம்மா
மேலு வலிக்காம - கண்ணே நீ
மெத்தை மேல படுத்துறங்கு."

என்றும்,

"மகிழம்பு கொய்ய வந்த மகனாரை யாரடித்தார்?
ஆரும் அடிக்கவில்லை ஐவிரலும் தீண்டவில்லை.
தானே அழுகின்றான் தம்பித் துணை வேண்டுமென்று
அவனா அழுகின்றான் ஆத்தாள் மடித்தேடி"

"தங்கத்தால் ஆணைகளும் தந்தத்தால் சேனைகளும் சொர்ணமே நான் தருவேன். என்று குழந்தைக்கு வாக்குறுதியும் அளிக்கிறாள் தாய். சிறந்த கற்பனைகளையும் தாலாட்டில் காணலாம்.



கோபமாக இருந்தால் பத்து வரை எண்ணுங்கள். ரொம்ப கோபமாக இருந்தால் நூறு வரை எண்ணுங்கள். ATMV

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி அழுத கண்ணீர் ஆறாக பெருகி
ஆனைக் குளித்தேறி குளமாகத் தேங்கி
குதிரைக் குளித்தேறி வாய்க்காலளாய் ஓடி
வழிப்போக்கர் வாய்க் கழுவி
இஞ்சிக்குப் பாய்ந்து எலுமிச்சைக்கு வேரோடி
மஞ்சலுக்கு பாய்ந்து மருதோண்டி வேரோடி
தாளைக்கு பாய்ந்து தழும்பியதாம் கண்ணீரும்
வாழைக்குப் பாய்கையிலே வற்றியதாம் கண்ணீரும்."

"விளக்கிவிட்ட வெண்ணெய் போல
வெந்துருகி நிற்கையிலே
கலத்திலிட்ட பால் போல்
கைக்குழந்தை தந்தாரே"

என்று உவமைகளும்

"வானத்து மீனோ கேமகத்து மின்னொளியோ!
மார்பின் மணியொளியோ பக்கத்து முத்தொளியோ!"

என உருவங்களும் சிறந்து விளங்குகின்றன.

தாலாட்டுப் பாடல்களில் பழமொழிகளும் இடம் பெறுவதுண்டு. "தைப்பிறந்தால் வழிப் பிறக்கும்" என்ற பழமொழியானது, "தைப்பொறக்குமடா உங்கப்பன் குடி ஈடேற" என்று வருகின்றது. "அத்திமரம் குத்தகையாம் ஐந்துலட்சம் சம்பளமாம் சாமத்தலை முழுக்காம் உங்கப்பாவுக்கு சர்க்கார் உத்தியோகமாம்"

என்று தந்தை, சகோதரன், கணவன் என்போரை போற்றுவதுண்டு. நாட்டுப்புற தாலாட்டை திரைப்பாடல்களிலும் நாம் காணலாம்.

"ஏழைக்குடிசையிலே ஏன் பிறந்தாய் செல்வமுத்தே
எத்தனையோ சீமாட்டி ஏங்கி தவங்கிடக்க
என் வயிறுதான் தேடி ஏன் பிறந்தாய் செல்வமுத்தே"

என் தாலாட்டை

"ஏன் பிறந்தாய் மகனே ஏன் பிறந்தாயோ....?
இல்லையொரு பிள்ளையென்று
ஏங்கினோர் பலரிருக்க
இங்கு வந்து ஏன் பிறந்தாய் செல்வ மகனே....?"

என்ற திரப்பாடலில் காணலாம். மலையக தாலாட்டுப்பாடல்கள், தமிழகத் தாலாட்டுப்பாடல்களையே பிரதிபலிக்கின்றன. அதில் ஏக்கமும் இயலாமையும் இலயோடுகின்றன.

"கூடை எடுத்தில்ல - நாங்க
கொள்ளி மல பார்த்தில்ல
கூடை எடுக்கலாச்சு - நாங்க
கொழுந்து பல பரிக்கலாச்சு
கொழுந்து கொறஞ்சதின்னு


ATMV முன்னேற்றத்தை நோக்கி அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும் பரவாயில்லை. அடி எடுத்து வையுங்கள்.
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


தொரை பேரு போட்டாக
அருவா எடுத்ததில்ல - நாங்க
அடை மழையும் பார்த்ததில்ல
அரும்பு கொறஞ்சதுன்னு
அரைப் பேரு போட்டாக
பாலும் அடுப்பில பாலகனும் தொட்டிலிலே
பாலகனைப் பெற்றெடுத்த பாண்டியரும் முள்ளுக்குத்த
வேலைக்கு பிந்தினோ வெரட்டிடுவார் கங்காணி
தூங்கடா என் மகனே ஓந்துயரப்பாடி வாரேன்"

என்ற தாலாட்டில் மலையகச்சூழலில் தமிழ் பெண்கள் பட்ட துயரங்களைக்காணலாம்.

வள்ளித்தாலாட்டு, சொக்கர் மீனாள் தாலாட்டு, மாரியம்மன் தாலாட்டு, இராமர்க் கதை தாலாட்டு என பலவகைத் தாலாட்டுக்கள் உண்டு. நாட்டுப் பாடல்களில் தாலாட்டு வகை வென்றது. அழும் குழந்தையும் அதை அரவணைக்க ஒரு அன்புக்குரலும் இருக்கும் வரை தாலாட்டு அழிவதில்லை. தாய்மையின் சீதனமே தாலாட்டுதான்!. நாகரீக உலகம் தாலாட்டுவோர்களை மறந்து விடலாம், மறைத்து விடலாம். ஆனால் தாலாட்டை மறக்க முடியாது, மறக்கவும் கூடாது.

# இரு நபர்கள் தெரியவில்லை யாரென

ஆக்கம் - K. குமரினி
10



வீதி சமிக்ஞையோ
எச்சரிக்கை விளக்கோ
கண்காணிக்க பொலிஸ் உத்தியோகத்தரோ
கடப்பதற்கு மஞ்சள் கடவையோ
எதுவும் இருக்கவில்லை.
தூர இருந்து பார்க்கையில்
அந்த தெருவில்....!

தெளிவாய்த் தெரிந்தது
வெள்ளைக்கலந்த பலுப்பு நிற
ஆடையுடன் ஏதோ இரு உருவங்கள்
பேசிக்கொண்டிருப்பது!
அருகிலே வாகனம் சென்றதற்கான
அறிகுறி எதுவுமில்லை!

சிறிது
உற்றுநோக்கி அருகில்
சென்றப் போதுதான்
தெரிந்தது
அது ஒரு அகோர மயானம் என்பது!
ஆனாலும்
பேசிய
இரு உருவங்கள்
தெரியவில்லை
யாரென!


கடவுள் உலகை எப்படி ஆண்டு வருகிறார் என்பதைப் பார்க்க நான் பத்திரிகைகளைப் படிக்கிறேன். ATMV
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையின் கொடுமை

A. மோகனகுமார்
(ஆசிரியர்)

வானம் கறுக்கிறது, மின்னல் வெடிக்கிறது. மழை பொழிய ஆரம்பிக்கும் வேளையில் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர்கள் விளையாட்டை இடையில் நிறுத்தினார்கள். தமது இல்லங்களை நோக்கி செல்ல சிறுவர்கள் ஓட ஆரம்பிக்கின்றார்கள். அதில் ஒருவன் யோசித்தப்படி நின்று கொணடிருக்கின்றான். அவனே தாய் தந்தை இல்லாமல் பாட்டி வளர்ப்பில் வளர்கிறான்.

மழை பெய்து ஓய்ந்துக் கொண்டிருந்தது. அச்சிறுவன் மெல்ல தனது குடிசைக்கு செல்வதற்கு அங்குமிங்கும் ஆடியப்படி நடக்கின்றான். அவன் உடம்பிலே சிறு துணி மாத்திரம் உண்டு. இவன் தனது குடிசையின் வாசலில் நின்றுக் கொண்டு "ஆச்சி எனக்குப் பசிக்குது. கூழ் தாரியா?" என்றுக் கேட்டான். மழையினால் குடிசையினுள் நிறைந்த நீரை அள்ளிக்கொண்டிருந்த பாத்திரத்துடன் வந்து "இங்கே வா தாரேன்" என்று கோபத்துடன் கத்தினாள். "எனக்கு பசிக்குது. வயிரெல்லாம் எரியுது. சீக்கிரம் கூழ் கொண்டா ஆச்சி" என்று கொஞ்சம் அகஞ்சலாக கூறினான்.

இவன் இவ்வாறு கூறியதும் பழைய சட்டியினுள் கூழை எடுத்துக் கொடுத்து, "இந்தா குடி குடிசசிட்டு மிச்சம் இருந்தால் வை" ஆசையுடன் தன் அழுக்கான கைகளை நீட்டி குடிக்கும் போது கூழிலிருந்து ஓர் துர்நாற்றம் வந்தது. "என்ன ஆச்சி கூழ் நாத்தம் அடிக்குது?" "எங்க பார்ப்போம்" இந்தா பாரு" கூழை முகர்ந்து பார்த்தப் பாட்டி "ஆமாண்டா கெட்டுப் போச்சி என்னா செய்ய கொஞ்சம் இரு கூழ் செய்ரே" இவ்வாறு சொல்லிக் கொண்டே பாட்டி மீண்டும் குடிசையிலுள்ள நீரை அள்ள ஆரம்பித்தாள். அதை ஓலையில் சாய்ந்துப் பார்த்து கொண்டிருந்த சிறுவன் கண்ணயர்ந்தான். இவனை பார்த்து கண்ணீர் மல்கிய கண்களுடன் சிறுவனின் தலையை தழுவி விட்டு பாட்டியும் கண்ணயர்ந்தாள.

இவர்களின் வயிற்றுப் பசியை பார்த்து சேவலும் தன கைகளால் அடித்துக் கொண்டது. பொழுது விடிந்ததை உணர்ந்த சிறுவன் "பாட்டி பாட்டி எழும்பு" என்றான் "உம் உம் இந்தா எழும்புறேன்." என்று கூறிவிட்டு எழும்பியவுடன் அருகிலுள்ள பாத்திரத்தை எடுத்து நீர் குடித்துவிட்டு சிறுவனின் பக்கம் திரும்பினால், "என்ன பாட்டி நீ மட்டும் நேத்து சாப்பிட்டியா? எனக்கு சாப்பாடு இல்லையா?" என்று ஒரு வித மயக்கத்துடன் கேட்ட சிறுவனைப் பார்த்து "என்னடா ஒன்ன விட்டுட்டு நா சாப்பிடுவேனா? "அப்படினா எனக்கு இனனைக்கு என்ன சாப்பாடுத் தரப்போற...." "நா என்னடா தர்றது.... இன்னக்கி பார்வதி அக்கா வீட்ல போய் எதாச்சும் வாங்கி சாப்பிட்டு மிச்சம் மீதி இருந்தால் எனக்கு எடுத்துட்டு வா...." என்றாள் பாட்டி.

"பார்வதி அக்கா...." என்று சத்தம் கேட்டதும் அந்த வீட்டின் கதவுத் திறக்கப்பட்டது. "அடடே நீயா....? வந்துட்டியா வா நீ வருவனு தெரியும் இரு." என்று உள்ளே சென்றவள் ஒரு பாத்திரத்துடன் வந்து "இந்தா நீயும் பாட்டியும் சாப்பிடுங்க" என்றாள். பழைய சோறு என்றுத் தெரிந்தும் அதனை வாங்கிக் கொண்டு உடனே ஓடி விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தன்னுடன் சேர்ந்து இருந்த பாட்டியும் ஓர் நாள் திடிரென இவ்வுலகை விட்டு சென்றாள். குடிசையில் துணைக்குக்கூட ஆளில்லாமல் பாட்டி சொன்னப்படி இன்றைக்கு ஒரு வீடு நாளைக்கு இன்னோர் வீடு என்று தன் வாழ்க்கையை ஓட்டி வருகின்றான்.

# மலையகமும் மலையக கலைகளும்

ஆக்கம்
திருமதி. T. சாந்தலோஜினி (ஆசிரியை)

இயற்கை எழில் நிறைந்த மலையகம் கலைக்கு பெயர் பெற்றதெனலாம். கூத்து, காவடி, கும்மி, கோலாட்டம், அர்ச்சுணன் தபசு, நல்லதங்காள் கதை, பொன்னர்சங்கரி, நாட்டுக்கூத்து, உடுக்கு, தப்பு, உருமி, ஒயிலாட்டம், மயிலாட்டம் என்பனவெல்லாம் மலையகத்தின் மங்காப்புகழ் பெற்ற கலைகளாகும். இந்த கலைகளையெல்லாம் மலையகத்தார் குறிப்பாக தோட்டப்புற வாழ் மக்கள் தங்கள் தோட்டங்களில் மன்றங்கள் அமைத்து வளர்த்தார்கள். அன்று தோட்டத்துக்குள்ளேயும் தோட்டத்துக்குத் தோட்டம் கலைக்குப் போட்டிகளும் அவற்றுக்கு பரிசளிப்பு விழாக்களும் இடம்பெற்றமை அழியாத நினைவுகளை எம்மனதில் நிலை நிறுத்தியுள்ளன.

ஒரு நாள் கூத்துக்காக மீசை இழந்தவர்களும் மொட்டை போட்டவர்களும் மலையகத்தில் ஏராளம், ஏராளம். இன்று சாவு வீட்டில் கொள்ளி வைப்பவர்கள் கூட மொட்டையடிக்கத் தயங்குகிறார்கள் என்ற விடயத்தையும் இங்கு குறிப்பிடத்தான் வேண்டியுள்ளது. இப்படி சம்பிரதாயங்களையே மதிக்காதவர்களின் முன்னோர்கள் கூத்துக்கள் மூலமாகவும் சம்பிரதாயங்களை வளர்த்தார்கள் என்பதை எண்ணிப்பார்க்கும் போது அது பெருமையை உண்டு பண்ணுகிறது.

கலைகளின் மூலம் நமது முன்னோர்கள் தங்கள் தேவைகளை நாசுக்காக கோரிக்கைகளை முன் வைத்தார்கள். தாக்க வேண்டியவர்களை கலையினால் தாக்கினார்கள், புத்திமதி கூறினார்கள். அழும் குழந்தையை சிரிக்க வைத்தார்கள். தூங்காத குழந்தையை தாலாட்டி தூங்க வைத்தார்கள். மரண வீட்டில் தங்கள் சோகத்தை ஒப்பாரிக்கலை மூலம் வெளிக்காட்டினார்கள். வேலைத்தளங்களில் தொழில்பாடல்களைப்பாடி அலுப்பினைப் போக்கிக் கொண்டார்கள்.

பள்ளிக்கூடங்களிலும், தொழில் அமைப்புகளிலும், ஆலய உற்சவங்களிலும், பண்டிகை நாட்களிலும், திருமண வீடுகளிலும், பூப்புனித நீராட்டு விழாக்களிலும், வளைக்காப்பு வைபவங்களிலும், கட்சிக்கூட்டங்களிலும் கலைகள் களிப்பூட்டத்தவறியதில்லை. அதனால் குழந்தைகள் மூலம் முதியவர் வரை கலையார்வம் நிறைந்தவர்களாகக் காணப்பட்டனர். கூச்சமின்றிப் பாடுவார்கள், பேசுவார்கள், கதைப்பார்கள், நடிப்பார்கள், ஆடுவார்கள், அபிநயிப்பார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் கலைகளில் பக்திப்பரவசம் இருந்தது, காதல் இருந்தது, உணர்வு இருந்தது, உருக்கம் இருந்தது, உண்மையில் நல்ல செய்திகளும் இருந்தன. அவை போற்றும் தன்மையுடையனவாகவும் இருந்தன. ஒருவருக்கு சாட்டையடி கொடுப்பனவாயும் இருந்தன. ஒருவரின் தலை நிமிர்த்துவதற்கும் கலை காரணமாய் இருந்தது. கலை மூலம் ஒருவனை வெட்கித்தலை குனிந்து முக்காடு போடவும் செய்தனர் அன்றைய மலையக கலைஞர்கள்.

அப்படி கலை வளர்த்தவர்களில் பலர் இலங்கை அரசின் அரசியல் தீர்வுச்சட்டத்தின் பிரகாரம் தாய்நாடுத் திரும்பி விட்டனர். பலர் மாண்டு மடிந்து விட்டனர். அவர்களின் சந்ததியாராகிய நாம் என்ன செய்கின்றோம்? என்பதுதான் இன்றையக் கேள்வி. எங்கே எமது கலைகள்? எங்கே எமது கலாசாரம்? எங்கே எமது சம்பிரதாயங்கள்? எல்லாவற்றிற்கும் கேள்வி குறிதான் இன்று வியப்புகுறியாகின்றது.

நாகரீக பொருளாதார நிலை வேலைப்பலு தொலைக்காட்சி, வீடியோ, சினிமா, மோகம், தப்பான அபிப்ராயம், கலையார்வமின்மை இவையணைத்தும் எமது இளைய சமுதாயத்தின் மத்தியில் ஆக்கிரமிப்பு செய்து அவர்களை திசைத்திருப்பிக் கொண்டிருக்கின்றது. களியாட்டம் என்ற பெயரில் மதுவுக்கும் , மணவாழ்க்கைக்கும் தங்களை அடிமையாக்கிக் கொள்ளத்துடிக்கிறார்கள்.

கலையென்றால் கெசட், ரேடியோ பொத்தனை அழுத்திவிட்டப்பின் எழும் பாட்டுக்கு ஆடுவது என நினைக்கின்றனர். பள்ளிக்கூடங்களில், கோவில்களில், பண்டிகைகளின் போது திருமணங்களில் கட்சிக்கூட்டங்களில் மாத்திரம் என்ன அங்கும் இந்த ஒலிநாடாப்பாடல்களை ஒலிபெருக்கி மூலம் காதுகள் கிழியப் போடுவதே நாகரீகமாகிவிட்டது. இந்தப்பாடல்களுக்கு சினிமா நட்சத்திங்களைப் போல் அரைகுரையாக ஆணும் பெண்களும் ஆடுவது "ஒளி ஒலி" கலை நிகழ்ச்சியாகிவிட்டது. மலையகம் கலைகளை மறந்து எங்கோ சென்றுக் கொண்டிருக்கின்றது.

அரசாங்கம் தமிழ் அமைச்சையே மறந்து விட்டது. அதனால் தமிழ் கலைகளே அழிந்து விடும் நிலையில் மலையக தமிழ் கலைகளில் அரசு எப்படி அக்கறை செலுத்த முடியும். எனவே இளைய மலையகம் அழியும் கலைகளை அரங்கிற்கு கொண்டு வரவேண்டும். அப்படி அரங்கேற்றும் கலைகள் அரசுக்கும், மக்களுக்கும் நல்ல பாடங்களைப் புகட்ட வேண்டும். கலையின் மகிமையையும், மகத்துவத்தையும் மக்கள் அறிந்திடச் செய்தல் வேண்டும். அப்படி ஒரு நிலை தோன்றுமானால் அன்று மலையகம் புத்துணர்வு பெறும் என்பது உறுதி.

"மலையென உயர்வோம் கலை வளர்த்தே
வாழிய மலையகம் கலையுடனே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2015

# உலகின் முதல் நிகழ்வுகள்

ஆக்கம்
K. நிஷாந்தியா - தரம் 10

அறிவியல் தொழினுட்பம்

- அமெரிக்காவின் ஜனாதிபதி தேர்தல் நவம்பர் மாத முதல் வாரத்தில் நடாத்தப்படும்.
- உலகின் முதலாவது அணுகுண்டு "லிட்டில் போய்" ஹிரோஷிமா நகர் மீது வீசப்பட்டது - 1945

அரசியல் அரசாங்கம்

- அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி - ஜோர்ஜ் வாஷிங்டன்
- பிரிட்டனின் முதல் பிரதமர் - ரொபர்ட் வால்போல் (1721)
- பெண்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்கிய முதல் நாடு - நியூசிலாந்து
- இந்திய மாநிலங்களின் முதல் பெண் முதல்வர் - சுசேதா கிருபாளனி
- இந்திய மாநிலங்களின் முதல் பெண் கவர்ணர் - சரோஜினி நாயுடு
- வருமான வரியை அறவிட்ட உலகின் 1வது நாடு - இங்கிலாந்து

இலக்கியம்

- முதல் தமிழ் நாவல் - பிரதா முதலியார் சரித்திரம்
- உலகின் முதல் தொலைக்காட்சி சேவை - பி.பி.சி (1936)
- உலகின் முதல் sms - "mery christmas" (1992)
- உலகின் முதல் முத்திரை - penny black 1840 விக்டோரியா மகாராணி உருவம்

சாதக சாதனை

- தன்னந்தனியாக ஒரே தடவையில் அட்லாண்டிக் பெருங்கடலைப் பறந்து கடந்த முதல் மனிதர் - லிண்டபர்க்
- உலகின் ஏழு கடலையும் நீந்திக்கடந்த முதல் பெண்மணி - பீலா சௌதரி (2004)
- ஒலியை விடவும் அதிவேகத்தில் நீந்திக் கடந்த முதல் மனிதர் -கார்லஸ் எல்வுட் சக் ஈகர் (1947)
- எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் தம்பதிகள் - ஆன்ட்ரெஜ் & மரிஜா (ஸ்லோவேனியா 1990)
- எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் குருடர் - எரிக் வெய்ன்மேயர்
- உலகில் 14 உயரமான மலைகளிலும் ஏறிய முதல் பெண்மணி - ஓ யூன் சன் (தென் கொரியா 2010)
- எவரெஸ்ட் சிகரத்தில் உயிரிழந்த பெண்மணி - ஹரியத் குயிம்பி






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


*With Best Compliments From:*


# I. K. R. M. Nithiya Electronic
# &
# Furnitures













Fordyce Road
Glenlyon Bazzar,
Agarapatana

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# புன்னகையுடன் விடை பெறுவோம்.

௦௧. "உங்களுக்கு முன்னாடியே உங்க பையன் சிகரட் பிடிக்கிறானே சார்,"
"சீ சீ அவன் பிடிக்கிறதுக்கு ரொம்ப நாள் முன்னாடியே நான் ஆரம்பிச்சுட்டேன;"



௦௨. "ஏம்பா திடீர்னு ரேடியோல சவுண்ட கம்மி பண்ணிட்டே?,"

"சவுண்ட கம்மி பண்ணலைங்க. நான்தான் முடி வெட்டும்போது தெரியாம உங்க காது கட் பண்ணிட்டேன்.



௦௩. கணவர்: காஃபி ரொம்ப ஸ்ட்ராங்கா இருக்கே என்ன போட்ட?"

மனைவி: ஒரு ஸ்பூன் சிமெண்ட் போட்டேன்

௦௪. நோயாளி: "டோக்டர் வயித்து வலி என்னால பொறுக்க முடியல."

டோக்டர்: "வயிறு வலிக்கும் போது ஏ ன் நீங்க பொறுக்க போறீங்க?"



05 போலீஸ்: இப்படி ஊர் சொத்தை எல்லாம் கொள்ளை அடிக்கிறியே, உனக்கு கொஞ்சம் கூட வெட்கம் இல்லையா?

திருடன்: அதுக்குத்தான் ஐயா முகமூடி போட்டுக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பரிசுகள் விருதுகள்

பாரத் ரத்னா விருது பெற்ற முதல் அயல் நாட்டவர் - கான் அப்துல் கபார்கான் (1987)
பாரத ரத்னா விருது பெற்ற முதல் பெண்மணி - இந்திரா காந்தி
முதல் மிஸ் யுனிவதுஸ் - அர்மி குசெலா (பின்லாந்து 1952)
முதல் யுனிவர்ஸ் பட்டம் பெற்ற இந்தியப் பெண்மணி - ரெஸ்டா ஸ்பாரியா (1966)

### மருத்துவம்

- உலகில் முதல் இரத்த மாற்று சிகிச்சை அளித்தவர் - டாக்டர் ரிச்சர்டு லோவார் - ஆங்கில மருத்துவர் (1966)
- உலகின் முதல் பால் மாற்று சிகிச்சை செய்த மருத்துவர் - ஜோர்ஜ் ஜோர்ஜென்சந் (1952)
- இந்தியாவின் முதல் பெண் பிரதமர் - காதம்பனி கங்குலி (1886)

### விண்வெளி

- உலகின் முதல் விண்வெளி சுற்றுலாப் பயணி - அனௌஷா அன்சாரி (2006)
- விண்வெளியில் நடந்த முதல் பெண்மணி - ஸ்வெட்லேனா சவிட்ஸ்கயா (1984)
- விண்வெளி சென்ற முதல் பெண்மணி - கல்பனா சாவ்லா (1997)
- விண்வெளியில் நடந்த முதல் மனிதர் - அலெக்ஸி அர்கோவிந் லியோனோவ் (1965)

### விளையாட்டு

- ஒலிம்பிக் போட்டியை நடத்திய முதல் ஆசிய நகரம் - டோக்கியோ (1964)
- இந்தியாவில் முதல் கிரிக்கட் கப்டன் - சி.கே. நாயுடு
- சர்வதேச கிரிக்கட் போட்டியில் 30,000 ரன்களைக் கடந்த உலகின் முதல் பேட்ஸ்மென் - சச்சின் டெண்டுல்க்கர் (2009)
- ஒரு நாள் போட்டியில் இரண்டு சதமடித்து முதல் கிரிக்கெட் வீரர் - சச்சின் டென்டுல்க்கர் (2010)
- உலகின் முதல் உலக செஸ் சாம்பியன் - வில்ஹெலம் ஸ்டெய்னிட்ஸ் (1986)
- நான்கு நிமிடங்களுக்கும் குறைவான நேரத்தில் ஒரு மைல் தூரத்தை ஓடிக் கடந்த உலகின் முதல் மனிதர் - சர் ரோகர் பானிஸ்டர், பிரிட்டிஸ் தடகள வீரர் 1954)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கட் மைதானங்கள்

ஆக்கம் - K. திருப்பிரியா 10^A

| மைதானம் | அமைவிடம் |
| --- | --- |
| லோட்ஸ் | லண்டன் |
| ஈடன் கார்டன் | கொல்கத்தா |
| வான்கடே மைதானம் | மும்பை |
| சின்னசாமி மைதானம் | பெங்களூர் |
| எம். ஏ. சிதம்பரம் மைதானம் | சென்னை |
| ப்ரோபோன் மைதானம் | மும்பை |
| சர்தார் படேல் மைதானம் | அகமதாபாத் |
| இல்கங்கா மைதானம் | பெர்த் (அவுஸ்திரேலியா) |
| கடாபி மைதானம் | லாஹீர் (பாகிஸ்தான்) |
| பிரேமதாச மைதானம் | கொழும்பு (இலங்கை) |
| செஞ்சூரியன் பார்க் | பிரிட்டோரியா (தென்னாபிரிக்கா) |
| ஸெபீனா பாரக் | ஜமைக்கா (மேற்கிந்தியா) |
| பான்டரேஸ் மைதானம் | கொஹைறன்னஸ்பர்க் |
| எம்ஸிஜி | மெல்பேர்ன் (அவுஸ்திரேலியா) |

# இலங்கையின் கனிய வளங்கள்

ஆக்கம்
M. தஜஷினி

பூமியில் இருந்து பெறப்படும் ஒரு வகை இயற்கை வள்மே கனியம் எனச் சொல்லப்படும் கனியங்கள் பல வகைப்படும். குறித்த ஒரு வகை கனியம் ஓர் இடத்தில் ஏராளமாகக் காணப்படும் போது அது ஒரு படிவு எனப்படும். கனியங்கள் படிவங்களாக காணப்படும் போதே அவற்றுக்குப் பொருளாதாரப் பெறுமதி உண்டு. மனிதனுடைய தேவைகளுக்கும் பயன் படக்கூடிய கனியங்களில் ஏறத்தாழ 2,000 வகைகள் இதுவரை கண்டுப்படிக்கப்பட்டுள்ளன. இவற்றுள்ளே சில கனியங்கள் பெறுமதி மிக்கவை. வேற நில கனியங்கள் பெறுமதி குறைந்தவை.

பெறுமதி மிக்க கனியங்களுக்கு பொண, இரத்தினக்கற்கள், புரேனியம் டினபவை உதாரணங்களாகும். களிமண், சுண்ணாம்புக்கல், காரியம் என்பவற்றைப் பெறுமதி குறைந்த கனியங்களுக்கு உதாரணங்களாக கூறலாம். இந்த இரு வகையான கனியங்களும் இலங்கையில் உள்ளன. இந்த இரு வகயைான கனிய வளங்கள் உள் நாட்டுத் தேவைக்கு உபயோகிக்கப்படுகின்றன. அதே வேளை சில கனியங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவை எங்கள் நாட்டிற்கு வருமானத்தை ஈட்டித்தருகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுடைய அன்றாடத் தேவைகளுக்கு பயன்படும் கனியங்களிலே களிமண் முக்கியமான ஓர் இத்தை வகிக்கின்றது. வீடு கட்டுவதற்குத் தேவையான ஓடுகளும் செங்கற்களும் களிமண்ணினாலே செய்யப்படுகின்றன. அன்றியும் உணவு சமைப்பதற்கு தேவைப்படும் சட்டி பானை போன்றவற்றை செய்வதற்கும் களிமண்ணே உபயோகிக்கப்படுகின்றது.

காரீயம்

நீங்கள் உபயோகிக்கும் பென்சில் இருந்து செய்யப்பட்டது என்பது உங்களுக்கு தெரியுமா? வெளியே மரத்தால் செய்யப்பட்ட உறை ஒன்று இருப்பினும், உள்ளே இருக்கம் எழுதம் பகுதி காரீயக் கலவையால் செய்யப்பட்டது.

காரீயம் இலங்கையில் காணப்படும் மற்றொரு பயன் உள்ள கனியம் ஆகும். இலங்கையில் பல பிரதேசங்களில் மென்மைத் தன்மை வாய்ந்த காரீயம் காணப்படுகின்றது. இது இலகுவாக்கப் பொடியாக்கப்படக் கூடியது. உருவெண்வெல்லைக்கு அண்மையில் உள்ள கஹடகஹா, கொலன்கஹா சுரங்கங்களும் பிரசித்தி பெற்றவை.

இரத்தினக்கற்கள்

இரத்தினக்கற்கள் அல்லது இரத்தினக்கற்கள் பதிந்த மோதிரங்களையும் மாலைகளையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். பல்வேறு நிறங்கள் உள்ள இரத்தினக்கற்கள் இலங்கையில் காணப்படுகின்றன. இரத்தினம் பெறுமதி மிக்க ஒரு வகைக் கனியமாகும். வைதுாரியம், புஷ்பராகம், மாணிக்கம், நீலம், பசுந்தி, நுதிமல் ஆகியன இலங்கையின் இரத்தினப்படிவுகளிலிருந்து கிடைக்கும் சில இரத்தினக்கற்களாகும்.

சுண்ணாம்பு

இலங்கையின் கனிய வளங்களுள் அடங்கும் இன்னொர் கனியம் சுண்ணாம்புக்கல் ஆகும். இலங்கை படத்திலே புத்தளத்திலிருந்து முல்லைத்தீவு வரையும் ஒரு கோடு வரைந்தால் அக்கோட்டுக்கு வடக்கே இருக்கும் பகுதியே இலங்கையின் பரதான சுண்ணாம்புக்கற் பிரதேசமாகும். இது தவிர நாளந்தை, பலாங்கொடை, பதுளை ஆகிய பிரதேசங்களிலும் ஒரு வகை சுண்ணாம்புக்கல் காணப்படுகின்றது. முருகை என்று சொல்லப்ப் மற்றொரு வகை சுண்ணாம்புக்கல் அம்பலாங்கொடையில் இருந்து மாத்தறை வரையும் உள்ள கடற்கரைப் பரப்பிலே காணப்படுகின்றது.

இலங்கையின் பிரதான கனியங்கள்:-

களிமண், உப்பு, காரீயம், இரத்தினக்கல், கனிய மணல், சுண்ணாம்பு கல்போன்றவை பிரதான கனியங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியும் ஆங்கிலக்கல்வியின் மகத்துவமும்

ஆக்கம்
N. பவளிஷா

ஒருவர் இந்த உலகில் பெறுகிற அறிவு, அனுபவம், ஆற்றல் ஆகியவற்றின் தொகுப்பே கல்வி ஆகும். ஒருவர் பெறுகிற கல்வி அவரது ஆளுமைக்கும் (Personality), ஆற்றலுக்கும் (Skills), அடித்தளமாக இருந்து அவரின் ஒவ்வொரு செயலையும் சிறப்பாக செய்ய வழி அமைக்கும் ஆளுபவரின் பிள்ளையாக இருந்தாலும் கூட ஆசிரியருக்கு முன் அவர் ஒரு மாணவர்தான் என்பதற்கு மாற்று கருத்தில்லை.

பெற்றோர்களுக்கு அடுத்த படியாக ஆசிரியர் உள்ளார். மக்களின் வணக்கத்திற்குரியவராய் ஆசிரியர் கருதப்படுகின்றார்.

இன்றைய சூழலில் அறிவியல் கண்டுப்பிடிப்புக்கள், தொழினுட்ப செறிவு, சுருங்கிப் போன உலகம்,பொருளாதார வளர்ச்சி போன்ற காரணிகளால் கல்வி என்பதற்கான கருத்துக்கள் வெகுவாக மாறியுள்ளன. ஆனால் இன்றைய சூழலில் தொடக்கக் கல்விக்கே பெரும் பொருள் செலவு செய்ய வேண்டியுள்ளது. கல்வி தனியாருக்கான பொருளீட்டும் வழிகளில் ஒன்றாக மாற்றப்பட்டுள்ளது. தற்போது நாம் கல்வியின் பெருமையை நோக்கினோம். ஆனால் அடுத்ததாக கல்வியில் மிக முக்கியமானக ஆங்கிலக் கல்வியை பற்றி நோக்க உள்ளோம்.

இந்த உலகம் முழுவதும் வாழும் சுமார் 100 கோடி மக்கள் 2ம் மொழியாக ஆங்கிலத்தை பேசுகிறார்கள். இன்றைய வர்த்தக உலகில், ஆங்கிலத்தில் அளவிட முடியாததாக உள்ளது. இந்தியா போன்ற நாடுகளில் ஆங்கிலத்தில் சரளமாக பேச மற்றும் எழுத தெரிந்திருக்கவே வேண்டும் என்ற ஆர்வமுடைய இளைஞர்களுக்கு அளவேயில்லை.

அவர்கள் பலவிதமான வழிகளை, அதன் பொருட்டு முயற்சித்து பார்க்கிறார்கள். சிலர் வெற்றி பெறுகிறார்கள். பலர் தோல்வியடைகிறார்கள். வெற்றியடைந்தவர்கள் எப்படி சாதித்தனர்? தோல்வியடைந்தோர் எதனால் தேரல்வியடைந்தனர்? என்பதற்கான காரணங்கள் போன்றவற்றை அறிதல் நல்லது. ஆங்கிலத்தினை சிறப்பாக மேம்படுத்திக் கொள்வதற்கான முக்கிய செயல்முறைகளைப் பற்றி புரிந்தால் பேருதவியாக இருக்கும்.

அவையாவன இலக்கு நிர்ணயித்தல், ஆங்கிலத்தில் பேசுதல், சிறப்பாக கவனித்தல், உங்களுக்குள் நீங்களே பேசிக் கொள்ளுதல், ஆங்கில மேம்பாட்டிற்கான சில எளிய ஆலோசனைகளாகும். இவற்றை தினமும் பயிற்சி செய்தால் நாம் ஆங்கிலக் கல்வியில் உச்ச நிலையை அடையலாம்.

ஆங்கில மேம்பாட்டிற்கான சில ஆலோசனைகள்: -

ஒரு நாளைக்கு ஒரு வார்த்தை கற்றல்.
உங்களின் குரலை பதிவு செய்தல்
விளையாட்டுக்களின் மூலம் ஆங்கிலம் கற்றல்
ஆங்கிலத்தில் சிந்தனை செய்தல்.
சத்தமாக படித்தல் போன்ற ஆலோசனைகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கையில் நூலின்றி
ஆறுதலாய் உட்கார்ந்திருக்கும் என்னை
நூதனமாய் பார்த்தவாறே செல்பவர்களுக்கு
எங்கே தெரியப்போகிறது.
நான் தாய்மடி தேடி வந்த கன்று என்று."

கல்வி என்பது மாணவர்களுக்கு அடிப்படை அறிவை தந்து அவர்களின் ஆற்றலை வளர்க்க உதவ வேண்டும் என்பது அறிஞர்களின் உள்ளக்கிடக்கை. இதனையே கல்வியாளர்களும், கல்விக்கூடங்களும், கல்வி அதிகாரிகளும், கல்வித் துறை சார்ந்த அனைவரும் நெஞ்சில் நிறுத்தி செயற்படுத்த வேண்டும்.

எனவே, மாணவர்களாகிய நாமும் "கல்வி என்பது மூன்று எழுத்து அதை கற்கவோ பல எழுத்து" என்பதை கருத்திற் கொண்டு ஆங்கிலக் கல்வியை சிறப்பாக கற்று எமது அறிவை மேம்பட செய்வோம். ஆங்கிலம் ஒரு சர்வதேச மொழி.

## எமது நாடு எதிர் நோக்கும் பிரச்சினைகள்.

ஆத்தம்
ப. சசிக்கலா 10

உலகிலே செல்வம் உள்ள நாடுகள் இருக்கின்றன. அது போலவே செல்வமில்லாத வறிய நாடுகளும் இருக்கின்றன. இந்நாடுகள் உவ்வொன்றும் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றன. குடி மக்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் போது இப்பிரச்சினை எழுகின்றன. நமது குடும்பங்களிலும் பல்வேறு பிரச்சினைகள் உள்ளது. இது போலவே எமது நாடான இலங்கையும் சில பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியுள்ளது. இவற்றுள் உணவு, நிலம், தொழில். சனத்தொகை இவற்றுள் முக்கியமானதாகும்.

உணவு:-

உலகின் உள்ள பல நாடுகளைப் போன்று இலங்கையிலும் உணவுப்பிரச்சினை் நிலவுகின்றது. ஒரு நாட்டில் அந்நாட்டு மக்களுக்கு தேவையான உணவு இல்லாவிடின் அந்நாட்டில் உணவு பிரச்சினை இருக்கக்கூடும். உணவு உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தைக் காட்டிலும் சனத்தொகை வளர்ச்சியின் வீதம் குறைவாக இருக்கின்றது. இதுவே முக்கியப் பிரச்சினை ஏற்படுவதற்கான முக்கிய காரணம். உணவுற்பத்தியை மென் மேலும் பெருக்குவதே உணவு பிரச்சினைக்கு முக்கிய பிரச்சினையாகும்.

நிலப்பிரச்சினை:-

இலங்கை சிறிய நாடு ஒன்று. இதன் பரப்பளவு 65,610 சதுரkm காடுகள், கட்டடங்கள், வீதிகள், பயிரிடத்தக்க நிலம், தரிசு நிலம் ஆறுகள் ஆகியன இந்த நிலப்பரப்பில் அடங்கும் சனத்தொகை அதிகரிக்கும் பொழுது நிலப்பிரச்சினையும் அதிகரிக்கின்றது. சனத்தொனை அதிகரித்த போதிலும் நிலத்தின் நில்த்தின் அளவு அதிகரிப்பதில்லை மேலும் காணி மரபுரிமை முறைமையின் பிரகாரம் ஒருவருக்கு சொந்தமான காணித்துண்டாடப் படுகிறது. அதனாலே ஒருவருக்கு கிடைக்கின்ற காணியின் அளவு சிறிதாகிக் கொண்டே போகின்றது. உதாரணமாக 1901 ஒருவருக்கு ஏறக் குறைய 73 ஏக்கர் காணி இருந்தது. 1946 இல் ஒருவருக்குக் கிடைத்த காணியின் அளவு 39 ஏக்கர் குறைந்தது. 1981 இல் இது மேலும் குறைந்து 17 ஏக்கர் காணியாயிற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனைப் பெறத்தக்க விதத்தில் நிலத்தை பயன்படுத்துவதன் மூலம் நிலப்பிரச்சனையின் கடுமையான தாக்கத்தை குறைக்கலாம் வளமாக்கிகளை தாராளமாக உபயோகிப்பது, மண்வளத்தை பாதுகாப்பது, ஒரே காணியில் இரண்டு/மூன்று போகங்களில் பயிர்செய்வது முதலியவற்றால் நிலத்தில் இருந்து பூரணமான பயனைப பெற முடியும். சனத்தொகை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதன் மூலம் நிலப்பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு காண முடியும்.

## உலகில் பளு தூக்கும் வீரர்கள்

ஆக்கம் - Y.குணேஸ்வரி 10A

சாணி உருட்டி வண்டானது தனது உடல் நிறையைப் போல 1,141 மடங்கு நிறையை இழுத்துச் செல்லும் ஆற்றலுடையது. பரிமாணத்தின் அடிப்படையில் மனிதன் ஒருவன் இரட்டைத் தட்டு பேருந்துகள் ஆறினை இழுத்துச் செல்வதற்கு இது சமனாகும்.

இலை உண்ணி எலும்புகளுக்குத் தமது உடலின் நிறையைப் போல 50 மடங்கு நிறையை தூக்கிச் செல்ல முடியும்.

கொரில்லா குரங்கிற்கு 4,600 இறாத்தல் அதாவது, தனது நிறையை விட 10 மடங்கு நிறையைச் சுமந்து செல்ல முடியும்.

ஆபிரிக்கக் கொண்டை கழுகுக்கு 36 இறாத்தல், அதாவது, தனது நிறையை விட நான்கு மடங்கு நிறையைத் தூக்கிக் கொண்டு பறக்க முடியும்.

மனிதனுக்கு உலகின் அதிசக்தி வாய்ந்த 290 இறாத்தல் அதாவது தனது நிறையை விட 2.3 மடங்கு நிறையை தூக்க முடியும்.

ஒரு யானைக்கு 20,000 இறாத்தல் அதாவது தனது நிறையை விட 1.7 மடங்கு நிறையை சுமந்து கொண்டு செல்ல முடியும்.

மாட்டுக்கு 2,000 இறாத்தல் சுமையை அதாவது தன்து நிறையை விட 1.5 மடங்கு நிறையை எடுத்துச் செல்ல முடியும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொழில் புரட்சியின் கதை

ஆக்கம்
இ. மதுஷா 10



அன்றிருந்த உலகில் திடீர் மாற்றம் ஏற்பட்டு, உலகம் புதிய பாதையில் பயணத்தை தொடர்வதற்கு வழிவகுத்தது கைத்தொழில் புரட்சி ஆகும். மனிதன் இரு கைகளின் சக்தியால் மேற்கொண்ட பல்வேறு தொழில்களை கைகளுக்குப் பதிலாக இயந்திரங்கள் மூலமாக செய்ய ஆரம்பித்ததே "கைத்தொழில் புரட்சி" எனப்படும்.

**ஆரம்பம்:-**

கைத்தொழில் புரட்சி பிரித்தானியாவிலே ஆரம்பமாகியது. அதற்கு முன்னர் இங்கிலாந்து அடிப்படையில் ஒரு விவசாய நாடாகவே இருந்தது. எனினும் புரட்சிக்கு முன்பதாகவே இங்கிலாந்து வர்த்தகத் துறையில் படிமுறை வளர்ச்சியைக் கண்டிருந்தது. இதற்கு பல காரணங்கள் இருந்தன. அவற்றில் சில வருமாறு:

- மூலப்பொருட்களை இலகுவாக பெறக்கூடியதாக இருந்தமை.
- வங்கி முறையில் பாரிய வளர்ச்சி கண்டிருந்தமை.
- புதிய தொழில்சார் வர்த்தகமொன்று தோன்றியமை.
- தேவைக்கு மிகுதியான தொழில் வசதிகளும் மிதமிஞ்சிய மூலதனமும் இருந்தமை.
- கடல் கடந்த குடியேற்றங்களும் அங்கிருந்த மேலதிக மூலப்பொருட்களைப் பெறும் வசிகளும் இருந்தமை.
- இரும்பு போன்ற இயற்கை வளம் மிகுந்த நாடாக பிரித்தானியா திகழ்ந்தமை.

**கைத்தொழில் புரட்சியின் முக்கியத் தன்மைகள்:-**

1. ஆடைத்தொழிற்சாலைகள் :-

கைத்தொழிற் புரட்சியானது ஆரம்பத்தில் நெசவுத் தொழிலுக்கு வரையறுக்கப்பட்டிருந்தது. 1733ல் ஜோன் கே. என்பவரால் "பறக்கும் நூனாழி" எனும் கருவி கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக நெசவுத் தொழில் முயற்சியில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக நெசவு நெய்தலில் வேகம் அதிகரிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1761 இல் ஜேம்ஸ் ஹாக்ரீவ்ஸ் என்பவர் "ஹபினங் ஜென்" எனும் நூல் நூற்கும் கருவியை

2. இரும்பு இரும்புருக்குக் கைத்தொழில் :-

கைத்தொழில் புரட்சியில் அடுத்ததாக இரும்பும் இரும்புருக்குக் கைத்தொழிலும் செல்வாக்கு செலுத்தியது. 18ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தில் இரும்பு சிறிதளவே பயன் படுத்தப்பட்டது. 1856 இல் ஹென்றி இரும்பு உற்பத்திக்கு இலாபம் தரக்கூடியதும் மிக விரைவானதுமான புதிய முறையொன்றினைக் கண்டறிந்தார். அத்தோடு இயந்திரங்களை உற்பத்தி செய்ய இரும்பு மற்றும் நிலக்கரியை பயன்படுத்த ஆரம்பித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தொடர்ந்து பிரித்தானியாவில் ஷெப்பிலிட், பர்மிங்ஹம், மெஞ்செஸ்டர், லிவர்பூல், லண்டன் போன்ற பல நகரங்களில் புடவைக் கைத்தொழிலை போன்றே தகரக் கைத்தொழிலும் பாரிய அளவில் மேற்கொள்ளப்படலாயிற்று.

3. நிலக்கரிக் கைத்தொழில்:-

நிவ்கொமன் மற்றும் ஜேம்ஸ் வொட் நீராவி இயந்திரம் வடிவமைப்பு:-

தொழிற்புரட்சிக்கு ஆதாரம் நீராவி இயந்திரமே. இந்தக் கருவிகள் ஏனைய இயந்திரங்களின் அபிவிருத்திக்கு வழி வகுத்தது. நீராவியால் இயங்கும் முதலாவது இயந்திரத்தைக் கண்டுப்பிடித்தவர் தோமஸ் நிவ்கொமன் ஆவார். இதனை அவர் நீரிறைக்கவே பயன்படுத்தினார். இதன் போது அதிக எரிப்பொருள் விரயமானவைப் பெரும் பிரச்சினையாக இருந்தது. ஆனால் சில வருடங்களின் பின் ஜேம்ஸ் வொட் குறைந்த எரிபொருள் செலவில் அதிக சக்தி வாய்ந்த நீராவி இயந்திரம் ஒன்றைக்கண்டுப் பிடித்தார். இதனால் 1769 இல் ஜேம்ஸ் வொட் அவர்களுக்கு அரசாங்கத்தால் விஷேட காப்புரிமைப் பத்திரம் வழங்கப்பட்டது.

போக்குவரத்து துறையில் புரட்சி:-

கைத்தொழிற்சாலைகளில் வேகமாகவும் பெருந்தொகையாகவும் நுகர்வுப்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இவற்றை நாடு பூராகவும் உள்ள விநியோக நிலையங்களுக்கு மிக விரைவாக அனுப்பி வைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனைக் கருத்திற் கொண்டு 1807 இல் அமெரிக்கரான ரொபர்ட் புல்டன் "க்லெர்மொன்ட்" எனும் நீராவிப் படகுகளை உற்பத்தி செய்தார். 1838 இல் சமுத்திரத்தில் பயணிக்கும் "சிரியுஸ;" எனும் நீராவிப் படகு 18 நாட்களில் அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்தது. அவ்வாறே பொருளியலாளரான ஜோர்ஜ் ஸ்டீவென்சன் நீராவிச் சக்தியால் இயங்கும் "ரொக்கட்" எனும் புகையிரதத்தை 1814 இல் உருவாக்கினர். முதலாவது புகையிரதப் பாதையை அவர் அமைத்தார். 1830 - 1870 ஆம் காலக்கட்டத்தில் பிரித்தானியாவில் 15,000 மைல் தூரத்திற்குப் புகையிரத் பாதைகள் அமைக்கபட்டன.

மெக்கலம் பெருந் தெருக்கள் அபிவிருத்தி :-

பெருந் தெருக்கள் மற்றும் கால்வாய் அமைத்து போக்குவரத்தை அபிவிருத்தி செய்வதில் பிரான்ஸ் முன்னிலை வகித்தது. தொடர்ந்து ஐக்கிய அமெரிக்காவில் ஆறுகளையும் எரிகளையும் இணைத்து நீர்வழிப் போக்குவரத்துகள் உருவாகின. அங்கு ஆறுகள் மூலம் பொருட்களைக் கொண்டு செல்லும் முறை வளர்ச்சி அடைந்திருந்தது. பிரித்தானியரான மெக்கலம் என்னும் பொறியியலாளர் நவீன விஞ்ஞான முறையைப் பயன்படுத்தி கூடிய உயரமும் பலமான அத்திவாரத்துடனான பெருந் தெருக்களை அமைத்தார். இதன் பின்னர் அந்த வீதிகளினூடாக வாகனங்கள் இலகுவாகவும் வேகமாகவும் பயணித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியாவில் கைத் தொழிற்சாலைகள் :-

நீராவியில் இயங்கும் இயந்திரங்கள் உள்ளிட்ட பல்வேறு இயந்திரங்கள் உற்பத்தி செய்யப்பட்டதைத் தொடர்ந்து பிரித்தானியாவில் கைத்தொழிற் துறையில் பல புரட்சிகர மாற்றங்கள் ஏற்பட்டன. பெருந்தொகைப் பணம் கொடுத்து இயந்திரங்களை வாங்கவும் அதன் மூலம் கைத்தொழில் உற்பத்திகளை ஆரம்பிக்கும் பிரித்தானிய செல்வந்தர்கள் முற்பட்டனர்.

இதன் காரணமாக இத் தொழிற்சாலைகளில் வேலை செய்த தொழிலாளர்களுக்கு மிக குறைவான சம்பளமே வழங்கப்பட்டது. இயந்திர மயமாக்கத்தால் கிராமங்களில் குடிசைக் கைத்தொழில்களில் ஈடுபட்டவர்கள் பின்னர் வேலையற்ற நிலைக்குள் தள்ளப்பட்டு வேலைத் தேடி நகரங்களை நோக்கி நகரலாயினர். அங்குள்ள தொழிற்சாலைகளில் வேலையைப் பெற்றதோடு அத்தொழிற்சாலைகளின் வேலைத்தளத்திற்கு அருகிலேயே குடிசைகளை அமைத்து வாழலாயினர். இதனால் தொழிற்சாலைகள் அமைந்த நகரங்கள் காலப்போக்கில் ஜனத்திரள் நிறைந்த பாரிய நகரங்களாக மாறின.

தொடர்பாடல் முறையில் புரட்சி :-

விரைவாக செய்திகளை அனுப்புவதற்காக 1844 இல் அமெரிக்கரான சாமுவேல் மோர்ஸ் என்பவரால் தந்திச் செய்தி முறை அறிமுகப்படுத்தப் பட்டது. அதன் மூலம் மின் கம்பி வழியாக செய்திகள் அனுப்பப்பட்டன. இதனையடுத்து மனிதனின் குரல் மின் கம்பி ஊடாக ஒரு முனையிலிருந்து மற்றொரு முனையில் இருக்கும் ஒருவரை சென்றடைவதற்காக தொலைபேசி விஞ்ஞான தொழில் நுட்பத்தை 1876 இல் அலக்சாண்டர் கிரஹம் பெல் அறிமுகப்படுத்தினார்.

அடுத்து அட்லான்டிக் சமுத்திரத்தினூடாக கடலுக்கு அடியில் இங்கிலாந்திற்கும் ஐரோப்பா கண்டத்தின் ஏனைய நாடுகளுக்கும் "கேபல்" முறையின் மூலம் 1880 இல் டபிள்யூ பீல்ட் என்பவர் இணைப்பை ஏற்படுத்தி சாதனைப் புரிந்தார். வானொலி அலைகள் மூலம் செய்திகளை அனுப்பும் முறையை 1899 இல் மெக்கோ என்பவர் கண்டறிந்தார். இதனை அடிப்படையாகக் கொண்ட வானொலி, தொலைக்காட்சி சாதனங்கள் பின்னர் அறிமுகப்படுத்தப் பட்டன.

கைத் தொழில் புரட்சியின் முக்கியத்துவம்:-

புராதன யுகத்தில் இருந்து மனித சமுதாயம் நவீன யுகத்திற்கு காலடி வைத்தமையானது கைத்தொழில் புரட்சியின் மிக முக்கிய நிகழ்வாகும். மனிதன் தனது அன்றாட செயற்பாடுகளை துரிதமாகவும் வினைத்திறன் மிகுந்ததாகவும் மிக இலகுவானதானவும் பரிணாமமிக்க இப்புரட்சி வழிகோலியது. புதிய இயந்திரங்களின் உருவாக்கத்திற்கும் புதிய எரிபொருள் சக்தியில் இயங்கும் இயந்திரங்களின் மூலம் தேவைகளை விரைவாக நிறைவு செய்யவும் பெருந்தொயையான பொருட்களை உற்பத்தி செய்யவும் மிதமிஞ்சிய உற்பத்திகளை விற்கவும் தலைப்பட்டனர். இதனால் இரத்தம் சிந்தா புரட்சியாகிய கைத்தொழில் புரட்சி ஆரம்பித்த இங்கிலாந்தில் செல்வம் பெருகி மக்களிக் வாழ்க்கை மட்டம் உயர்ந்தது. அத்துடன் போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் அபிவிருத்தியோடு புதிய சமூகப்பண்பாட்டு விழுமியங்களைக் கட்டியெழுப்பும் விடயத்தில் மனிதர் பூரண வெற்றி பெற்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழில் புரட்சியின் பரம்பல் :-

கைத்தொழிற் புரட்சி தோன்றிய பிரித்தானியாவில் இருந்து அது ஐரோப்பா கண்டம் முழுவதும் பரவியது. பிரான்சிலும் அது தாக்கம் அதிகமாயினும் நெப்போலியனின் யுத்தம் காரணமாக தற்காலிகமாக அது நிறுத்தப்பட்டது. நெப்போலியனின் வீழ்ச்சியின் பின் மீண்டும் தொழிற்புரட்சி ஐரோப்பா எங்கும் பரவியது. 19ம் நூற்றாண்டின் இறுதியில் ஐக்கிய அமெரிக்கா உலக வல்லரசாகப் பரிணமித்தது. பிரித்தானிய குடியேற்ற நாடாக இருந்த வேளையில் இந்தியாவிலும் கைத்தொழில் புரட்சியின் கண்டுப்பிடிப்புக்கள் பயன்படுத்தப்பட்டன. "டெல்ஹவுஸ்" எனும் புகையிரத முறையும் தந்திச் சேவையும்இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட நவீன கண்டுப்பிடிப்புக்களில் சிலவாகும். 19ம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் கைத்தொழிற் புரட்சியின் விளைவுகளை விரைவாக உள்வாங்கிய ஆசிய நாடு ஜப்பான் ஆகும். மேற்கத்தேய முறைகளையும் தமது சுய அறிவையும் பயன்படுத்தியதோடு இறுதியில் விஞ்ஞான தொழில்நுட்பத்துறையில் வியத்தகு சாதனைமிகு நாடாக எழுச்சி பெற்றது.

## CP/N/Agarapatana Tamil M.V
## G.C.E. A/L results summary - Arts 2014

| Subject | Sub. No | No of Sit | Pass | A | B | C | S | W | Percentage | Subject Teacher |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Tamil | 72 | 17 | 16 | - | 1 | 06 | 09 | 01 | 94.11% | Mr.R.Dharmaraj |
| Political Science | 23 | 17 | 15 | - | 1 | 07 | 07 | 02 | 88.23% | Mr.K.Kumaravel |
| Geography | 22 | 17 | 10 | - | - | 03 | 07 | 07 | 53.10% | Mr.B.Logendran |
| General English | 18 | 17 | 03 | - | - | - | 03 | 14 | 17.87% | Mr.K.Thiyagaraj |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CP/N/Agarapatana Tamil Maha Vidyalayam
## G.C.E. O/L results summary - $11^{A}$ & $11^{B}$ 2014

| No. | Subject | A | B | C | S | W | Sat | Pass | % | Subject Teacher |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Tamil | 06 | 08 | 03 | 01 | - | 18 | 18 | 100 | Mrs.P.Shanthalogini |
| 2 | Saivanery | 05 | 07 | 05 | 01 | - | 18 | 18 | 100 | Mr.K.Kumaravel |
| 3 | History | 11 | 06 | 01 | - | - | 18 | 18 | 100 | Mr.B.Logendran |
| 4 | English | - | 01 | 01 | 11 | 05 | 18 | 13 | 72.22 | Mr.K.Thiyagaraj |
| 5 | Maths | 01 | 02 | 08 | 04 | 03 | 18 | 15 | 83.33 | Mr.A.Charles |
| 6 | Science | - | - | 03 | 11 | 04 | 18 | 14 | 77.77 | Mr.K.Arulraj |
| 7 | Geography | 01 | 02 | 02 | 02 | 01 | 08 | 07 | 87.5 | Mrs.S.Sridevi |
| 8 | Civics | - | - | 03 | 03 | - | 06 | 06 | 100 | Mr.R.Yogendran |
| 9 | Commerce | - | - | 03 | 01 | - | 04 | 04 | 100 | Mr.M.Yogeshwaran |
| 10 | Tamil Lit. | 01 | 01 | 01 | - | 01 | 04 | 03 | 75 | Mr.R.Dharmaraj |
| 11 | Music | 01 | - | 01 | - | - | 02 | 02 | 100 | Mrs.B.Nirmala |
| 12 | Art | - | 04 | 07 | - | - | 11 | 11 | 100 | Mr.S.Pragash |
| 13 | H.P.T | 06 | 07 | 03 | - | - | 16 | 16 | 100 | Mr.S.Dickneshwaran |
| 14 | ICT | - | - | 01 | - | - | 01 | 01 | 100 | Mr.V.Vijaynath |
| 15 | H. Science | - | - | 01 | - | - | 01 | 01 | 100 | Mrs.B.Kalaimani |

| No. | Subject | A | B | C | S | W | Sat | Pass | % | Subject Teacher |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Tamil | 01 | 11 | 02 | - | - | 14 | 14 | 100 | Mrs.P.Shanthalogini |
| 2 | Saivanery | 03 | 07 | 03 | - | - | 13 | 13 | 100 | Mr.K.Kumaravel |
| 3 | Islam | - | - | 01 | - | - | 01 | 01 | 100 | Mrs.T.J.Fazeena |
| 4 | History | 05 | 04 | 05 | - | - | 14 | 14 | 100 | Mrs.S.Sridevi |
| 5 | English | - | - | 01 | 07 | 06 | 14 | 08 | 57.4 | Mrs.S.Sharmila |
| 6 | Maths | - | - | 01 | 08 | 05 | 14 | 09 | 64.2 | Mr.A.Sebastian |
| 7 | Science | - | - | - | 05 | 09 | 14 | 05 | 35.71 | Mrs.W.Krishanthini |
| 8 | Geography | 01 | 03 | 05 | 01 | - | 10 | 10 | 100 | Mrs.S.Sridevi |
| 9 | Civics | - | - | 02 | 02 | - | 04 | 04 | 100 | Mr.M.Yogrndran |
| 10 | Tamil Lit. | - | 02 | 01 | 01 | - | 04 | 04 | 100 | Mr.D.Dharmaraj |
| 11 | Dance | - | - | 01 | - | - | 01 | 01 | 100 | Mrs.P.Arulraj |
| 12 | H.P.T | 03 | 06 | 02 | - | - | 11 | 11 | 100 | Mr.S.Dickneshwaran |
| 13 | Art | 07 | 01 | 01 | - | - | 09 | 09 | 100 | Mr.S.Prasath |
| 14 | Agri Culture | - | - | 02 | - | - | 02 | 02 | 100 | Mr.K.Devakumar |
| 15 | H. Science | - | - | 01 | | - | 01 | 01 | 100 | Mrs.B.Kalaimani |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CP/N/Agarapatana T. M. V

## G.C.E. O/L results summary - $11^{C}$ 2014

| No. | Subject | A | B | C | S | W | Sat | Pass | % | Subject Teacher |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Tamil | 06 | 03 | 06 | - | - | 15 | 15 | 100 | Mr. D. Vijayasiri |
| 2 | Religion | 03 | 01 | 03 | 03 | - | 10 | 10 | 100 | Mr. K. Kumaravel |
| 3 | R.C. | 05 | - | - | - | - | 05 | 05 | 100 | Mrs. T. Mary |
| 4 | History | 08 | 01 | 05 | 01 | - | 15 | 15 | 100 | Mr. R. Yogendran |
| 5 | English | - | - | 01 | 05 | 09 | 15 | 06 | 40 | Mrs. T.J. Fazeena |
| 6 | Maths | - | - | 12 | - | 03 | 15 | 12 | 80 | Mr. S. Justin |
| 7 | Science | - | 01 | 04 | 09 | 01 | 15 | 14 | 93.3 | Mr. K.Arulraj |
| 8 | Agriculture | - | - | 03 | - | - | 04 | 04 | 100 | Mr. K. Devakumar |
| 9 | Civics | - | 02 | 06 | 03 | - | 11 | 11 | 100 | Mr.R.Yogendran |
| 10 | Commerce | 01 | 01 | 02 | - | - | 04 | 04 | 100 | Mr. M. Yogeshwaran |
| 11 | Tamil Literature | - | 02 | 03 | 02 | - | 07 | 07 | 100 | Mr. Dharmaraj |
| 12 | Music | - | 01 | - | - | - | 01 | 01 | 100 | Mrs. B. Nirmala |
| 13 | Dance | 01 | 02 | - | - | - | 03 | 03 | 100 | Mrs. P. Arulmoli |
| 14 | Art | - | 01 | 01 | 02 | - | 04 | 04 | 100 | Mrs. P. Pragash |
| 15 | H.P.T | 04 | 01 | - | - | - | 05 | 05 | 100 | Mr. P. Dickneshwaran. |
| 16 | Home Science | - | - | 04 | 02 | - | 06 | 06 | 100 | B. Kalaimani |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*



# AVP Gunarathna
# Portmore Traders





**Dayagama Road**

**✆ 051 3526909**

இந்த உலகத்தில் பிறந்த
அனைவருக்கும் வரலாற்றின்
பக்கங்களில் ஒரு பக்கம்
ஒதுக்கப்பட்டுள்ளது.
ஆனால் அந்த பக்கத்தை இந்த
உலகையே படிக்க வைப்பது
உங்கள் கைகளில் தான் உள்ளது.

\- அப்துல் கலாம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*



# Yogarani Textiles

**Dealers in Textiles & Fancy Item**





**No.30, Main Street, Agrapatana.**

**Tel: 051 2230297**

---

*With Best Compliments From:*

# RATHTHRAN

#16, Ground Floor,
Colombo Gold Center, Pettah,
Sri Lanka.
Tel: +94 11 24444614 / 11 2444615

---

*With Best Compliments From:*

# NDO Jewellery

**Dealers in 22 Carat Genuine old Jewellery**

**No. 157/B6, Sea Street,**
**Colombo 11**
**Tel: 011 2322636 Mob: 077 4892805**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்த புத்திசாலித்தனத்தை பெறுவது எப்படி?

ஆக்கம்
K. தேவகுமார் - ஆசிரியர்

இன்றைய சமூகம் அறிவுக்கே முக்கியத்துவத்தை கொடுக்கிறது. அதனால்தான் பாடசாலைகளும் பல்கலைகழகங்களும் மாணவர்களுக்கு அறிவை பெற்றுக் கொடுப்பதில் அக்கறை செலுத்துகின்றன.

ஒவ்வொரு குழந்தையும் பிறக்கும் போது 100% புத்திசாலி தனத்துடன் பிறப்பதாகவும் அதனை சமூகமே அழிப்பதாகவும் அறிஞர் ஒருவர் குறிப்பிடுகிறார். இதனால்தான் அறிவில் சிறந்தவர்கள் கூட பல சமயங்களில் சரியான முடிவுகளை எடுப்பதில் சிரமப்படுகிறார்கள். அத்தோடு இக்காலத்தில் தற்கொலைகளின் வீதம் அதிகரிப்பதற்கும் புத்திசாலித்தனம் குறைந்து சென்றதுதான் ஆகும்.

இவ்வாறு நாம் இழந்த நமது புத்திசாலிதனத்தை பெறுவது எப்படி என பார்ப்போம். நாம் பிறந்தது முதல் இந்நிமிடம் வரை நமது மனது ஏதாவது ஒன்றை பற்றி ஓய்வின்றி நினைத்து இயங்கிக் கொண்டே இருக்கிறது. இதனாலேயே நமது புத்திசாலிதனம் குறைந்து சென்று விட்டது.

இவ்வாறு இயங்கி கொண்டிருக்கும் மனதிற்கு ஓய்வை வழங்குவதன் மூலம் நாம் இழந்த புத்திசாலி தனத்தை பெறலாம். இது ஆரம்பத்தில் கடினமாக இருந்தாலும் தொடர்ச்சியான பயிற்சிகள் மூலம் நாம் நமது மனதில் எதை பற்றியும் சிந்திக்காமல் சில (அன்றாடம்) நிமிடங்கள் இருப்பதன் மூலம் நமது புத்திசாலி தனத்தை பெற்றுக் கொள்ளலாம்.

# உங்களுக்கு தெரியுமா?

ஆக்கம்
R. அருள்ராஜ் - ஆசிரியர்

நாளொன்றில் புவிக்கு கிடைக்கும் சூரிய சக்தியின் அளவு உலகின் 50 வருடங்களுக்கான சக்தி தேவையின் அளவுக்குச் சமமானதாகும். ஒரு செக்கனுக்கு சூரியனிலிருந்து 1800 000 000J சக்தி வெளிவிடப்படுகின்றன. இச்சக்தியால் 0.02% த்தையே தாவரங்கள் தனது ஒளித்தொகுப்பு தேவைக்கு பயன்படுத்துகின்றன.

உலகில் அருகிவரும் / அழியும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள உயிரினங்கள் பற்றிய தரவுகளை (Red data book) செந்தரவுப்புத்தகம் மூலம் அறியலாம். இதனை ஒவ்வொரு வருடமும் TUCN (International Union of Conservation of Nature) வெளியிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நிலைக்காப்பு:-

பாதுகாக்கப்பட்ட பிரதேசம் — சிங்கராஜவனம்

தேசிய பூங்கா — யால, வில்பத்து, வாஸ்கமுவ

சரணாலயங்கள் — பந்துல, முத்துராஜா


வெளிநிலைகாப்பு செய்யுமிடம்:-

தாவரப்பூங்கா — பேராதனை, ஹெக்கல, ஹெனெரத்கொட

மிருக்காட்சி சாலை — தெஹிவலை

பிறப்புரிமை முலவய நிலையம் — கன்னொருவ

# ஈழத்தில் தோன்றிய ஆரம்பகால தமிழ் நாவல்கள் பற்றிய விளக்கம்.



ஆக்கம்
K. தர்ஷிகா
10

19 ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 20ம் நூற்றாண்டின் முற்பகுதி வரை ஈழத்தில் தோன்றிய தமிழ் நாவல்களை ஆரம்பகால தமிழ் நாவல்கள் எனலாம். சித்திலைப்பை எழுதிய அசன்பேயின் கதை (1885) ஈழத்தின் முதல் தமிழ் நாவலாக கொள்ளப்படுகின்றது. இது மிஸர்தேசத்து உயர்குல குமாரனின் வாழ்க்கை நிகழ்ச்சியூடாக இஸ்லாமிய கலாசாரத்தின் பெருமையை கூறுகின்றது. இந்நாவல் வெளிவந்த 10 ஆண்டுகளின் பின் த. சரவணமுத்துப் பிள்ளை எழுதிய மோகனாங்கி எனும் நாவல் வெளிவந்தது. இது தஞ்சைநாயக்கர் வரலாற்றில் இடம்பெறும் ஒரு சிறு சம்பவத்தைக் கருவாக வைத்து கற்பனை கலந்து எழுதப்பட்டது. வசனத்தில் அமைந்த நீண்ட கதைகளாக அமைந்த இவை நாவல் என்ற நவீன இலக்கியத்தின் பண்புகளைப் பெற்றிருக்கவில்லை. சி. வை. சின்னையா பிள்ளையின் விஜய சீலம் 1915 வீரசிங்கன்கதை அல்லது சன்மார்க்க விஜயம். 1905 உதிரபாகம் அல்லது இரத்தினபவானி 1915 ஆகிய நாவல்களும் இவ்வாரம்ப கால கட்டத்தில் வெளிவந்தன.

இவற்றை நாவல்கள் என்பதை விட ரொமான்ஸ் என கூறுவதே பொருத்தம். ஆனால் 1915 இன் பின்னர் அதிகளவு சமூக நிலைமைகளை கவனித்து கொள்ளும் போக்கு நாவல் உலகில் அரும்ப தொடங்குகின்றது. பாத்திர உருவாக்கம், பாத்திர உரையாடல், கதைப்பின்னல் முதலானவற்றில் ஆசிரியர்கள் கவனம் செலுத்தாவிடினும் அக்கால சமூக நிலமைகள் சமூகத்தில் நிலவிய கருத்தோட்டங்கள் என்பவற்றை இந்நாவல்கள் பிரதிபலித்தன. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நிலவிய சமய சாதி முரண்பாடுகளை முன் வைத்து நாவல்கள் எழுதப்பட்டன. சைவ கிறிஸ்தவ முரண்பாடுகளை வேளாள - பிறசாதி முரண்பாடுகள் முதலியன இந்நாவல்களில் முக்கியம் பெற்றன. மங்களா நாயகம், தம்பையாவின் நொருங்குண்ட இருதயம் (1914) தேம்பாவர் (1929) தம்பி முத்து பிள்ளையின் சந்திரன் செய்த தந்திரம் (1918) மாவை திருஞான சம்ந்த பிள்ளையார் தாசிநாதன் நேசமலர் 1924 கோபாலநேசரத்தினம். 1927 தரைரத்தினம் நேசமணி 1927 இடைக்காடரின் நீலகண்டன் அல்லது ஒரு சாதி வேளாளன் ஆகியவை இப்பண்புக்கு உதாரணமாகும். நொருங்குண்ட இருதயம் மட்டுமன்றி பெண்ணின் மன உணர்வும் முதன் முதல் முக்கியத்துவம் பெற்றது இந்நாவல்கள் யதார்த்தத்தை பேசினாலும் சிறந்த யதார்த்தவாத நாவல்களுக்கு உதாரணமாக அமையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# What is Life?

By: Mrs. Sharmila
Teacher

When I woke up this morning
I asked my self
"What is life about ?"
I found the answer in my room......

The fan said, "Be Cool"
The roof said, "Aim high"
The window said, "see the world"
The clock said, "Every minute is precious"
The mirror said, 'Reflect before you act"
The calendar said "Be up to date"
The door said, "Push hard for your goals"
The floor said, "Kneel down and pray!"

# சிறைச்சாலை

ஆக்கம்
ஜீ. தயாளன் - ஆசிரியை

செய்யாத தவறுக்கு
தண்டனையா?
ஏன் இறவைா பல
குடும்பங்களின் நிலைதான்
என்ன?
ஏழை குழந்தைகளின்
கண்ணீர் என்றோ – ஒரு நாள்
சுனாமியாக உருவெடுக்குமா.........


பாவங்கள் பல செய்த
பண்டிதர்கள் - சுதந்திரப்
பறவைகளாய் பல
இடத்தில் ஆனால்
கணவனை இழந்த
மனைவியை தவிக்கவிட்ட
உண்மை உள்ளங்கள்
இன்னும் வாடுகிறார்கள்
சொகுசு அறையென
எண்ணியப்படி
சிறைச்சாலையில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FOOD



P. Anujah
10

Food gives us energy. We eat vegetables, fruits grains, **meat, nuts, and fish. What** foods do you eat?

Food can be cooked in different ways, or eaten raw. People have different tastes. Some eat a lot and others don't. Some eat meat, other don't. It does not usually matter how much you eat. It is important that you eat enough of the right kinds of food. All the systems of your body need food. When you do anything you use up energy even when you are not doing anything, your body keeps working. Your stomach is digesting food, your brain is thinking, your lungs are breathing.

Foods certain the different nutrients needed by the body. Some foods help you to grow, some give you energy. When you eat all the proper foods, We say you have a balanced diet. A balanced diet keeps you healthy.

We can divide foods into different groups according to what they do for the body.

Proteins - These give you energy and also help to build you up and make you grow, they enable your body to replace dead cells.... ( meat, beans, curd, eggs )

Dietary Fibre - Dietary fibre is the part of food you cannot digest. It has no food value, but helps to move the waste through the digestive systems. ( fruits, vegetables, brown bread )

Carbohydrates - These are the main energy - giving foods. If you are working or running about a lot, you neat carbohydrates to give you energy. Too little will make you tired: too much will make you fat ( cereals, chocolate, bread )

Fats - fats give you energy. They help to keep the body warm. You don't need much fats to keep healthy, but you do need some. ( butter, nuts, vegetable, oil )

Minerals - These are needed in small amounts by various parts of the body. Iron, Calcium, Phosphorus, iodine and salt are some minerals tht you need. Some of these are found in liver, eggs, cereals, milk, cheese, vegetables and fruits.

Vitamins - These are chemicals which your body needs in small amounts, vitamins keep your bones and skin healthy. They help your eyesight, give you energy and prevent infection. they also help wounds to heat. We hve vitamins A, B, C, D and K vitamin D is made by the skin in sun light. ( sun, fish, eggs, tomato, vegetables, orange, bread )

Water - Every human needs water to live. The amount of water needed varies from person to person. The average amount is between 02 and 03 litres per day. If you are very cvtive and live in a hot climate, You will need more water.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான அறிவியல் பற்றிய பொதுவான தகவல்கள்

ஆக்கம் - F. அகனியா 10A

| | |
|---|---|
| முதன் முதல் மருத்துவமனைகள் தோன்றிய நாடு - | இத்தாலி ரோம் |
| ஐதரா என்பது - | 114 அங்குல நீளமான நீர் விலங்கு |
| இதய மாற்றுச் சிகிச்சையை முதன் முதலில் மேற்கொண்டவர் - | Dr. கிறிஸ்ரியன் பேனாட் (தென்னாபிரிக்கா) |
| இரத்த சுற்றோட்டம் பற்றி விளக்கியர் - | வில்லியம் ஹார்வே. |
| 1 Unit இரத்தம் என்பது - | 350 ml |
| மனித உடலின் நீரின் வீதம் - | 70% |
| பிரதான வாயுவுக்கு ஒட்சிசன் எனப் பெயரிட்டவர் - | லாவோசியர் |
| பச்சை நிறத்தில் பட்டாசு வெடிக்க உபயோகிக்கப்படும் வேதிப் பொருள் - | பேரியம் |
| எவர் நீரை குடிநீராக மாற்றும் வேதிப் பொருள் - | செலினியம் |
| மிகவும் கடினமான உலோகம் - | ஆஸ்மியம் |
| BCC என்பதை குறிக்கும் நோய் - | புற்று நோய் |
| சுவாசிக்காமல் உயிர் வாழும் உயிரினம் - | ஈஸ்ட் |
| ஒளி புகக்கூடிய ஒரே உலோகம் - | மைக்கா |
| செயற்கை மழை பொழிவதற்கான இரசாயனப் பொருள் - | சில்வர் அயோடைட் |
| புது வகையான டிசைன்களை உருவாக்க - | கலைடாஸ்கோப் |
| எக்ஸ்ரேயைக் கண்டுப்பிடித்தவர் - | ரண்ட்ஜன் |
| பற்றீரியாக்களை கண்டறிந்தவர் - | லீவன் காத் |
| போலியோ நோய் அதிகமுள்ள நாடு - | இந்தியா |
| புகைப் பிடிக்காதவர்கள் உள்ள நாடு - | பூட்டான் |
| அணுக்கரு உற்பத்தி ஆலை ஒன்றின் ஆயுட்காலம் - | 40 வருடங்கள் |
| ஓசோன் படையை பாதுகாக்க ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை - | மொன்றியல் |
| பென்சிலின் உள்ளே இருக்கும் லெட் தயாரிக்கப்படும் மூலப் பொருள் - | கிராபைட் |
| நவீன தனிம வரிசை - | அட்டவணை மோஸ்லேவால் உருவாக்கப்பட்டுள்ளது. |
| உயிரை காப்பாற்றும் உலோகம் - | ரேடியம் |
| தானாகப் பற்றி எரியும் உலோகம் - | பொஸ்பரஸ் |
| தாவரங்கள் பச்சை நிறமாக தோன்ற காரணமான பொருள் - | குளொரொபில் |
| இலைகளுக்கு நிறம் தருவது - | அயோடின் |
| பச்சை நிறமாக உள்ள வாயு - | குளோரின் |
| இரத்த ஓட்ட முறையை கண்டறிந்தவர் - | ஹார்வி |
| இரத்த மாற்ற முறையை அறிமுகப்படுத்தியவர் - | லாண்ட் ஸ்ரெஜினா |
| மின் சக்தியால் நோயைக் குணமாக்கும் முறையை கண்டறிந்தவர் - | கல்வாணி |
| செயற்கை இதயத்தை கண்டறிந்தவர் - | மைக்கல் டி பேக்ஜே |
| மயிரிழை என்பது - | 0.5mm |
| இரசத்தின் அளவு - | 13600kgm-3 |
| வானவில் ஏற்படக்காரணம் - | ஒளிப்பிரிகை |
| ஒற்றை நிற ஒளிக்கற்றுகளை உருவாக்கியவர் - | லேசர் |

1000 கணடுப்பிடிப்புக்களை மேற்கொண்ட தோமஸ் அல்வா எடிசனுக்கு காது கேட்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையே நீ வாழ்க

ஆக்கம்
N. அபிலாஷினி - 11 A



சிற்பி செதுக்காத பொற்சிலையே — என்
சித்தத்துக்குள் சத்தமில்லா சங்கீத
நாட்காலியில் சாய்ந்துக் கொண்டு
நிம்மதியாய் இருக்கின்ற நீலக்கடலே!

நீதானா என் சூரியோதயம்
வைகரையில் வாரியணைத்து
வாஞ்சையோடு முலைப்பாலூட்டி
முத்தம் தரும் சத்தம் சங்கீதமே — நின்
வாடா வதனம், வாடா மல்லிகை சோலையம்மா!

நிலாச் சோறு தந்தவளே — நீ
இன்னும் உண்ணவில்லையா? என
நிமிர்ந்துப் பார்த்தால்....
அதற்கும் ஒரு புன்னகை பதில்!

கன்னத்தில் நீ தந்த முத்தம்
நித்தம் இனிக்கிறது
துணியிலே நான் துயில — நீ
சொன்ன தாலாட்டு — என்
வாழ்நாள் முழுக்க வரலாற்றுப் பதிவுகள்
என் சின்ன சின்ன சிணுங்கல்களுக்கும்
ஆழிப் பேரலையாய் ஆடிப்போவாயம்மா

கருவறைக்குள்ளே எனை
கண்ணியமாய் கண்காணித்த — உன்
உடல் தந்த ஊக்கத்தால்
உலாவும் ஒரு நொடியும்
உனது சொந்தமே!

இறைவா! இன்னும் ஒரு சந்தர்ப்பம் கொடு
ஈரேழு ஜென்மங்களும் என் தாய் மடியில்
தாலாட்டு கேட்க
என் தாய்க்கு சாகாவரம் கொடு
மகளாய்.........
பலகோடி பணிவிடைகள் செய்ய
இன்னும் பாக்கி இருக்கிறது.


பாடிக்கொண்டே மகிழ்ச்சியுடன் வேலை செய்பவனை எனக்குக் கொடுங்கள். ATMV

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கிறேன்

பேசும் என்றென்றும் சாஸ்வதமாய், இதமாய், சுகமாய்,
இத்தகு தடத்தொகுப்பின் அவசியம் உணர்த்தி எம்மை வேகமாக இயக்கமுறச் செய்த இப்பாடசாலையின் கலங்கரை விளக்கம் மதிப்பிற்குரிய முதல்வர் A. ஹரிச்சந்திரன் அவர்கள் காலத்தில் செய்த உதவிகள் என்றும் மறந்துவிட முடியாதவை. முதற்கண் அவருக்கு என் நன்றிகள்.

இக்கால யாத்திரையில் வழித்துணையாய் வந்து, நாம் இடறிய போது தட்டிக்கொடுத்ததோடு தகுந்த ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கிய பொறுப்பாசிரியர் S. டிக்னேஸ்வரன் அவர்களுக்கு மீண்டும் என் உளங்களிந்த நன்றி மலர்களை தூவுவதில் மகிழ்கின்றேன்.

இக் கலை பொக்கிஷம் நம் கரங்களில் தவழ தேவையான தகவல்களையும் உதவிகளையும் கேட்ட போதெல்லாம் இன் முகத்துடன் எமக்கு தந்துதவிய பாடசாலையின் சகல ஆசிரியர்களுக்கும் என் ராஜ நன்றிகள்.

இதழுக்கான புகைப்படங்களை திறம்பட எடுத்துத்தந்த ஆசிரியர் J. செந்தமிழ் செல்வன், ஆசிரியர் V. விஜயநாத் அவர்களுக்கும் நூல் ஒழுங்கமைப்புக்கான காத்திரமான ஆலோசனைகளை வழங்கிய ஆசிரியர்களான M. சிவராஜ், R.தர்மராஜ் அவர்களுக்கும் ஆக்கங்களை செம்மைப்படுத்தி நிறைவு செய்து தந்த J. பபியான் (அக்கரபத்தனை த.வி - ஆரம்பபிரிவு) அவர்களுக்கும், கணணி வடிவமைப்பு செய்த S. கிருஷா மற்றும் நூலினை அச்சடித்து முழுமையாக்கி தந்த S.T.இராமகிருஷ்ணன் (J. P) ( Krishna Printers உரிமையாளர்) அவர்களுக்கும் பெயர் குறிப்பிடாத சகலருக்கும் என் மனப்பூர்வமான நன்றிகளை தெரிவிக்கின்றேன

"படைப்பாக்கத்தின் ஆத்மார்த்தம் மரணம் வென்றது" அதன் எழுகைக்குதவும் சிறு புழுவும் சிறு காற்றும் புயலும் ஏன் ஒன்றுமற்றதும் கூட ஓராயிரமாய் அதற்கு உதவலாம்.

அவ்வகையில் எல்லா இருள் வெளிகளுக்கும் என் நன்றிகள்.
மீண்டும் சந்திப்போம்; புரிந்துணர்வுடனும், சிறு புன்னகையுடனும்!



உங்கள்,
இதயங்கவர் இதழாசிரியர்,
S. இந்துஜா
03.12.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









**Printed By :**
**Krishna Printers,**
**44A, Green Lane, Kotahena, Colombo 13.**
**Hotline : 072 8952386**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org